Registered as a News Paper

பக்கம் - 20

# ஈழநாதம்

விலை: 15.00

வெள்ளிநாதம் Weekly

நாதம்-15 வெள்ளி-10 30-06 மே 2004



ஈழநாதம்
வெள்ளிநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி 30 . 04 . 2004
மின் அஞ்சல : weekly @ eezhanatham.com

# துர்க்குறிகள்!

சமாதான முயற்சியினைத் தொடர்வதற்காக சனாதிபதி சந்திரிகா நோர்வேக்கு விடுத்த அழைப்பை அடுத்து சமாதான முயற்சிகள் தொடர்பான எதிர்பார்ப்பு மீண்டும் எழுந்துள்ளது.

ஆனால், சனாதிபதி சந்திரிகாவின் இந்த அழைப்பு உண்மையில் சமாதான நடவடிக்கைகளை இதய சுத்தியுடன் அவர் முன்னெடுப்பதற்கான அழைப்புத்தானா என்பது தொடர்பாக பலமான ஐயங்களும் நம்பிக்கையீனங்களுமே தென்படுகின்றன.

காரணம, சமாதான முயற்சிகளை முன்னெடுக்கக்கூடியவாறான சமிக்ஞைகளுக்குப் பதிலாக சமாதான முயற்சிகளுக்கு தீங்கினை ஏற்படுத்தக்கூடிய துர்க்குறிகளே அதிகமாகக் காணப்படுகிறது.

ஏனென்றால் சனாதிபதி சந்திரிகாவின் தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசின் நடவடிக்கைகள் எந்த வகையிலும் சமாதான முயற்சிகள் தொடர்பான நம்பிக்கைகளை ஏற்படுத்தவில்லை.

பதிலாக, சமாதான முயற்சிகளுக்கு ஊறு விழைவிக்கக்கூடிய வகையிலேயே அதன் செயற்பாடுகள் அமைந்து வருகிறது.

சமாதான முன்முயற்சிகள் முன்னெடுக்கப்படவேண்டுமானால் சனநாயக ரீதியாகவும் படைபல ரீதியாகவும் புலிகள் தம்மை தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் புலிகள் தான் என்பதை நிரூபணமாக்கிய பின்னரும் கூட இந்த அரசு புலிகளை ஏகப்பிரதிநிதிகளாக ஏற்றுக்கொண்டு சமாதானப் பேச்சுக்களை தொடப் போகிறதா என்பதை இன்னமும் தெளிவுபடுத்தவில்லை.

அத்தோடு வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் முதலாவது வெளிநாட்டுப்பயணம் சமாதான முயற்சிகளுக்கு பின்புலமாக இருந்துவரும் ஐரோப்பிய நாட்டிற்கான ஒரு பயணமாக அன்றி சிறிலங்காவுக்கு போரியல் நடவடிக்கைகளுக்கு பெரிதும் உதவிய நாடுகளின் பட்டியலிலேயே இருந்து வரும் சீனா மற்றும் இந்தியா போன்ற நாடுகளுக்கான பயணமாகவே மேற்கொண்டுள்ளார் இது இந்த அரசின் முதலாவது அமைச்சரவைமட்ட வெளிநாட்டுப் பயணமென்ற வகையில் பல சந்தேகங்களை ஏற்படுத்தவே செய்கின்றது.

மேலும் புலிகள் இயக்கத்தால் வெளியேற்றப்பட்ட கருணாவிற்கு இராணுவ பாதுகாப்பினை வழங்கி அவருக்கு தஞ்சமளித்திருப்பதுடன், புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்குள் ஊடுருவித் தாக்குதல் மேற்கொள்ள வழிவகைகளை சிறிலங்கா இராணுவத்தரப்பு செய்துள்ளது. இதற்கு முப்படைகளின் தளபதியும், பாதுகாப்பு அமைச்சரும் என்றவகையில் சனாதிபதி சந்திரிகாவின் அனுமதியின்றி இது மேற்கொள்ளப்பட்டிருக்குமா என்ற சந்தேகத்தையும் தோற்றுவிக்கிறது.

இவ்வாறு சமாதான முயற்சிகளுக்கு எதிரான காரியங்களே பிரகாசமாகத் தென்படும் அதேவேளை சனாதிபதி சந்திரிகாவை சூழ சமாதானத்தின் விரோதிகளே பங்காளிகளாகவும் உள்ளனர்.

தமிழ் மக்களால் புறந்தள்ளப்பட்ட டக்ளஸ் தேவானந்தாவிற்கு அமைச்சுப் பொறுப்பை வழங்கி அருகில் வைத்துக் கொண்டும்.

சமாதானப் பேச்சுக்கள் தொடர்பாக ஆரம்பம் முதலே முறண்பாடாக பேசிவரும் ஜே.வி.பி.மற்றும் ஹெல உறுமய போன்றவர்களை அரவணைத்துக் கொண்டும் சந்திரிகா காணப்படுகின்றார்.

உண்மையில் ஜே.வி.பி.க்கும் ஹெல உறுமயவுக்கும் இடையில் ஆட்சி தொடர்பாக இரு வேறு நிலைப்பாடுகள் காணப்பட்டாலும் இவ்விரு கட்சிகளும் சமாதான முயற்சிகள் தொடர்பாக விரோதமான ஒரே நிலைப்பாட்டைத் தான் கொண்டிருக்கின்றன.

ஆரம்பத்தில் தான் ஜே.வி.பி.யின் போக்கில் சமாதானத்திற்கு விரோதமான போக்கு கடைப்பிடிக்கப்பட்டதென்றாலும் பின்னர் அரசமை[illegible]க்கப்பட்ட பின்னர் கூட ஜே.வி.பி.யின் போக்கில் மாற்றம் எவையும் இல்லாது அப்படியே தொடர்கிறது.

இந்த நிலையில் சந்திரிகா புலிகள் இயக்கம் தெரிவித்தது போன்று ஒரு ஸ்திரமான அரசையும் கொண்டிராது தன்னைச் சூழ சமாதானத்தின் விரோதிகளையும் வைத்துக்கொண்டு சமாதானத்திற்கான அழைப்பை விடுத்திருக்கின்றார் ஆனால் சந்திரிகாவின் சமாதானத்திற்கான அழைப்பிற்கு முன்னரும் பின்னருமான நடவடிக்கைகள் சமாதானத்துக்கு எதிரான துர்க்குறிகளாகவே காணப்படுகிறது. ●

## தூரனின் பார்வையில்

# சந்திரிகாவை நம்பி சமாதானம் செய்யலாமா?

கதிர்காமா மீண்டும் வெளியுறவு அமைச்சர் ஆக்கப்பட்ட பின்னர் மீண்டும் தனது சர்வதேச திக்விஜயத்தை ஆரம்பித்துவிட்டார்.

முன்னரெல்லாம் அவரது திக்விஜயத்தின் நோக்கம் விடுதலைப் புலிகளை பயங்கரவாதிகள் என்று நம்பவைக்கவும், இனப்பரச்சினையை பயங்கரவாதப் பிரச்சினை என்று எடுத்துக்கூறி பிரசாரம் செய்வதை இலட்சியமாகக் கொண்டதாகவுமே அமைந்திருந்தது.

ஆனால் இம்முறை இவரது திக்விஜயத்தின் உள் நோக்கம் எதுவோ அது இரகசியமான ஒன்றாகவும் இருக்காலாம்.. வெளிப்படையாகக் கூறப்படும் காரணம் சமாதான முயற்சிகள் தொடர்பான அரசின் நிலைப்பாட்டை விளக்குவதற்காக என்பதேயாகும்.

இதற்காக இவர் முதலில் புதுடில்லிக்குப் பயணமாகியுள்ளார் என்பதை கவனத்திற் கொள்வது அவசியமாகும்.

புதிய அரசாங்கம் தனது பெரும்பாண்மைப்பலத்தை இன்னமும் நிரூபிக்காத சூழலில், மீண்டும் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான சர்வதேச அழுத்தங்களை எதிர்கொள்ளவேண்டிய நிலையில் அதனைத் தவிர்க்கவும் முடியாது மீண்டும் அனுசரணையாளராகச் செயற்பட நோர்வே அரசுக்கு அழைப்புவிடவேண்டிய தேவை விருப்பமில்லாத நிலையிலும் ஏற்படவே செய்துள்ளது.

உண்மையில் கடந்த ஐ.தே. முன்னணி ஆட்சிக்காலத்தில் நடைபெற்ற சமாதானப் பேச்சுவார்த்தைகள் குறித்து சனாதிபதிக்கோ, தற்போதைய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கூட்டுக் கட்சிக்கோ, இன்றைய அரசை முண்டுகொடுத்து காப்பாற்றி நிற்கும் ஹெல உறுமய கட்சியின் பிக்குகளுக்கோ எந்தவித உடன்பாடும் கிடைக்காத நிலையில் அவர்களை பகைத்துக் கொண்டு அவர்களின் அபிலாசைகளுக்கு எதிராக ஒரு சமாதான முன்னெடுப்பை சந்திரிகாவால் மேற்கொள் எமுடியுமா என்பது சந்தேகமே....

எனினும் சந்திரிகா சமாதான முன்னெடுப்புக்கான முதலடியை நோர்வே அரசுக்கு அனுசரணையாகப் பணியாற்ற அழைப்பு விடுத்ததன் மூலம் தன்னாதிக்கமுள்ளதாகக் காட்டி சர்வதேச சமூகத்தை சமாதானப்படுத்த முயல்கின்றார் என்றே கூறவேண்டும்.

சமாதான முயற்சி தொடர்பாக தான் ஜே.வி.பி.யுடன் பேசிவிட்டுத்தான் இந்த அழைப்பினை நோர்வேக்கு விடுத்ததாக சந்திரிகா ஊடகங்களுக்கு தெரிவித்திருந்தாலும், அதற்கு ஜே.வி.பி. தரப்பில் எந்தவித பதில் அளித்திருந்தது என அவர் கூறவேயில்லை.

நிச்சயமாக ஜே.வி.பி.யினர் இந்த முயற்சிக்கு தமது பூரண ஒத்துழைப்பினை வழங்கியிருக்கவே மாட்டார்கள் என்பது தெளிவு...

இதற்கு ஏதோ ஒரு வகையான நிபந்தனைகளுடனான சம்மதத்தைத் தான் அவர்கள் தெரிவித்திருக்கக்கூடும்.

குறிப்பாக ஏற்கனவே இடைநடுவில் விட்டுவிட்ட இடத்திலிருந்து பேச்சுக்களைத் தொடர ஜே.வி.பி.யினர் விரும்பவே மாட்டார்கள் என்பது அனைவருக்கும் தெரிந்த உண்மையாகும்.

இதேவேளை இந்த தொங்கு பாராளுமன்றத்தை மயிரிழையில் தொங்கவைத்துக் கொண்டிருக்கும் ஹெல உறுமய நிபந்தனையின் அடிப்படையில் கூட சமாதான முயற்சிகளுக்கு ஆதரவளிப்பார்கள், என நம்புவது கடினமேயாகும்.

ஆனாலும் சந்திரிகா நோர்வே அரசுக்கு அழைப்பு விடுத்துள்ளார் என்ற வகையில் அதன் பின்னணியில் ஏதோ ஒரு "பொறி" வைக்கத்திட்டமிட்டிருக்கிறார் என்று எவரும் சந்தேகிப்பாரேயானால் அதில் நியாயமிருக்கவே செய்யும்.

எந்த வகையிலும் இன்றைய அரசை கொண்டு நடாத்துவதற்கு அரசுக்கு நிதி வளம் கிடையவே கிடையாது.

சமாதான நகர்வின் முடக்கத்தின் பின்னர் அந்நிய முதலீடுகள் மீண்டும் குறைந்து விட்டன.

இலங்கைக்குக் கடன் வழங்கும் நாடுகளும், உலக வங்கியும், ஏனைய உதவும் அமைப்புக்களும் சமாதான முன்னெடுப்பின் அவசியத்தையே நிபந்தனையாக முன்வைக்கின்றன.

சமாதான முயற்சிகளை ஆரம்பித்த நோர்வே உட்பட, ஜப்பான், கனடா, அவுஸ்ரேலியா, ஸ்கண்டி நேவிய நாடுகள், ஐரோப்பிய ஒன்றியம் உட்பட அணைத்திற்குமே ஐ.தே முன்னணி அரசு சமாதான நகர்வுகளுக்கு பக்கபலமாக இருந்தன என்பதுடன் இந்த நாடுகள் அனைத்துமே அமெரிக்காவுடன் நல்லுறவுகளை இறுக்கமாகப் பேணிவரும் நாடுகளேயாகும்.

அமெரிக்காவின் சமாதான முயற்சிகள் மீதான ஆதரவு நிலைப்பாட்டை இந்த நாடுகள் அனைத்துமே ஆதரித்ததுடன் அமெரிக்காவின் அறிவுறுத்தல்களுக்கேற்ப இலங்கையில் சமாதான முயற்சிகள் மீதான தங்களின் பங்களிப்பையும், உதவியையும் வெளிப்படையாகவே தெரிந்தும் வந்தன- வருகின்றன.

இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாக மேற்குலகின் பங்களிப்பினை- ஒத்தாசையை குறிப்பாக அமெரிக்காவின் விருப்பத்தை அயலக ஆதிக்கசக்தியான இந்தியா எந்தவகையிலும் விரும்பவில்லை என்பதும் தெளிவு.

இந்த அமெரிக்காவின் அதன் சார்பு மேற்குலக நாடுகளினதும் இலங்கை மீதான ஈடுபாடு என்பது இந்து சமுத்திர பிராந்திய நாடுகள் மீதான தனது மேலாதிக்க செல்வாக்கு ஆழுமைக்கு ஆபத்தான விடயம் என்று இந்தியா கூறுவதும் உண்மையே.

இலங்கையின் சமாதானத்தில் ஆழ்ந்த அக்கறையை அமெரிக்கா கருதுவதக்கு அதன் புவிசார் அரசியல் மற்றும் இராணுவம் தொடர்பான எதிர்காலத் தேவைகளுக்கு இலங்கையுடனான தனது இறுக்கமான- நெருக்கமான - ஆதிகக ஆழுமையுடன் கூடிய உறவு மிக மிக முக்கியம் என்று கருதும் தொலை நோக்கு சிந்தனையே காரணமாகும்.

இங்கே தான் அமெரிக்க- இந்திய மேலாதிக்க சக்திகளின் பனிப்போர் இலங்கையில் சமாதானத்தை மையங்கொண்டு ஆரம்பித்துள்ளது எனலாம்.

அமெரிக்க மற்றும் மேற்குலக அழுத்தங்களின் தாக்கத்தையும் அதனை எந்த வகையிலும் தவிர்த்துவிடக் கூடிய சாத்தியம் இல்லாத நிலையும், இலங்கை அரசு அதாவது புதிய ஐ.ம.சு.முன்னணி அரசு தெளிவாகவும் எச்சரிக்கையுடனும் புரிந்துகொண்ட நிலையில தான் சனாதிபதியின் நோர்வேக்கான அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதெனலாம்.

எனினும் தேர்தலுக்கு முன்பிருந்தே தற்போதைய பிரதமர் மகிந்த ராஜபக்ஷ வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் உட்பட வேறு சில ஐ.ம.சு.முன்னணி முக்கியஸ்தர்கள் இனவிவகாரத்துள் இந்தியா முழுமையாகவும், வெளிப்படையாகவும் தலையிடவேண்டிய சந்தர்ப்பம் வந்துவிட்டது என இந்தியசார்புக் குரலை ஓங்கி ஒலிக்கத் தொடங்கியபோதே அவர்கள் சமாதான முயற்சியை குறுகிய வட்டத்துக்குள் வரையறை செய்ய விரும்புகின்றனா என்பது தெளிவாகிறது.

ஆனால் புதிய சமாதான முயற்சிகளை புத்தம்புதிதாக "அ"விலிருந்து அரம்பிப்பது சாத்தியமற்றது அதற்கு விடுதலைப்புலிகள் சம்மதிக் கமாட்டார்கள் என்பது தெளிவான பின் நின்னைச் சரணடைந்தேன் என நோர்வேயை சரணடைவது என்பது அரசுக்கு தனது முடிவுக்கும், அபிலாசைகளுக்கும் அப்பாற்பட்ட விடயமாகி விட்டது.

இது அமெரிக்காவுக்கும் அதன் சார்பு நாடுகளுக்கும் கிடைத்த வெற்றி என்றால் இந்தியாவுக்குக் கிடைத்த ஏமாற்றம் எனவும் கூறமுடியும்.

எனவே இந்தியாவைச் சமாளித்து சமாதானம் சொல்லி திருப்திப்படுத்த வேண்டியதுசனாதிபதிக்கு தவிர்க்கமுடியாத அவசியமாகிவிட்டது.

எனவே தான் புதுடில்லிக்கு கதிர்காமரை அனுப்பியிருக்கின்றார் சந்திரிகா. ஜே.வி.பி.யை சமாளித்து ஹெலஉறுமயவினரை சமாளித்து ஏனைய பேரினவாத சக்திகளை சமாளித்து, இந்தியாவை சமாளித்து, அமெரிக்காவை சமாளித்து அனைவரையும் திருப்தி செய்து சமாதானம் ஒன்றை சந்திரிகா ஏற்படுத்த நினைத்தால் அது விடுதலைப் புலிகளையும் தமிழ் மக்களையும் அவர்களின் அபிலாசைகளையும் திருப்தி செய்யுமா என்ற கேள்வியும் எழவே செய்கின்றது.

எழும் கேள்விக்கு பதில் "இல்லை" என்றே தோன்றவும் செய்கிறது" ●



சிந்தனையையும் செயலாற்ற லையும் இணைத்து ஒரு முகப்படுத்தும் மனிதனே, இன்பம் மிக்கவன். - ஜவாஹர்லால் நேரு.

# சந்திரிகாவை திருப்பித்தாக்கும் அவருடைய தந்திரங்கள்



சபாநாயகர் தெரிவில் சனாதிபதி சந்திரிகா பெற்ற தோல்வி எனப்படுவது அவருடைய தந்திரங்களுக்குக் கிடைத்த தோல்விதான்.

ஹெல உறுமயவிலிருந்து இரண்டு பிக்குகளை தன்வசப்படுத்த அவர் மேற்கொண்ட தந்திரங்களின் விளைவாக சீற்றமுற்ற ஏனைய பிக்குகள் அவரைப் பழிவாங்கியதனாலேயே சபாநாயகர் தெரிவில் அவருடைய வேட்பாளர் தோற்க நேரிட்டது.

நாடாளுமன்றம் கூடுவதற்கு சிறிது காலத்துக்கு முன்பிருந்தே மேற்படி

எனப்படுவதே முறிக்கப்பட்ட வாக்குறுதிகள், பொய்ச் சத்தியங்கள், சூழ்ச்சிகள், மற்றும் குறுக்குவழிச்சதிகள், போன்றவற்றின் கலவையாகத்தான் காணப்படுகிறது.

சில கிழமைகளுக்கு முன்புவரை கருணா அரங்கிலிருந்து அகற்றப்படும்வரை சந்திரிகா தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தனக்குச் சாதகமாக உடைத்துவிடலாம் என்று கனவுகண்டார். ஆனால், கருணா களத்திலிருந்து அகற்றப்பட்டதையடுத்து அந்தத்தெரிவு இல்லாமற்போய்விட்டது.

இது தவிர, எதிர்க்கட்சிகளுக்குள்ளிருந்து யாரையாவது விலைக்கு வாங்க முடியுமா என்றும் அவர் முயற்சி செய்திருந்தார். அந்த முயற்சியில் அவர் பெற்ற வெற்றிகளின் விளைவாகவே ஒரு எதிர்க்கட்சி எம்.பி.சபாநாயகர் தெரிவில் அவருக்குச் சார்பாக வாக்களித்திருந்தார்.

இதுபோலவே பிக்குகளையும் உடைக்க முற்பட்டபோதே விளைவு விபரீதமாகியது.

ஜே.வி.பி.க்கு வாக்குறுதி அளித்திருப்பார் என்பது நம்பக்கூடிய ஒரு விசயமல்ல.

உண்மை என்னவெனில் -அவர் வழமைபோல புதிய நிலைமைகளுக்கேற்ப தன்னுடைய வாக்குறுதிகளை முறிக்கிறார் என்பதே. இதை அவர் செய்வது அவருடைய அரசியல் எதிரிகளுக்கல்ல மாறாக, கூட்டாளிகளுக்கே.

அவரைப்பொறுத்தவரை இதில் வெட்கப்படவோ அல்லது துக்கப்படவோ அல்லது கூச்சப்படவோ எதுவுமே இல்லை. அதிகாரத்தைத் தக்கவைப்பதற்காக எந்தவொரு விழுமியத்தையும் உடைக்க அவரால் முடியும். அதற்கான ஒரு தசாப்த காலப் பயிற்சியும் தைரியமும், ஓர்மமும் அவரிடமுண்டு.

தனது கணவனின் மரணத்தையடுத்து அரசியலைவிட்டு ஒதுங்கி ஐரோப்பாவில் தஞ்சம்கோரியிருந்தவர் அவர். யுத்தம் இலகுவாக்கிக்கொடுத்த வழிகளினூடாக வேகமாக முன்னேறி கட்சியின் தலைவியும் நாட்டின் தலைவியுமானார். என்று அதிகாரத்தின் ருசி அவருக்குத் தெரியவந்ததோ அன்றிலிருந்து அதை இழந்து விடாதிருப்பதற்கான எல்லா மூன்றாந்தரத் தந்திரங்களையும் அவர்

ஜெயவர்த்தன செய்தவற்றிற்கு எதுவிதத்திலும் குறைந்தவையல்ல.

அரசியலமைப்பை மாற்றி எழுதி அதன்மூலம் இன்னும் பல தடவைகள் பிரதமராக ஆட்சி அதிகாரத்தில் இருக்க அவர்போட்ட திட்டங்களை முதற்கட்டமாக பிக்குகள் குழப்பிவிட்டார்கள். அவருடைய தகப்பனாரைக் கொன்றதும் பிக்குகளே இப்பொழுது அவரை எதிர்பாராத விதமாக தோற்கடித்திருப்பதும் பிக்குகளே.

ஆனால், அவர் ஓயமாட்டார். அஞ்சிப் பின்வாங்கும் ஒரு ஆளுமையல்ல அவர். அப்படிப் பின்வாங்கினாலும் அதிலும் சூழ்ச்சி இருக்கும்.

இப்போதுள்ள நாடாளுமன்ற நிலவரங்களின் படி ரணில் விக்கிரமசிங்க சிறுபான்மைக்கட்சிகளோடு கூட்டுச் சேர்ந்தாலும்கூட, அறுதிப்பெரும்பான்மையைப்பெற குறைந்தது மூன்றுஹெல உறுமய பிக்குகளையாவது விலைக்கு வாங்கவேண்டும். அப்படி விலைக்கு வாங்கினாலும் கூட அவருடைய ஆட்சியை அரசியலமைப்பின் பிரகாரம் ஆகக்குறைந்தது ஒருவருடம் வரைதான் சந்திரிகா பொறுத்துக்கொள்வார். அதன் பின் அவர் விரும்பிய ஒரு நேரத்தில் அதைக் கலைத்து விட முடியும்.

எனவே, ரணில் என்னதான் முயன்றாலும் அவரால் நிம்மதியாக ஒரு ஆட்சியைக் கொண்டு நடத்தமுடியாது. மாறாக சந்திரிகாவால் முடியும்.

> அரசியலமைப்பை மாற்றி எழுதி அதன்மூலம் இன்னும் பல தடவைகள் பிரதமராக ஆட்சி அதிகாரத்தில் இருக்க சந்திரிகா போட்ட திட்டங்களை முதற்கட்டமாக பிக்குகள் குழப்பிவிட்டார்கள். அவருடைய தகப்பனாரைக் கொன்றதும் பிக்குகளே இப்பொழுது அவரை எதிர்பாராத விதமாக தோற்கடித்திருப்பதும் பிக்குகளே.

இரண்டுபிக்குகளும் காணாமல் போயிருந்தார்கள். அவர்கள் காணாமல் போனதற்கு சந்திரிகாவே காரணம் என்று பிக்குகள் சந்தேகப்பட்டார்கள். ஆனால் இதில் தனக்கு எதுவித சம்பந்தமும் இல்லையென்று சந்திரிகா பிக்குகளிடம் உறுதிபடக்கூறியிருந்தார். இதற்காக அவர் தன் தாயின்மீதும் இரண்டுபிள்ளைகளின் மீதும் சத்தியமும் செய்துகொடுத்தார்.

இது சில சமயம் ஜே.வி.பி. யின்வேலையாய் இருக்கலாம் என்றுமவர் கூறியிருந்தார். ஜே.வி.பி.யும் அவரும் கூட்டாளிகள் என்றபடியால் ஜே.வி.பி. செய்பவற்றிற்கு அவரும் பொறுப்பேற்க வேண்டும். என்று பிக்குகள் கூறியிருந்தார்கள்.

ஆனால், இப்பொழுது கிடைக்கும் தகவல்களின்படி அவருடைய ஆசீர்வாதத்தோடையே ஜே.வி.பி. இதைச் செய்தது என்று கூறப்படுகிறது.

அப்படியானால் அவர் செய்த சத்தியம்?

நவீன அரசியலில், அதுவும் கொழும்பு மைய அரசியலில் சத்தியத்துக்கெல்லாம் பெறுமதி கிடையாது. பிக்குகளுக்கு அரசியல் புதியதல்ல. ஆனால், அரசியல் நெளிவு சுளிவுகளை அவர்கள் எனிமேல்தான் கற்கவேண்டியிருக்கலாம். அவர்கள் பிக்குகள் என்பதால் தன்னுடைய இறந்துபோன தாயார்மீதும் தனது பிள்ளைகள் மீதும் சத்தியம் செய்தால் அவர்களை நம்பவைக்கலாம் என்று சந்திரிகா நம்பியிருந்திருக்கக்கூடும்.

ஆனால், அவருடைய சத்தியம் பொய்த்தபோது பிக்குகளுக்கு உண்டாகிய கோபம் அவருடைய கனவுகளின் அடித்தளத்திலேயே வெடிப்பை உண்டாக்கியிருக்கிறது.

தனது தந்திரம் இப்படி பூமராங்காகத் திரும்பி வரும் என்று சந்திரிகா கற்பனைசெய்திருப்பாரோ தெரியவில்லை. அவர் இப்படி பொய்ச்சத்தியம் செய்வதோ அல்லது வாக்குறுதிகளை முறிப்பதோ இதுதான் முதற்தடவையல்ல.

கடந்த சுமார் ஒரு தசாப்த காலமாக அவருடைய அரசியல்

அண்மைநாட்கள் வரை அவருடைய ஆட்சியை ஆட்டங்காணச் செய்துவந்த, ஜே.வி.பி.யுடனான இணக்கமின்மைக்குக் காரணமும் அவருடைய முறிக்கப்பட்ட ஒரு வாக்குறுதியே.

ஜே.வி.பியுடன் கூட்டு உருவாகிய போது மகாவலி அபிவிருத்தி அமைச்சை அவர்களுக்குத் தருவது என்று சந்திரிகா வாக்களித்திருந்தார். உடன்படிக்கை உருவாகிக்கொண்டிருந்த தருணத்தில் ஜே.வி.பி.யைத் தாக்காட்ட அவர்கள் கேட்ட சிலவற்றை தருவதாக அப்பொழுது ஒப்புக்கொண்ட சந்திரிகா பின்பு ஆட்சியை அமைக்கும்போது அந்த வாக்குறுதிகளை முறிக்கத் தயாராகிவிட்டார்.

மகாவலி அமைச்சை ஜே.வி.பி.க்குக் கொடுக்கக்கூடாது என்பதுக்கு அவர் வெளிப்படையாகக் கூறும் காரணங்கள், உபகாரணங்கள் மட்டுமே.

பிரதானகாரணம் என்னவெனில் - கடந்த தேர்தலில் அதிகம் இழப்புக்

**நிலாந்தன்**

குள்ளாகியது எஸ்.எல்.எவ்.பி.யே எனவே, தனது கட்சியின் ஆதரவுத் தளத்தைக் கட்டியெழுப்புவதென்றால் மகாவலி அமைச்சுப்போன்றவை ஒரு எஸ்.எல்.எவ்.பிக்காரருக்கே தரப்படவேண்டும்.

மகாவலி அமைச்சின் கீழ் ஆயுதங்களும், வெடிப்பொருட்களும், ஆயுத பாணிகளும், அடர்ந்தவனங்களும் இருப்பதால் அதை ஜே.வி.பியிடம் கொடுக்கக்கூடாது என்று காரணம் கூறப்பட்டது. ஆனால், மகாவலி அமைச்சின் கீழ் இவையெல்லாம் வருகின்றன என்பது அவருக்கு முன்பே தெரியாதா? அதுவும் முப்படைகளின் தளபதியாகவிருக்கும் ஒரு சானாதிபதி இது எதையும் தெரியாமல்

கைக்கொள்ளத் தொடங்கினார்.

கூசாமல் பொய்சொல்ல அவரால் முடியும். தேவைப்பட்டால் மன்னிப்புக் கேட்கவும் அவரால் முடியும். யார்மீதும் பொய்ச்சத்தியம் செய்யவும் அவரால் முடியும். சமயங்களில் மாய்மாலம் கொட்டவும் அவரால் முடியும்.

இது விசயத்தில் அவருக்கு நிகரான மற்றொரு ஆளுமை இந்தப் பிராந்தியத்தில் உண்டு. அதுதான் ஜெயலலிதா. இருவருமே ஒரு விதமான கதம்பமான அரசியலைத்தான் செய்து வருகிறார்கள். இருவருக்குமே வெக்கம், துக்கம் கிடையாது. இருவருமே கனவான் அரசியலின் விழுமியங்களை மதிக்காதவர்கள். அதிகாரத்தைத் தொடர்ந்தும் தக்கவைப்பதற்காக யாரோடும் கூட்டுச் சேர்வார்கள், யாரையும் கைவிடுவார்கள்.

இதில் சந்திரிகாவின் ஆளுமையைக் குறைத்து மதிப்பிடமுடியாது. கடந்த சுமார் ஒரு தசாப்தகாலமாக அதிகாரத்தில் தொடர்ந்தும் இருக்க அவர் செய்துவரும் வேலைகள், இதற்கு முன்பு பதினேழு ஆண்டுகளாக இந்த நாட்டை ஆண்ட

சனாதிபதியும், பிரதமரும் ஒரே கட்சியாக இருப்பதால் [illegible]த்தியம். இதற்காக சில எம்.பி க்களை எதிர்த்தரப்பிலிருந்து விலைக்கு வாங்கினால் சரி.

இப்படி எதையாவது செய்தால்தான் அவரால் தொடர்ந்தும் அதிகாரத்தில் இருக்கமுடியும். இப்பொழுது அவர் சமாதானம் செய்ய முன்வந்திருப்பதும் இந்த நோக்கத்தோடுதான். அதாவது, சிறுபான்மையினக்கட்சிகளின் ஆதரவை குறிப்பாக, தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் ஆதரவைப் பெறுவதற்காகத்தான்.

அவருடைய இலட்சியமெல்லாம் தொடர்ந்தும் ஆட்சியில் இருப்பதே. ஜெயவர்த்தனவின் "சாதனை"யை எப்படியாவது முறியடித்துவிட வேண்டுமென்று அவர்விரும்புகிறார். அதற்காக அவர் யாரையும் பலியிடுவார். எதையும் இழப்பார். கடைசியாக கடந்த தேர்தலில் அவர் பலியிட்டது தனது சொந்தக் கட்சியைத்தான் இனியும் யாரை? அல்லது எதைப் பலியிடுவாரோ?

# நறுக்கென...

## மத்தளத்திற்கு இடி இரண்டு பக்கம் சந்திரிகாவுக்கு இடி எத்தனை பக்கம்



உரலுக்கு இடி ஒருபக்கம் மத்தளத்துக்கு அடி இரண்டுபக்கம் ஆனால் சந்திரிகாவுக்கு நெருக்கடியோ எல்லாப்பக்கமும்.

சும்மாகிடந்த சங்கை ஊதிக் கெடுத்தான் ஆண்டி என்பார்கள் சும்மா இருந்த ரணில் அரசை சும்மாகலைத்துவிட்டு, இப்ப அம்மாபடும் அவலம் கொஞ்ச நஞ்சமல்ல....

ஜே.வி.பி. பக்கத்தால் ஒரு இடி, ஹெலஉறுமய பக்கத்தால் மற்றொருஅடி.... இந்தியப் பக்கத்தால் ஒரு கடி... அமெரிக்கப் பக்கத்தால் நெருக்கடியென அம்மணி அலமலர்ந்து நிற்கிறார்.

யானையைக்கட்டித் தீனிபோடுமாற்போல் ஜே.வி.பி.யினரைக் கூட்டுச்சேர்த்துக் கொண்டதில் அதற்கு அமைச்சு தீனி போடுவதில் அவர்படும் சங்கடம் கொஞ்ச நஞ்சமல்ல.

புதிய அரசு தனது பலத்தில் மட்டுமே தள்ளாடிக்கொண்டாவது தாக்குப்பிடித்து நிற்கிறது என ஜே.வி.பி நினைப்பதில் தப்பே கிடையாது. அதனால் அது அரசின் பலவீனநிலையையும், தனது பலநிலையையும் பயன்படுத்தி அமைச்சுப்பேரத்தில் இறங்கியிருப்பதுதான் சந்திரிகாவுக்கு எரிச்சலூட்டும் விடயமாகிவிட்டுள்ளது.

மகாவலி அமைச்சை ஜே.வி.பி.க்கு கையளித்தால் அரசில் சந்திரிகாவின் மாவலிமையே போய்விடும் என்பதில் ஐயமில்லை. அரசியல் மற்றும் இராணுவ(ஆயுத)ரீதியில் ஜே.வி.பி. அசுரபலம் பெற அந்த அமைச்சு அவசியம் என அது நினைக்கிறது.

இது சந்திரிகாவுக்கும் புரியும். அதனால் அந்தவிடயத்தில் அவர் விட்டுக் கொடுக்கத் தயாரா இல்லை...

ஜே.வி.பி.யும் அதை விடத்தயாரோ - மனமோ இல்லாததாகவே உள்ளது... அடுத்தது ஹெல உறுமய... நாடாளுமன்றத்தின் விலாங்கு வேடமிட்டு ஐக்கிய தேசியமுன்னணிக்கு வாலையும், ஐக்கியமக்கள் சுதந்திரமுன்னணிக்கு தலையையும் காட்டி இருதரப்பையும் ஆட்டிப்படைக்க முயல்கிறது. சபாநாயகர்கள் தேர்தலில் ஐ.ம.சு.முன்னணியின் தோல்விக்கு ஹெல உறுமயவின் குத்துக்கரணமே காரணம்.

அடுத்தது அயலக சக்தி... இந்தியாதான்... இரகசியமாக அரசுக்கு அழுத்தங்களையும் அறிவுறுத்தல்களையும் வழங்கி சமாதான முயற்சிகளில் மூக்கை நுழைத்து சிக்கலை ஏற்படுத்திவருகிறது...

கடைசியாக உலகசக்தி... அமெரிக்காவேதான்... வெளிப்படையாகவே அரசுக்கு சமாதானப்பேச்சை ஆரம்பித்தால் தான் உலக உதவிகள் கிடைக்கும் என அச்சுறுத்துகிறது...

ஆரைச் சமாளிப்பது? ஏறச் சொன்னால் எருதுக்கு கோபம்... இறங்கச்சொன்னால் முடவனுக்குக்கோபம்... என்ன செய்வது...?

'எங்கே நிம்மதி.. எங்கே நிம்மதி... அங்கே எனக்கோர் இடம் வேண்டும்' என்று சந்திரிகா பாடலாம்... அவ்வளவுதான்...!

## கைக்கூலிகளுக்கு ஏது எதிர்காலம்...?



தலைதெறிக்க ஓடி எங்கோ ஓர் எதிரிமுகாமில் பாதுகாப்புத் தேடும் பரிதாபநிலைக்கு மற்றவர்கள் பரிகசிக்கும் வகையில் போய்விட்ட விநாயகமூர்த்தி முரளிதரன் என்ற கருணாவின் கதை இப்படிப்போய்விடுமென்று கனவிலும் கருதாத படைத்தரப்பும் - அரச தரப்பும் - அயலகத்தரப்பும் உண்மையில் வாயடைத்துப்போய்விட்ட நிலையில் பதுங்கியிருக்கும் அவரை எப்படிப் பயன்படுத்துவது என்பது குறித்த தமது திட்டங்களை மீள்பரிசீலனை செய்யத் தொடங்கியிருக்கிறார்கள்.

ஆரம்பத்தில் அவரை ஓர்வலுவான - ஆட்பலமிக்க - ஆயுதவளம்கொண்ட ஒரு தளபதியாக பார்த்துக்கணித்து அதற்கேற்ப அவரை பயன்படுத்தி தமது அரசியல் மற்றும் இராணுவ ரீதியிலான ஆதாயங்களை பெறநினைத்தவர்கள் இப்போது கெட்டிக்காரனின் புளுகு எட்டேநாள் என்பதைப்போல் கருணாவின் புளுகு வெறும் நாற்பத்தைந்தேநாள் என்பதைப் புரிந்துகொண்டவர்களாக அவரை வேறுவகையில், ஒரு ராசிக்குழுவின் தலைவர்போல் கூட அல்லாது, மிகவும் சாதாரணமாகக்கூட கையாள அவர்கள் முயலக்கூடும். எப்படியெனினும் அவர் அவர்களால் தமிழ்மக்களுக்கும், விடுதலைப்புலிகளுக்கும் எதிராகப் பயன்படுத்தப்படும் ஒருவராகவே இருப்பார் என்பதில் சந்தேகமில்லை.

இந்த வாரம் ஆயித்தியமலையில் நடைபெற்ற தாக்குதல் சம்பவங்கள் படைதரப்பினர் கருணா குழுவினர்க்கு நடத்திய பரீட்சையாகவும் கூட இருக்கலாம். இந்தத் தாக்குதல்களின் ஊனமுற்ற போராளிகளைக் கொன்றேனும் தமது விசுவாசத்தை அவர்களுக்கு உறுதிப்படுத்த வேண்டிய அவசியம் இருந்திருக்கலாம்.

கைக்கூலிகளாக இயங்கும் நிலையை வரித்துக்கொண்டால் பிறகு கையாலாகாத்தனமான அனைத்தையும் செய்யவேண்டும் தானே.....

சிறிலங்கா இராணுவத் தளபதி பாராட்டி நற்சாட்சிப்பத்திரம் வழங்கும் அளவுக்கு கருணா, அவர்களுக்கு நல்ல மனிதராகப் பட்டபோதே. அவரின் கதை கந்தலாகிவிட்டது.

சரி... கருணாவின் வருங்காலம் எப்படி இருக்கப்போகிறதாம்?

வரதராஜப் பெருமாளின் வருங்காலம் எப்படி இருக்கும்,


டக்ளஸ் தேவானந்தவின் வருங்காலம் எப்படி இருக்கும் என யாரும் நினைக்கிறார்களா என்ன?

காட்டிக்கொடுப்போர் - கைக்கூலிகளாவோர் - நம்பிக்கைத்துரோகம் செய்வோர் இவர்களெல்லாருக்குமே வரலாற்றில் எதிர்காலம் என்ற ஒன்று பிரகாசமானதாக இருந்ததே இல்லை...

காக்கைவன்னியன் போல்... எட்டப்பன் போல்... இவர்களின் பெயரையும் எதிர்காலம் இனத்துரோகிகள் என்றபட்டியலில் பதிவு செய்துவிடும்.

அவ்வளவு தான்!

## ஜே.வி.பிக்கு சரியான போட்டி...!



காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்... இது இப்போதைய ஜே.வி.பி.யினரின் மூல மந்திரமாக உள்ளது.

இந்தத்தேர்தல் ஜே.வி.பி.க்கு ஒரு அசுரபலத்தைக் கொடுத்திருக்கிறது. இன்று வெற்றிகரமான பெயர் அதற்கு எதிரியை உயர்நிலையாக கனவுகளையும் அளித்திருக்கிறது.

பலவீனமான அரசுகள் பலமான - அதனை ஆட்டிப்படைக்கும் வலுக்கொண்ட கூட்டணிக் கட்சியானதில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் உள்ள ஏனைய கட்சிகளை வாயடைக்கச்செய்துவிட்ட ஜே.வி.பி.நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதியை அதை நிறைவேற்று, இதை நிறைவேற்று என்று ஆணையிடும் அளவுக்கு அதிகாரம் காட்டத்தொடங்கிவிட்டது என்றே கூறலாம்.

ஆனால் எல்லாம் வல்ல ஹெலஉறுமயவின் 'நவக்கிரகங்கள்' தமது பலத்துக்கு போட்டியாக அரசை ஆட்டிப்படைக்கும் மற்றொரு சக்தியாக நாடாளுமன்றத்தினுள் விசிறிகளும் கையுமாக மஞ்சள் அங்கி போர்த்திக்கொண்டு நுழைவர் என ஜே.வி.பி. எதிர்பார்த்திருக்கவே இல்லை.

இப்போது ஆளும்கட்சி - எதிர்க்கட்சி போட்டி என்பதை விடவும் ஜே.வி.பி., ஹெல உறுமய பலப்பரீட்சைதான் 'சபாஷ் சரியான போட்டி' என எண்ணவைத்துள்ளது.

என்னதான் 39 உறுப்பினர்களைக் கொண்டதாக ஜே.வி.பி. இருந்தாலும், ஒன்பது உறுப்பினர்களைக் கொண்ட நவக்கிரகப் பிக்குகளுக்குள்ள பலம் இப்போது அவர்களுக்கு இல்லை என்பதே உண்மை.

அதனை சபாநாயகர் தேர்தலில் பிக்குகள் நிரூபித்தபோது ஜே.வி.பி.யினர் காட்டிய 'எரிச்சலும்,புகைச்சலும்' பிரசித்தி பெற்றது.

பிக்குகள் அன்றைய தினம் நாடாளுமன்றில் அடித்த குத்துக்கரணங்கள் யாவும் ஜே.வி.பி. யினரைப் பழையகோலம்கொள்ள வைத்து கிளர்ச்சி நடவடிக்கைகளில் இறங்கவைத்தது...

புத்தகங்கள், பைல்கள், ஆவணங்கள். அனைத்தையும் பிக்குகளை நோக்கி வீசிய காட்சி கண்கொள்ளாக் காட்சி...

இந்தச் சம்பவம் சனாதிபதிக்கு இக்கட்டான நிலையை ஏற்படுத்தியுள்ளது போலும்.

ஹெலஉறுமய உறுப்பினர்களான பிக்குமாருக்கு எதிராக எந்தவிதமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவேண்டாமென சிறிலங்கா சுதந்திரக்கட்சி - அதாவது சந்திரிகாவின் கட்சி ஜே.வி.பி.யினருக்கு எச்சரிக்கை செய்துள்ளதன் மூலம் இதனை வெளிப்படுத்தியுள்ளது...

எனினும் ஆட்சிக்காலம் எவ்வளவுக்கு நீடிக்கும் என்பது தெரியாத நிலையிலும் ஜே.வி.பி. தனது தளத்தைப் பலப்படுத்தி தன்னை ஒரு தனிச்சக்தியாக்க முயல்கிறது என்பது தெளிவு.

'எரிகிற வீட்டில் பிடுங்கியது லாபம்' - விளங்குது தானே..

## நம்பவைத்து ஏமாற்றும் சந்திரிகாவும் நம்பி ஏமாந்து போகும் கதிர்காமரும்



கடைசியில் எப்படியோ தனது பழைய வெளியுறவு அமைச்சுப் பதவியை கெட்டியாகப் பிடித்துக் கொண்டாலும் கூட 'அந்தப்பெரும்' அதிகார சனாதிபதியின் ஆலோசகரான லக்ஷ்மன் கதிர்காமருக்கு பழைய சந்தோஷமோ, கம்பீரமோ இல்லாமல் போய்விட்டது என்னமோ உண்மைதான்.

அண்மையில் ஒரு நிகழ்வில் ராஜதந்திரவட்டாரத்தைச் சேர்ந்த ஒருவரும், பிரபல பத்திரிகையாளர் ஒரு வரும் (சிங்களவர்) பேசிக்கொண்டிருக்கையில் - தன்னைப்பிரதமராக்கினால் இனப் பிரச்சினை என்ற ஒன்றை இல்லாமல் செய்துவிடலாம் என்பதுடன் புலிகளின் பிரச்சினை, பேச்சுவார்த்தை என்பதையெல்லாம் அர்த்தமில்லாமல் போகச் செய்துவிடலாம் என்று சனாதிபதிக்கு கதிர்காமர் ஆலோசனை கூறியதாகவும், அப்படி நடந்திருந்தால் நாட்டின் பிரதமர் ஒரு தமிழராக இருக்கும்போது (அது அதிகாரமற்ற வெறும் பொம்மைப் பதவி என்பது வேறுவிடயம்) இனப்பிரச்சினை பற்றி எவராவது கூறினால் நம்புவார்களா... ஆனாலும் சந்திரிகா விரும்பியும் கூட அது சாத்தியப்படாமல் போய்விட்டது' என்றாராம் அந்த ராஜதந்திரி.

'ஆனாலும் அந்தக் கதிரையில் ஒரு சிங்களவரைத் தவிர வேறுயாரும் அமர்ந்தால் இந்த நாடு அவர்களுக்குரியதாகவும் ஆகிவிடும்... அதை எப்படி அங்கீகரிப்பது? என்றாராம் அந்தப்பத்திரிகையாளர்.

இது கதிர்காமரின் காதுகளுக்கும் எட்டியிருக்கும்.

அவரை பிரதமராக்க முடியாத நிலையில் தனது ஆழ்ந்த கவலையை கதிர்காமரிடம் தெரிவித்த சந்திரிகா பின்னர் அவரை சபாநாயகராக்க யோசித்ததாகவும் கேள்வி, ஆனால் அதற்கும் பேரினவாதிகளின் 'வெறி' சம்மதிக்க வில்லையாம்.

கதிர்காமர் நொந்து தான் போயிருப்பார்.

என்னதான் இருந்தாலும், எவ்வளவு தான் செய்தாலும் - எப்படி விசுவாசமாக இயங்கினாலும், தன்னை ஒரு தமிழனாகவும் - சொன்னதைச் செய்யவேண்டிய விசுவாசமான அடிமையாகவும் தான் பார்க்கிறார்கள் எப்பதை அவர் உணர்ந்திருப்பாரா?

உண்மையான இனமானமுள்ள தமிழராக இருந்திருந்தால் உணர்ந்திருப்பார்தான்... ஆனால்...வேண்டாம் அதை விட்டு விடுவோம்.

ரத்வத்தைக்கும் ரத்னசிறி விக்கிரமநாயக்கவுக்கும் தேசியப்பட்டியலில் கூட இடமளிக்காது தனக்கு இடமளித்து, பழைய அமைச்சுப்பதவியில் அமர்த்திய பெருந்தன்மைக்கா சந்திரிகாவுக்குத் தொடர்ந்தும் விசுவாசமாக 'வாலாட்'டிக்கொண்டிருக்க கதிர்காமர் தயார்தான் என்பதை 'நம்பவைத்து ஏமாற்றும் சந்திரிகாவின் பாரம்பரியப் பண்பைத் தெரிந்து கொண்டும் தொடர்ந்து அமைச்சுப்பதவியில் ஒட்டிக்கொண்டதன் மூலம் தெளிவாகிறது.

'நாய்க்கு நடுக்கடலிலை போனாலும் நக்குத் தண்ணீ தான்' என்ற பழமொழி நினைவுக்கு வரவில்லையா?

செங்குட்டுவன்

# விடுதலை என்பது தளைகளிலிருந்து விடுபடுதல்

கைத்தொழில் மறுமலர்ச்சியின் விளைவாக உருவாகிய பாரிய கைத்தொழில் நிறுவனங்களின் உருவாக்கம், இலாபத்தை மட்டுமே நோக்காக பெரும் முதலாளிகளால் தொழிலாளர்களை சுரண்டும் போக்கான நீண்ட உழைப்பு நேரம், குறைவான ஊதியம், அடிப்படைவசதிகள் அந்த வாழ்நிலை எனத் தொடர்ந்த நிலைமைகளுக்கெதிராக இன்று உலகம் முழுவதுமே தனது சுரண்டல் வலைப் பின்னலை விரித்திருக்கும் அமெரிக்க ஐக்கிய இராட்சியத்தின் சிக்காக்கோ நகரில் 1885 இல் வீதிகளில் இறங்கிய தொழிலாளர்கள் முதலாளிகளின் கைக்கூலிகளான அரச படைகளின் பயங்கரவாதத்தால் பலியானார்கள். அவர்களின் குருதியில் தோய்ந்த கொடிகளை உயர்த்தியபடி தொழிலாளர்கள் ஐக்கியப்பட்டு போராடிய தன் நிறைவு தினமே மே-01இன் தொழிலாளர் தினமாகும்.

பின்பு மீண்டும் 1908ஆம் வருடம் அமெரிக்க ஐக்கியக் குடியரசுகளின் தலைநகரான நியூயோர்க் நகரில் குளிர் காலத்தையும் பொருட்படுத்தாது ஆடைத் தொழிற்சாலைகளில் பணிபுரியும் முப்பதினாயிரத்துக்கும் மேற்பட்ட பெண்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு வீதிகளில் இறங்கி ஆர்ப்பாட்டம் செய்தனர். பன்னிரண்டு மணித்தியாலங்களுக்கு மேற்பட்ட நீண்ட வேலைநேரம், நாளாந்த வாழ்வை நகர்த்துவதற்கு போதாமல் இருக்கும் ஊதியம், மனிதனின் அடிப்படைத் தேவைகளைக்கூட கணக்கில் எடுக்காத வேலைப் புறச்சூழ்நிலை போன்ற அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்க்கக்கோரியே இவர்கள் வீதிகளில் இறங்கினர். இந்த போராட்டத்தின் அடிப்படை சுலோகமாக "பாணும் ரோசாவும்" (Bread and rose) அமைந்திருந்தது. பாண் பொருளாதாரப் பாதுகாப்பை குறித்து நிற்க, ரோசாவே மேம்பட்ட வாழ்க்கைத் தரத்தை சுட்டிநின்றது. இந்தப் போராட்டமே பின்நாட்களில் சர்வதேச மகளிர்தினம் உருவாகக் காரணமாயிற்று.

இவ்வாறு வாழ்வுக்கும், சாவுக்கும் இடையே போராடிய தொழிலாளர்கள் தம்மிடையே ஐக்கியப்பட்டு போராட்டங்களை வலுப்படுத்தியதால் தமது உரிமைகளை பெற்றுக்கொள்ளும் நிலையை அடைந்தார்கள். இதே வெற்றி 1917இல் தொழிலாளர்கள் தினமாயிற்று.

கம்யூனிஸ்ட்கட்சி ரஷ்ய நாட்டின் ஆட்சி அதிகாரத்தையே கைப்பற்றியது. இதன்மூலம் தொழிலாளர் வர்க்கம் நம்பிக்கையையும் புதிய தெம்பையும் பெற்றுக்கொண்டது. உலகம் எங்கும் பரந்து வலுப்பெற்றது தொழிலாளர் சங்கங்களும் தொழில் கட்சிகளும் இதன் விளைவாக உலகின்பல நாடுகளில் சமதர்ம அரசுகள் தோன்றியது. இது ஒரு புறம்.

இன்னொருபுறம் தொழிலாளர் உழைப்பைச் சுரண்டியும், வலுவற்ற நாடுகளின் வளங்களைச் சுரண்டியும் கொழுத்து பூதாகரமாகிவிட்ட உலகின் மிகப்பெரிய முதலாளியான வல்லரசுகள், இன்று தம்மிடையே திரண்டபாரிய மூலதனத்தின் மூலம் 'கட்டற்ற வர்த்தகம்' எனும் கோட்பாட்டுடன் 'உலகமயமாதல்' வலைப் பின்னலுள் இன்று உலகத்தைச் சிக்க வைத்துள்ளன இன்னும் இலங்கையில் 'சுதந்திர வர்த்தக வலயம்' எனும் திட்டத்தின்கீழ்,இரண்டு இலட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் மிகக்குறைவான ஊதியத்துடன், நீண்ட நேரங்களுக்கு, எவ்வித அடிப்படைவசதிகளும் அற்று சுரண்டப் படுகின்றனர். இதேபோன்று தேயிலைத் தோட்டங்களிலும் ஐந்து இலட்சத்துக்கு மேற்பட்டோர் சுரண்டப்படுகின்றனர். இன்றுவரை அடிப்படை வசதிகள் அற்ற சூழ்நிலையில் மனித நலக்கேடு விளைவிக்கக்கூடிய வகையில் சுரண்டப்படும் தொழிலாளர்கள் தமது நாளாந்த வாழ்வை கொண்டு நடத்தப்போவதாக ஊதியத்தோடு திணறுகின்றன. இதன் விளைவுகளே இன்று அதிக அளவில் கிளம்பியுள்ள தொழிற்சங்கப் போராட்டங்கள் ஆகும்.

இலங்கையைப் பொறுத்தவரை தொழிலாளர் நலன்களுக்காகப் போராட வேண்டிய தொழிற்சங்கங்கள் அரசியற் கட்சிகளின் பின்னே சிதறுண்டு போயுள்ளன. ஒவ்வொரு கட்சியின் பின்னும் ஒவ்வொரு தொழிற்சங்கம். ஒரு கட்சியின் தொழிற்சங்கம் நடத்தும் போராட்டத்தை அடுத்த கட்சியின் தொழிற்சங்கம் முறியடிக்கும். இங்கு தொழிலாளர் நலன்களுக்காகப் போராடுதல் என்பதில் எல்லாத் தொழிலாளர்களுமே சாத்தியமற்ற தாக்கப்படுகிறது. இது ஒருவகையில் பலம் பொருந்திய முதலாளிகளுக்கும், அரசுகளுக்கும் கிட்டியவெற்றியாகும்.அதுமட்டுமல்ல இன்று அரசியல் கட்சிகள் முதலாளிகள், தொழிலாளர் தினத்தை தென்னிந்திய சினிமா நட்சத்திரங்களைக் கொண்டு வந்து களியாட்ட விழாவாக கொண்டாடுவதன் மூலம், தொழிலாளர் எழுச்சி பெறுவதற்கான வாய்ப்புகளை அவர்களின் சிந்தனையை தவறான



வழியில் திசை திருப்புகின்றனர்.


இன,மத,நிறவேறுபாடுகளைக் கடந்து ஐக்கியப்பட்டிருக்க வேண்டிய தொழிலாளர்கள் இலங்கையில் இனவாதம் உச்சம் பெற்றிருந்த காலங்களில் ஒரு பக்கம் "உலகத்தொழிலாளர்களே பாருங்கள்"எனக்கூறிக்கொண்டு மறுபக்கத்தில் "தோசை,வடே,அப்பிட்ட எப்பா" என இனவாத சக்திக்குள் மூழ்கிப் போனதன்பின்பே இடதுசாரிக்கட்சிகளான கம்யூனிஸ்ட்கட்சி, எல்.எல்.எஸ்பி போன்றவற்றில் தமிழ் மக்கள் நம்பிக்கை இழந்தனர். கொல்பின்.ஆர்.டி.சில்வா,எஸ்.எம்.பெரேரா போன்றவர்கள் இனவாதசக்திகளுடன் இணைந்து தமிழ்மக்களின் மீதான ஒடுக்குமுறைக்கு துணைபோன பின்பு அவர்கள் மீதான நம்பிக்கையை தமிழ் தொழிலாளர்கள் எப்படிவைத்திருக்க முடியும்.

இன்று தமிழ்தேசியத்தின் அணிதிரள் கையின்கீழ், தொழிலாளர் தினம் எழுச்சிமிகு அடையாளங்களுடன் கொண்டாடப்படுகிறது. விடுதலை என்பது எல்லா வகையான அடக்குமுறைகளில் இருந்தும் விடுதலை அடைவதேயாகும் என்பதே இன்றைய மேதின எழுச்சியின் அடிப்படையாகும்.

*இலங்கையைப் பொறுத்தவரை தொழிலாளர் நலன்களுக்காகப் போராட வேண்டிய தொழிற்சங்கங்கள் அரசியற் கட்சிகளின் பின்னே சிதறுண்டு போயுள் ளன. ஒவ்வொரு கட்சியின் பின்னும் ஒவ்வொரு தொழிற்சங்கம். ஒரு கட்சியின் தொழிற்சங்கம் நடத்தும் போராட்டத்தை அடுத்த கட்சியின் தொழிற்சங்கம் முறியடிக்கும். இங்கு தொழிலாளர் நலன்களுக்காகப் போராடுதல் என்பதில் எல்லாத் தொழிலாளர்களுமே சாத்தியமற்ற தாக்கப்படுகிறது. இது ஒருவகையில் பலம் பொருந்திய முதலாளிகளுக்கும், அரசுகளுக்கும் கிட்டியவெற்றியாகும்.*

**அன்ரன் அன்பழகன்**

## மதவடி மயிலர்



காலம் கெட்டுப்போச்சு.....!

பிக்குமார்களே கட்சிதாவி குத்துக்கரணம் அடிக்கிறார்கள். பிக்குமாரைநோக்கி புத்தகங்கள் பயில்கள் மற்றும் ஏதேதோ பொருட்கள் வீசப்படுகின்றன.... தட்டையா, மொட்டையா... என சிங்களத்தில் கேலி வார்த்தைகள் பாராளுமன்றத்தில் பகிரங்கமாகவே பறக்கின்றன.... பௌத்த தர்மவான்கள் சனநாயக தர்மவான்களின் செயல்களின் முன்னால் தடுமாறி நிற்கின்றன.... அரச பீடத்தை வெறுத்து துறவியானவரான புத்த பகவானின் பாதையில் வந்தோர்.... அரச பீடத்தை நோக்கி அடியெடுத்து வைத்து சித்தாத்தர்கள் ஆனதில் இந்த அவமானங்களை சந்திக்க வேண்டியநிலை வந்தது சோகமானதே....!

பேரினவாதமே... பேரினவாதத்தை தாக்கியதில் அரசியல் வாதிகளின் சுயநலம் அப்பட்டமானது மகிழ்ச்சியே... புத்தபிக்குகளே... இனிமேலாவது உங்கள் பாதம் பணியும் அரசியல் வாதிகளுக்கு ஆசீர்வாதம் வழங்காதீர்கள்.... பிரித் ஓதி அவர்களிடம் தானம் வாங்காதீர்கள்... அவர்கள் அடுத்து உங்களை நோக்கி எறிவது கைக்குண்டாகவும் இருக்கலாம்...!

□□□□□

என்ன மயிலர் நடையை மாத்திட்டார் என்றா நினைக்கிறீர்கள்... எல்லாம் ஒரு 'சேன்ச்'சுக்குத்தான் பாருங்கோ.. நடை தான் மாறிட்டதேயொழிய ஆள் மாறவில்லை... கன விசயத்தைப்பற்றி கொஞ்சம் சொல்லுறதிலும் பார்க்க சில விசயத்தைப்பற்றி கனக்கச்சொல்லலாமெல்லோ.

என்ன நான் சொல்லுறது உங்களுக்கு விளங்கும் தானே....!

செயலுக்கு சிறந்த சன்மானம் , மேலும் செயலாற்ற வாய்ப்பே என்று நான் கருதுகிறேன். - ஜோனால் எட்வர்ட் ஸால்க்

நேர் நோக்கு

# நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும்

சமாதானப் பேச்சு வார்த்தைக்கான முன்னோடி நடவடிக்கைகள் சில வற்றை எடுப்பது போன்றதொரு தோற்றப்பாட்டை ஏற்படுத்த சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க முயன்று வருகின்றார். சபாநாயகர் தெரிவுப் போட்டியில் தோல்வியடைந்ததையடுத்து உடனடியாகவே அவர் நோர்வேப் பிரதமரைத் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு ஏற்பாட்டாளராக செயற்படுமாறு கேட்டுள்ளார்.

இது சமாதானப் பேச்சுவார்த்தைகளைத் தொடருவதில் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு உள்ள பற்றுறுதியைக் காண்பிக்கிறதா? அல்லது சமாதான முயற்சிகளைத் தொடரப்போவதாகத் தேர்தல் காலத்தில் மக்களுக்கு வழங்கும் வாக்குறுதியை நிறைவேற்றும் நோக்கிலானதா? அல்லது அவரது வழமையான ஏமாற்றும் பாணியிலான நடவடிக்கையா? என்பதெல்லாம் எதிர்காலத்தில் தெரிய வரும்.

சமாதானத்தில் அவர்கொண்ட - விருப்பம் அல்லது மக்களுக்கு வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றும் நோக்கம் மேற்படி அழைப்பில் இருக்குமாயின் அது வரவேற்கத்தக்கதே. ஆனால் சந்திரிகாவின் இந்த அழைப்பின் நோக்கம் அதுதான் என்பதை நம்புவதற்கான வலுவான காரணம் எதுவும் ஏற்பட்டுவிட வில்லை என்பது தான் இங்கு பிரச்சினை.

. முதலாவதாக நோர்வேநாடானது இலங்கையின் சமாதான முயற்சிகளில் கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக நல்ல பங்காற்றியிருக்கிறது. சமாதான முயற்சிகளுக்கு நிறைவேற்று அதிகாரம் கொண்டசனாதிபதியாகிய சந்திரிகாவினால் கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலான காலப் பகுதியில் இடப்பட்ட முட்டுக் கட்டைகளை வலுவிழக்கச் செய்வதில் நோர்வே சிறந்த முறையில் செயற்பட்டிருக் கிறது.

இறுதியாக விடுதலைப்புலிகளைப் பிளவுபடுத்தி பலமிழக்கச் செய்து தமிழ்த் தேசியத்தைச் சிதைக்கும் நோக்குடன் கருணாவுக்கு தூண்டுதலாகவும் ஆதரவாகவும் சிறிலங்காவின் அதிகாரசக்திகள் செயற்பட்டபோது நோர்வே தனது நிலையை தெளிவாக வரையறுத்திருந்தது இது. அது தொடர்ந்தும் தமிழர் தரப்பின் நம்பிக்கையைத் தக்கவைக்க உதவியிருக்கிறது.



ஆனால் நோர்வேயின் முயற்சிகளைத் தொடர்ச்சியாகக் குறை கூறி, அவற்றை எதிர்த்து அவற்றுக்கு முட்டுக்கட்டை போட்டு வந்தவர் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இப்பொழுதும் கூட நோர்வே தனது எல்லையை மீறிச்சென்றமையினாலேயே தாம் நோர்வேயின் நடவடிக்கைகளை அப்போது எதிர்த்ததாக சந்திரிகா குமாரதுங்கவின் கட்சியினர் கூறி வருகின்றனர். அதேவேளை நோர்வேயின் பங்களிப்பை முற்றுமுழுதாக எதிர்த்தவர்கள் ஜே.வி.பி.யினர். ஏற்பாட்டாளர் நிலையிலிருந்து நோர்வே அகற்றப்படவேண்டும். என்பது ஆரம்பகாலம் முதலே இவர்களின் நிலைப்பாடாகும்.

இந்நிலையில் திடீரென இவர்கள் நோர்வேயில் நம்பிக்கைவைத்து சமாதானமுயற்சிகளைத் தொடருமாறு கேட்பார்கள் என்பது நம்புவதற்குரிய விடயமல்ல. எனவே இவர்களின் இந்த வேண்டுகோளின் பின்னணியில் வழமையான நோக்கங்கள் எதனையும் கொண்டிருக்கலாம் என எண்ண இடமுண்டு.

சிறிலங்காவுக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் வரும் மாத நடுப்பகுதியில் நடைபெறவுள்ளது. இதில் உதவிவழங்கும் நாடுகள் கலந்து கொள்ளவுள்ளன அவை நிதி உதவியுடன் சமாதான முயற்சிகளை இணைத்து வைத்துக் கொண்டுள்ளன. அதாவது சமாதான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டால் மட்டுமே நிதி உதவி என வலியுறுத்தி வருகின்றன.

நோர்வேயின் சமாதான முயற்சிகளின் பின்னணியில் பெரும்பாலும் இந்நாடுகளே உள்ளன. எனவே நிதிவழங்கும் நாடுகளின் மாநாட்டின் போது சமாதான முயற்சிகள் மீண்டும் ஆரம்பமாகியுள்ளதுபோல நம்பவைக்கும் தேவை சனாதிபதிக்கு உள்ளது.

அதேவேளை கடந்தகாலங்களில் இந்தியா சமாதானமுயற்சியில் ஈடுபட முன்வரவேண்டும் என சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் ஜே.வி.பி.யும் வலியுறுத்திவந்தன ஆனால் இப்பொழுது ஜே.வி.பி.யுடன் கலந்தாலோசித்தபின்பே நோர்வேக்கு அழைப்பு விட்டிருப்பதாக ஜே.வி.பி.யே ஒப்புக்கொண்டிருப்பது சமாதான முயற்சி ஆரம்பமாகிவிட்டது போன்றதொருதோற்றத்தை ஏற்படுத்த வேண்டியதேவை புதிய அரசாங்கத்திற்கு ஏற்பட்டிருப்பதை வெளிப்படுத்துகிறது.

தேர்தல் சமயத்தில் வெளிநாடுகளின் உதவிகள் தமக்குத் தேவையில்லை என ஜே.வி.பி. கூறியிருந்தாலும் ஆட்சியை நடத்த அது இல்லாமல் முடியாது என்பது அதற்குத் தெரியும்.

இதேவேளை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி உள்ளகக் கருத்து வேறுபாட்டால் இழுபறிச்சிக்கலுக்குள் இருந்தாலும் ஆட்சியைத் தொடருவதானால் பாராளுமன்றத்தில் இணைந்து செயற்படுவதைத் தவிரவேறு வழியில்லை. அவ்வாறே இணைந்து செயற்படும் என்பதும் சபாநாயகர் தெரிவில் வெளிப்பட்டிருக்கிறது.

அவ்வாறு செயற்பட்டும் சபாநாயகர் தெரிவில் அது தோல்வியைத் தழுவ வேண்டியேற்பட்டது. இந்நிலை தொடருமாயின் நிறைவேற்றுஅதிகாரம் இருந்தாலும் நாடாளுமன்றத்தின் செயற்பாட்டிற்கு அது குந்தகம் விளைவிப்பதாகவே இருக்கும். ஹெலஉறுமய நா.உ.களின் ஆதரவை பெறுவதை அதற்குப்பதிலீடாக சு.க.கொள்கிறது. ஆனால் ஜே.வி.பி ஹெலஉறுமயவுடன் முரண்பாடுகளை வளர்த்துவருகிறது.

இதேவேளை நாடாளுமன்றத்தில் மூன்றாவது நிலையிலிருக்கும் தமிழரசுக் கட்சியை நோக்கி சந்திரிகா அரசின் கவனம் திரும்பியிருப்பதையும் நோர்வே அரசுக்கான அழைப்பு வெளிக்காட்டுகிறது.

சமாதான முயற்சிகள் எதனையும் சந்திரிகா அரசு முன்னெடுக்காமையே சபாநாயகர் தெரிவில் ஐ.தே.கவுக்கு ஆதரவளிக்கக் காரணம் என தமிழரசுக்கட்சி கூறியிருக்கிறது. எனவே சமாதான முயற்சியொன்று ஆரம்பிக்கப்பட்டுவிட்டது என்பதைக் காட்டுவதன் மூலம் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு தமிழரசுக் கட்சியினர் ஆதரவாக நிற்கா விட்டாலும் ஐ.தே.க.வுக்கு ஆதரவாக நிற்பதையும் தடுத்துவிட முடியும் என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி எண்ணியிருக்கலாம்.

எவ்வாறாயினும் சமாதானமுயற்சி சுமுகமாகத் தொடர்வதற்கும் அது வெற்றியளிப்பதற்கும் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அரசு எடுக்கும் முயற்சிகள் பயன் தரத்தக்கனவாக அமைவதற்கான வாய்ப்புகள் இப்பொழுது குறைவாகவே உள்ளது. உண்மையிலேயே சமாதான முயற்சிகளில் ஈடுபடுவதாயிருந்தால் தமிழ்த்தேசியத்தை சூழ்ச்சிமூலம் அழிக்கமுடியும் என நினைத்து விடுதலைப்புலிகளால் வெளியேற்றப் பட்டோருக்குப் புத்துயிரளிக்க முயல்வதைக் கைவிடவேண்டும்.

தமிழ்த்தரப்பின் நம்பிக்கைக்கு உரியமுறையில் நடந்துகொள்ளாத எந்தச் சிங்கள அரசும் சமாதானத்தைக் கொண்டு வந்துவிட முடியாது.

**வேலவன்**

---

# துரும்பால் மலையை அசைக்க முடியாது?

மட்டக்களப்பு ஆயித்தியமலையில் புலிகளின் முகாம் ஒன்றின் மீது துரோகி கருணா குழுவினர் மேற்கொண்ட தாக்குதலில் போரில விழுப்புண்ணடைந்து அங்கங்கள் இயங்கா திருந்த போராளிகள் உட்பட ஏழுபோராளிகள் வீரச்சாவடைந்துள்ளனர்.

துரோகி கருணா குழுவினரின் இந்தத்தாக்குதலானது அவர்கள் எந்த நோக்கத்தின் அடிப்படையில் மேற்கொள்கிறார்களோ அதன் இலக்கை எட்டப் போவதில்லை.

ஆனால் துரோகி கரணா குழுவினரை தாயகமண்ணிலிருந்து புலிகள் இயக்கம் அகற்றியபோதும் அவர்களுக்கு பாதுகாப்பளித்து அவர்களை ஏவி ஒரு இராணுவத்தாக்குதலை செய்வதற்கான பின்னணியில் சிறிலங்கா படைத்தரப்பு இருந்துள்ளது.

துரோகி கருணா குழுவின் செயற்பாடானது அரசுக்கும் - புலிகளுக்குமிடையிலான சமாதான முயற்சிக்கும் நடைமுறையில் இருக்கும் யுத்த நிறுத்தத்திற்கும் பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய சூழலிலிருந்த பின்னணியில் புலிகளின் தலைமை மிக விரைவாக கருணாவின் செயற்பாடுகளை களைந்து தமிழர் தாயகப்பிரதேசங்களிலிருந்து அப்புறப்படுத்தியிருந்தனர்.

இதன்மூலம் புலிகள் இயக்கம் சமாதான முயற்சிமற்றும் தொடரும் யுத்தநிறுத்தம் என்பவற்றுக்கு பங்கம் ஏற்படாதவாறு புலிகள் சமாதானத்துக்கான சுமுகச்சூழலை ஏற்படுத்தியிருந்தனர்.

ஆனால் இதற்கு புறம்பாக கருணாகுழுவை ஆரம்பத்திலேயே பாதுகாப்பதிலும், அவர் பாதுகாப்பாக தமிழர் தாயகத்திலிருந்து வெளியேற சிறிலங்கா படைத்தரப்பும், குறிப்பாக சிறிலங்கா இராணுவத்தளபதி லயனல் பலகல்லவும் நேரடியாக பங்காற்றிவந்ததுடன், பங்காற்றியும் வருகின்றனர்.

துரோகி கருணாவை சிறிலங்கா படைத்தரப்பு பாதுகாக்க முயல்வதும் அந்தக் குழுவைக் கொண்டு புலிகள் மீது தாக்குதல் நடத்துவதும் இலங்கையின் அமைதிவழி தீர்வு முயற்சிகளுக்கான பாதையில் படைத்தரப்பு போடும் முட்டுக்கட்டையாகவே அமையும்.

ஏனென்றால் ஒரு புறம் சமாதான நடவடிக்கைகளும் மறுபுறம் தாக்குதலும் என இருவேறுபட்ட நிலையில் பிரச்சினையை சிறிலங்கா படைத்தரப்பு கையாள முயல்வதையே காட்டுகிறது.



படைத்தரப்பின் இச்செயற்பாடானது தனித்து இராணுவத்தரப்பின் முயற்சி என்று கற்பிதம் செய்து கொண்டு புறந்தள்ளிவிட முடியாது. பதிலாக இந்த செயற்பாடானது அரசின் பூரண அங்கிகாரத்துடன் மேற்கொள்ளப்படும் ஒரு முயற்சியாகவே கொள்ளவேண்டும்.

அத்தோடு அரசதரப்பை நம்பி சமாதான முயற்சியில் எத்தனை தூரத்துக்கு புலிகள் செயற்படமுடியும் என்ற கேள்வியையும் எழுப்புகிறது.

ஏனென்றால் சமாதான முயற்சிகள் தொடரப்படவேண்டுமானால் புலிகள் இயக்கத்தின் முக்கியஸ்தர்கள் சுதந்திரமாக நடமாட வேண்டிய ஒரு சூழல் உள்ளது.

ஆனால் அத்தகையதொரு நிலைக்கு முறணானவகையிலே கருணா குழுவை படைத்தரப்பு பயன்படுத்தமுனைகிறது.

இது தொடரும் சமாதான நடவடிக்கைகளை பாதிப்பதோடு சமாதான முயற்சிகளை குழப்ப சிறிலங்கா படைத்தரப்பை அரசு பயன்படுத்தமுனைகிறதா என்ற கேள்வியையும் எழுப்புகிறது.

ஆரம்பம்முதலே சமாதானத்துக்கு விரோதமான செயற்பாடுகளில் ஈடுபட்ட சிறிலங்கா படைத்தரப்பின் தாக்குதலால் புலிகள் தரப்பில் பல போராளிகள் வீரச்சாவடைய வேண்டிய தொருநிலை ஏற்பட்டுள்ளது.

சமாதான காலத்தில் புலிகள் இழந்த போராளிகளின் இழப்பு என்பது சமாதானத்துக்காக செய்யும் தியாகம் என்றவகையில் இனியும் தொடரப்படக்கூடாது.

இவ்வாறான தொருநிலை தொடரப்படுமாயின் சமாதானம் முறிவதற்கான பாதையில் பயணிக்கத் தொடங்கிவிட்டதென்றே கொள்ள வேண்டிவரும்.

இவ்வாறு சமாதானத்தை உண்மையாக கொழும்பு அரசு விரும்புமானால் தங்கள் கரங்களில் கிட்டும் அற்ப துரும்புகளை பயன்படுத்தி புலிகளை அசைக்க முற்படும் செயற்பாடுகளை கைவிட்டு உண்மையான சமாதானத்துக்கு பணியாற்ற முனையவேண்டும்.

அப்போது மட்டும் தான் உண்மையான சமாதானமும் சகவாழ்வும் இலங்கைத்தீவில் மிரளக்கூடியவாய்ப்பு உண்டு.

பதிலாக துரும்பை பயன்படுத்தி மலையை அசைக்க முனையும் மூடர்களாகவே அரசு இருக்கும்.

**நக்கீரர்**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கு தமிழ் மக்கள் அளித்த ஆதரவு பற்றி எங்கும் பேசப்படுகிறது. உண்மையில் பெற்றுள்ள வெற்றி அமோகமானது தான் எனினும் தமிழர்களிடமிருந்து பறிக்கப்பட்ட ஆசனங்கள் பற்றி நாம் ஏன் அலட்டிக்கொள்ளவில்லை.

குறிப்பாக திருகோணமலை. திருகோணமலையில் 1947ம் ஆண்டில் தமிழர்கள் பெற்ற வெற்றிவாய்ப்பு. 2004ல் மிக,மிக குறைந்துள்ளமைக்கு என்ன காரணம்.



300 km நீளமும் 210 km அகலமும் கொண்டது. இந்துமாகடலில் ஒரு முக்கியமான, ஒரு கேந்திர நிலையமாகும். இத்தீவின் கிழக்குப் பகுதியில் உள்ள தென் தமிழீழப் பிரதேசத்திலேயே திருகோணமலை அமைந்துள்ளது. இத் துறைமுகத்திலுள்ள வசதிகளும் நன்மைகளும் அதிகமாகும்.

துறைமுகத்தினுள்ளே ஏறக்குறைய 10 பாகத்துக்குமேல் ஆழமான நீரைக் கொண்டுள்ளது. இதனால் எந்தப் பெரிய கப்பலும் துறை முகத்தினுள் இலகுவாக வர முடியும். துறை முகத்தை அண்டிய பகுதிகள் மலைக் குன்றுகளாக அமைந்துள்ளது. எனினும் துறைமுகம் பாறைகள் எதுவும் இல்லாத இடமாக உள்ளது. இதனைச் சுற்றி மலைகளைக் கொண்ட குடாக்கடல்கள் பல காணப்படுகின்றன இதுவும் இத்துறை முகத்துக்கு ஒரு பாதுகாப்பானது.

மலைகளைக் கொண்ட இக் குடாக்கடல் புயல். சூறாவளி போன்ற இயற்கை அழிவுகளின் போதும்,கப்பல்கள் அதிகம் பாதிக்கப்படாதவாறு கட்டிவைக்க உதவும். மேலும் இம்மலைக் குன்றுகள் துறைமுகத்தின் நுழை வாயில்களை குறைத்தும் வைத்துள்ளது. இதைவிட திருகோணமலைத் துறைமுகத்துக்கு மிக அருகில் அமைந்திருப்பது இதன் முக்கியத்துவம்.

அத்துடன் இதனருகே ஒரு பாரிய தொழிற்சாலை அமைக்கப்பட்டுள்ளது. அதுதான் 'பிறிமா' ஆலை என்ன கேள்விப்பட்ட பெயராக உள்ளதா. அதேதான், கோதுமைமாச்சாக்குகளில் அச்சிடப்பட்டுள்ள பெயர். இது 1977 ல் இலங்கை வரையறுக்கப்பட்ட கம்பனி யொன்றுடன் செய்து கொண்ட ஒப்பந்தப்படி 1980 நவம்பர் மாதம் திறக்கப்பட்டது. இவ்வாலையானது, நாளொன்றுக்கு 3200 மெற்றிக் தொன் மாவை அரைக்கக் கூடியது.

இனி, இந்தத் துறைமுகம், எண்ணெய்க்குதம், பிறிமாஆலை போன்றவற்றில் இருந்து பெற்றுக்கொள்ளப்படும் நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்புக்களை திருகோணமலைவாழ், தமிழ் மக்கள் பெற்றார்களா? என்றால் இல்லை.

பிறிமா ஆலைக்கு மட்டும் 691 சிங்களவர் வேலைக்கமர்த்தப் பட்டனர். துறைமுகத் தொழிலாளர்கள் என இவர்கள் அனைவரும் துறை முகத்தை அண்டிய நிலங்களிலேயே குடியேற்றப்பட்டனர்.

துறைமுகத்துக்கென ஒதுக்கப்பட்ட நிலங்களிலேயே இவர்கள் குடியேற்றப்பட்டனர் ஆரம்பத்தில் இந்தத் திருகோணமலைத்துறை முகத்துக்கெனப் பதினாறு ஏக்கர் நிலமேயிருந்தது. பின்னர் இது படிப்படியாக விஸ்தரிக்கப்பட்டது. திருகோணமலைக் கடற்பரப்பில் 2623 ஹெக்டேயரும் நிலப்பரப்பில் 5261 ஹெக்டேயர் பரப்பும் துறை முகத்துக்கென ஒதுக்கப்பட்டுள்ளது. (1ஹெக்டேயர் சுமார் 2 1/2ஏக்) சீனன் குடாவில் எண்ணெய் சுத்திகரிப்பும் நடைபெறுகிறது. கொலன்னாவை யிலிருந்து கப்பல்கள், புகையிரதங்கள், லொறிகள் போன்றவற்றின் மூலம் எண்ணெய் கொண்டு வரப்பட்டு களஞ்சியப் படுத்தவும் விநியோ

காணிகமிஷனருடனும் வந்த சிங்களவர்கள் இவர்கள் வீடுகளில் 43
ஐ அழித்தொழித்தனர்.

இதுமட்டுமல்ல 1983ம் ஆண்டு ஆடி இருபத்தி நான்காம் திகதி திருகோணமலையிலுள்ள ஒரு அகதி முகாமிலிருந்து 500 அகதிகள் அனைவரும் தமிழ் அகதிகள் தாமிருந்த முகாம்களிலிருந்து இராணுவத்தினரால், பலவந்தமாக அரசாங்க பஸ் வண்டிகளில் ஏற்றிச் செல்லப்பட்டு, மலை நாட்டுக்குக் கொண்டுசென்று அங்கு பல இடங்களில் இறக்கிவிடப்பட்டனர். அவர்கள் இருந்த அந்த இடங்களிலெல்லாம் சிங்களவர்கள் அத்து மீறிகுடியேறினார்கள்.

ஆரம்பத்திலிருந்தே அதாவது இலங்கை சுதந்திரமடைந்த காலத்திலிருந்தே எங்களிடமிருந்து பறிக்கப்பட்ட கந்தளாயில் இரண்டு தொழிற்சாலைகளைக் கட்டி அதன் தேவைகளுக்கென சிங்களவரைக் குடியேற்றியது இலங்கை அரசு. கரும்புச் செய்கைக்கென அமகடத்திய நிலத்தில் சாராயவடிசாலை, சீனித்தொழிற்சாலை என்பன சிங்களவர்களுக்காக அமைக்கப் பட்டது. வேலை வாய்ப்புடன் குடியேற்றமும் வழங்கப்பட்டது.

திருகோணமலையைப் பொறுத்தவரை புல்மோட்டையில் 'இல்மனைற்', 'றூட்டைல்', 'மொனோசைட்', சேர்கோன் போன்ற கனிய வளங்கள் நிறைந்துள்ளன. குச்ச வெளியிலுள்ள முருங்கைக் கற்களும் கடற்கரையோரமாகக் காணப்படும் மண்ணும் கைத்தொழிலுக்கான மூலப் பொருட்களாகும்.

இவற்றை இலங்கை அரசிடமிருந்து வெளிநாடுகள் பெற்றுக் கொண்டுள்ளன. உதாரணமாக - புல்மோட்டையைப் பிரித்தானியாவும், சீனன் குடாவை அமெரிக்கா மற்றும் அண்மையில் இந்தியாவும் பயன்படுத்த அனுமதித்துள்ளது. இதில் வரையறுக்கப்பட்ட கொழும்பு 'டொக்யாட்' கம்பனியும் அடங்கும் இது 1981 லிருந்து கப்பல் திருத்தல், கப்பல் கட்டுதல் போன்ற வேலைகளைச் செய்கிறது.

இவற்றுடன் இப்போது டோக்கியோவும் வந்து சேர்ந்துள்ளது. அலைதாங்கியொன்றை வாரப் பட்டியல் முறையில் இது இயக்கி வருகிறது.

இவ்வாறு திருகோணமலையின் முக்கியத்துவம் பெரிதும் உலக நாடுகளின் கவனத்தை ஈர்த்துள்ளது.

# ஏன் குறைகிறது? எப்படிக் குறைகிறது?

பத்து வருடங்களுக்கு ஒரு முறை எடுக்கப்படவேண்டிய குடிசன மதிப்பீடு 1981 ம் ஆண்டுக்குப்பின் இதுவரை சிறிலங்காவில் எடுக்கப்படவில்லை. இருபத்தி மூன்று ஆண்டுகளாக இருப்பு எடுக்காமலே செலவைக் கணக்கிடும் அரசாங்கம் சிறிலங்கா அரசாங்கம்.என மேலோட்டமாகத் தெரிந்தாலும், இதன் பின்னணியில் வேகமாக மாறிவரும் தமிழ்ப்பிரதேசங்களின் சிங்கள வாக்காளர் தொகை வெளிவராமல் இருக்கிறது. என்றாலும் தேர்தல் காலங்களில் இது தன்னை வெளிப்படுத்தி நிற்கிறது.

திருகோணமலையின் குடிசன விகிதம் 1981 வரை இப்படித்தான் வளர்ந்து வந்துள்ளது.

சரி இப்படி தமிழர்களின் தொகை வீழ்ச்சியடைய என்ன காரணம். இதுபற்றி அறிய நாம் திருகோணமலை பற்றி அறிய வேண்டும்.

திருகோணமலையின் சிறப்பு அதன் அமைவிடம். இந்துமா கடல் பிராந்தியத்தில் இந்தியாவின் தென்புறமாக 40 கி.மீற்றர் தொலைவில்

இத் துறைமுகத்தின் அமைப்பு உட்புறத் துறைமுகம், வெளிப்புறத் துறைமுகம் என இரு பெரும் பிரிவுகளாக உள்ளன. உட்புறத்துறை முகத்தில் நிற்கும் கப்பல்களை எதிரிக் கப்பல்கள் கண்டு கொள்வது மிகவும் கடினமாகும். உட்புறத் துறைமுகத்தில் நுழைவதற்கு ஒரு வழிப்பாதை மட்டுமே இருப்பதுடன் இப்பாதையின் இருமருங்கிலும் பாரிய மலைகள் உண்டு இம்மலைகளிடையே இடைவெளி குறைவாகவே இருப்பதனால் எதிரிகளை இலகுவாக முறியடித்து விடலாம் அத்துடன் பாரிய எண்ணெய்க் குதங்களையும் இத்துறைமுகம் கொண்டிருக்கிறது.

இத்துறைமுகத்தை தத்தம் கட்டுப்பாட்டினுள் வைத்திருக்கப் பல வல்லரசுகள் போட்டியிடுகின்றன.சீனன் குடா எண்ணெய்க்குதம்.

சீனன் குடா எண்ணெய்க் குதம் 1972 - 82 காலப்பகுதியிலே பிரித்தானியாவால் நிர்மாணிக்கப்பட்டது.

ஒவ்வொன்றும் 10 லட்சம் லீற்றர் கொள்ளளவுடைய 101 குதங்களைக் கொண்டது.

கிக்கவும் கூட சிங்களத் தொழிலாளரே இருக்கின்றனர்.

துறைமுகப் பகுதிகளில்

| ஆண்டு | தமிழர் | முஸ்லிம் | சிங்களவர் |
|---|---|---|---|
| 1827. | 81.8% | 16.9% | 1.3% |
| 1891. | 66.4% | 25.0% | 4.3% |
| 1911. | 57.9% | 32.6% | 3.8% |
| 1946. | 44.5% | 30.6% | 15.3% |
| 1963. | 39.1% | 30.8% | 29.6% |
| 1981. | 36.4% | 29.0% | 33.6% |

இப்படிச் சுவீகரிக்கப்பட்ட நிலத்தில் ஏற்கெனவே குடியிருந்த தமிழர்கள் 1983ம் ஆண்டு வன் செயல்களின் போது

## தமிழ்க்கவி

இராணுவத்தின் உதவியோடு வந்த சிங்களவர்களால் விரட்டப்பட்டு அவர்களது உடைமைகளும் அழிக்கப்பட்டன. அதன் பின்னரான காலத்தில் மீளவும் தமது நிலங்களில் தமிழர்கள் வாழத்தலைப்பட்டனர். 1984ம் ஆண்டு ஆடி மாதம் இருபத்தி நான்காம்திகதி கடற்படையுடனும் இராணுவத்துடனும் சிங்கள உதவி

இவை தவிர நேரடியாக நடாத்தப்படும், நடாத்தப்பட்ட குடியேற்றங்கள் பற்றியும் பார்த்தால் அதிர்ச்சி ஏற்படும். தமிழர்கள் திரும்பவும் திருகோணமலைக்குள் தத்தம் இடங்களுக்குப் போகத் தவறினால் எதிர்காலத்தில் பெரும் வெற்றிகளை நாம் தவறவிடலாம்.

இதே வேளை திருகோணமலை இவ்வாறு திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்களால் தமிழர்களிடமிருந்து தமிழர் நிலம் பறிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது.

பொதுவுடைமைவாதி என்பவன் யார்? சமமாய் இல்லாத வருவாயைச் சமமாக பங்கீடு செய்யத் துடிப்பவனே, பொதுவுடைமைவாதி. - எபனெஸர் ஈலியட்



# உயிர்ப்புடன் இருக்கும் ஒரு போராயுதம்...

**அன்பரசு**

கண்ணிகள் பதினைந்தாம் நூற்றாண்டு நடுப்பகுதியில் கண்டு பிடிக்கப்பட்டன. உடனடியாகவே கண்ணிகள் ஒரு போராயுதமாகப் பயன்படத் தொடங்கினாலும் இருபதாம் நூற்றாண்டில் தான்அவை பெரும் எண்ணிக்கையில் பயன்படத் தொடங்கின. கண்ணிகளின் காலம் என்று இந்த நூற்றாண்டைப் பெரும்பாலான ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். அவை கடற் கண்ணிகள், தரைக் கண்ணிகள் என்று இரு வகைப்படுகின்றன. கடற்கண்ணிகள் கடலிலும், தரைக்கண்ணிகள் நிலத்திலும் வைக்கப் படுகின்றன. படுவேகமாக மேம்படுத்தப்பட்ட போராயுதமாக கண்ணிகள் இடம் பெறுகின்றன. 226வகை நிலக் கண்ணிகள் இருப்பதாக ஐ.சி.ஆர்.சி மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன.

இரண்டாம் உலகப்போர் முடிந்த பின்(1945)400மில்லியன் நிலக்கண்ணிகள் ஏறத்தாழ 64நாடுகளில் நடந்த பெரிய மற்றும் சிறிய ரகப் போர்களில் புதைக்கப்பட்டன. கோரியப்போர் (1950-1953), வியற்நாம் போர் (1946-1975) கம்போடியாவின் கமரூஷ் போர் (1975-1978) போன்றவற்றில் பெருமளவு நிலக் கண்ணிகள் புதைக்கப்பட்டன. அங்கோலா, ஆப்கானிஸ்தான், சோமாலியா ஆகிய போர்ப் பிராந்தியங்களிலும் நிலக்கண்ணி ஆபத்து மேலோங்கியுள்ளது. கம்போடியாவில் புதைக் கப்பட்ட கண்ணிகளின் எண்ணிக்கை அங்கு வாழும் மக்கள் தொகையிலும் பார்க்கக் கூடுதலானது நாளாந்திரம் மக்கள் இந்த நாட்டில் கொல்லப்படுகின்றனர் அல்லது படுகாயமடைகின்றனர். இதுவரையில் 35,000பேர் கம்போடியாவில் உடலுறுப்புக்களை இழந்துள்ளதாகப் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

1991ல் ஆரம்பித்த பொஸ்னியா போரில் ஆறு மில்லியன் நிலக் கண்ணிகள் 43மாதகாலத்தில் புதைக்கப்பட்டன. பெரும்பாலான கண்ணிகள் தாங்கி எதிர்ப்புக்கண் ணிகளாகவும், மனிதர் களைத் தாக்கும் கண் ணிகளாகவும் அமைந்தன. தாங்கி எதிர்ப்புக் கண்ணிகள் TMA4 என்றும் மனித எதிர்ப்புக் கண்ணிகள் PMA3 என்றும் வகைப்படுத்தப் படுகின்றன. அடையாளம் காண்பதற்கு மிகவும் கடினமானவையாக தாங்கி எதிர்ப்புக் கண்ணிகள் பொஸ்னியாவில் காணப்பட்டன.

புதைக்கப்பட்ட கண்ணிகளை மோப்பம் பிடிப்பதற்குப் பயிற்றப்பட்ட அல்சேஷன் இன நாய்களை அமெரிக்காப் படைகளின் கண்ணி அகற்றும் பிரிவினர் பயன்படுத்தினர். மிகவும் குறைந்தளவு உலோகம் கலந்து செய்யப்பட்ட நிலக் கண்ணிகளை அடையாளம் காட்டும் சைபெல்கருவிகளையும் (SCIEBEL MINE DETECTORS) அமெரிக்க அமைதிப்படைகள் பொஸ்னியாவில் பயன்படுத்தின. சில பகுதிகளில் கண்ணிகளைச் செயலிழக்கச் செய்யும் நுரைப்படலத்தை அமெரிக்கப் படைகள் பரப்பின சில நிமிடங்களில் இந்தநுரை கடினமாகி கண்ணி வெடிப்புக்களைத் தடுத்து விடும். அதன்பின் நுரையின்கீழ் அமிழ்ந்து போயுள்ள கண்ணிகளைத் தகர்க்கமுடியும். தேவைப்பட்டால் கண்ணிகளை வெளியேற்றும் விசேட உழவு எந்திரத்தைப் பயன்படுத்துவார்கள். குமிக்கப்பட்ட கண்ணிகளை வெடிக்க வைத்துத் தகர்ப்பார்கள். ரிஎன்ரி(TNT) சீ4(C4) போன்ற வெடிபொருட்களை இதற்குப் பயன் படுத்துவார்கள்.

இரண்டாம் உலகப்போர் முடிந்தசில காலத்தின் பின் நிலக்கண்ணிகளைத் தடை செய்ய வேண்டும் என்ற சர்வதேச இயக்கம் வலுவடையத் தொடங்கியது. சில கண்ணி வகைகளையாவது இல்லாதொழிக்க முதற்கட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று குரல் கொடுக்கப்பட்டது. அத்தோடு இன்றைய போரியல் நடைமுறைகளில் நிலக்கண்ணிகளின் பயன்பாடு மிகவும் குறைந்தது என்ற அபிப்பிராயமும் மேலோங்கத் தொடங்கியது. நிலக் கண்ணிகளால் வெற்றிதோல்விகள் நிர்ணயிக்கப் படுவதில்லை என்ற கருத்தை சில மேற்கின் அதியுயர் இராணுவ அதிகாரிகள் முன்வைக்கத் தொடங்கினர்.

ஐ.நா நடத்திய ஆய்வுகளின்படி தனியொரு நிலக் கண்ணியைத் தயாரிக்கும் செலவு 3டாலர் ஆகும். ஆனால் புதைக்கப்பட்ட கண்ணியை அகற்றுவதாயின் அதற்குரிய செலவு 1200டாலருக்கும் கூடுதலாக இருக்கின்றது. கெயர், சோர்ச் வேல்ட்சேர்விஸ், ஒக்ஸ்பாம் போன்ற தொண்டர் நிறுவனங்களின் உதவிப் பணிகளுக்கு புதைக்கப்பட்ட கண்ணிகள் தடையாக இருக்கின்றன. அகதிகளை மீளக் குடியமர்த்தும் பணிகளுக்கும் நிலக்கண்ணிகள் தடை விதிக்கின்றன. விவசாய மற்றும் கால்நடைத்திட்டங்கள் கண்ணிகள் விதைக்கப்பட்ட பகுதிகளில் அமுலாக்கப்படுவதில்லை. உணவு போன்ற அத்தியாவசிய தேவைகளை வழங்குவோர் கண்ணிகளைக் காரணம் காட்டிப் பின்னடிக்கின்றனர். உதவி நிறுவனங்களைச் சேர்ந்தோர் உட்பட அகதிகள், நில அளவையாளர்கள் போன்றோர் காயமடைந்துள்ளனர் அல்லது கால்,கை.கண் போன்ற உறுப்புக்களை இழந்துள்ளனர்.

கனவுகளின் அடைகாத்தல் என்ற நீண்டகவிதையின் ஒரு பகுதியில் கவியரசி அம்புலி மேற்கூறிய அவலங்களைப் பின்வருமாறு வரைந்துள்ளார்:

*“மீளக் குடியமர முடியாத*
*உதவிப்பணம்*
*உழுது விதைக்கமுடியாத*
*கண்ணிவயல் நிலம்*
*ஏறிவலித்து மீனள்ள முடியாக்*
*கடல்வெளி’’*

செறிவாக நிலக்கண்ணிகள் புதைக்கப்பட்ட நிலப்பரப்பை ‘மைன்பீல்ட்’ (MINE FIELD) என்று ஆங்கிலத்தில் அழைப்பார்கள் ‘கண்ணிவயல்’ இதன் தமிழாக்கம்.

மிகக்கூடுதலான கண்ணிகளை உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்யும் நாடுகளாக ருஷ்யாவும் சீனாவும் அடையாளம் காணப்பட்டுள்ளன. தனது சொந்தத் தேவைகளுக்காகப் பிற நாடுகள் கண்ணிகளை உற்பத்தி செய்கின்றன. வடக்கு மற்றும் தெற்குக்கோரியாக்களுக்கு இடையிலான சூனியப்பிரதேசத்தில் பெருமளவு நிலக்கண்ணிகளை அமெரிக்கப்படைகள் புதைத்துள்ளன. ஆயுத ஏற்றுமதியில் ஈடுபடும் பாகிஸ்தானும் கண்ணிகளை உற்பத்தி செய்கின்றது. சிறிலங்கா பயன்படுத்தும் கண்ணிகள் சீனா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளில் தயாரிக்கப்பட்டவையாகும்.




போர் தாங்கி மூலம் நிலக்கண்ணிகளை விதைக்கும் தொழில் நுட்பம் இன்று வழமைக்கு வந்துள்ளது. வெகு தூரத்தில் நிற்கும் போர் தாங்கிகள் எதிரி நிலைகளை நோக்கி ஒரு குறிப்பிட்ட நேரத்திற்குள் பல்லாயிரக்கணக்கான நிலக்கண்ணிகளை ஏவமுடிகின்றது. மனிதர் புதைக்கவேண்டிய அவசியமில்லை. இப்படியான நிலக்கண்ணிகள் சில காலத்தின்பின் தம்மைத் தாமே அழிக்கக்கூடியவையாக இருக்கவேண்டும் என்று ஐ.சி.ஆர்.சி வலியுறுத்துகின்றது. ஒரு மன்னிக்க முடியாத போராயுதம் என்று நிலக்கண்ணியை வர்ணிக்கிறார்கள். ஒருவரையும் வித்தியாசம் பார்க்காமல் அது தாக்குகின்றது. சிபிலியன்கள் உயிராபத்தை எந்நேரமும் எதிர்கொள்கின்றனர். போர் நடவடிக்கை முடிந்த பல காலத்தின் பின்பும் அது உயிர்ப்புடன் இருந்து ஆபத்தை விளைவிக்கின்றது.

மனிதர்களுக்கு எதிரான நிலக்கண்ணிகளைத் தடை செய்யவேண்டும் என்ற இயக்கம் சென்ற நூற்றாண்டின் எழுபதுகளில் வலுப் பெற்றது. இதன்பயனாய் 1980ல் ஒரு பன்னாட்டு ஒப்பந்தம் செய்யப்பட்டது. ஆனால் இவ்வொப்பந்தத்தில் பல ஓட்டைகள் இருந்த காரணத்தால் தடை பயனற்றதாக இருந்தது. தயாரிக்கும் நாடுகளும் பயன்படுத்தும் நாடுகளும் இணைந்து ஒப்பந்தத்தை வலுவிழக்கச் செய்தன. ஒப்பந்தங்களை எழுதும் போது முன்கூட்டித் தீர்மானித்த சட்ட ஓட்டைகளை உள்ளடக்குவது ஒரு சர்வதேச வழமையாகக் கணிப்பிடப்படுகின்றது.

1990களில் இங்கிலாந்தின் காலஞ்சென்ற டயானா இளவரசி எடுத்த விழிப்புணர்வுப் பிரசாரம்காரணமாக நிலக்கண்ணிகளைத் தடைசெய்யும் இயக்கம் மீண்டும் பலமடைந்தது. ஐ.சி.பி.எல். (ICBI) என்று அழைக்கப்படும் நிலக்கண்ணிகளைத் தடைசெய்யக்கோரும் அனைத்துலக இயக்கம் (INTERNATIONAL CAMPAIGN TO BAN LANDMINES) ஆரம்பிக்கப்பட்டது. பல இயக்கங்கள் ஒன் றிணைந்த குடை அமைப்பாக இது இடம்பெற்றது. இந்த அமைப்பின் ஒருங்கிணைப் பாளரான ஜோடி வில்லியம்ஸ் (JODY WILLIAMS) இதற்காக அயராது உழைத்தார். 1950ல் பிறந்து இற்றை வரை வாழும் இவருக்கு 1997ம் வருடத்திற்கான நோபெல் அமைதிப்பரிசு வழங்கப்பட்டது. இவருக்கும் ஐ.சி.பி.எல். அமைப்பிற்கும் கூட்டாக இப் பரிசு வழங்கப்பட்டது.

75 நாடுகளில் செயற்படும் 1300என்ஜிஓகள் ஐ.சி.பி.எல். அமைப்பில் இணைந்து செயற்படுகின்றன. சர்வதேச மட்டத்தில் செயற்பட்ட ஐ.சி.பி.எல் கொடுத்த அழுத்தம் காரணமாக மார்ச்சு 1999ல் நிலக்கண்ணித் தடைச்சட்டம் அமுலுக்கு வந்துள்ளது. 133நாடுகள் இச்சட்டத்திற்கு ஆதரவாகக் கைச்சாத்திட்டுள்ளன. 58 நாடுகள் அங்கீகாரம் வழங்கியுள்ளன. நிலக்கண்ணிகளைத் தயாரித்தல், பயன்படுத்துதல், களஞ்சியப்படுத்துதல், கொண்டு செல்லுதல் இச்சட்டத்தின் மூலம் தடைசெய்யப் பட்டுள்ளது. இச்சட்டத்திலும் ஓட்டைகள் உண்டு. இராணுவவேலிக்குள்ளும், வேலி ஓரத்திலும் நிலக்கண்ணிகள் பயன்படுத்துவதற்கு அனுமதி கிடைக்கின்றது.

நிலக்கண்ணிகளுக்கு எதிரான நடவடிக்கையை ஐ.நா ஆப்கானிஸ்தானில் மேற்கொள்கின்றது. இது வெற்றியளித்துள்ள நிலையில் அங்கு இடம் பெயர்ந்தோர் குடிபுகும் வாய்ப்பு கிடைத்துள்ளது. இதற்கிடையில் சிறிலங்காவின்




தமிழ்ப் பகுதிகளில் சிங்கள இராணுவம் புதைத்த கண்ணிகள் தமிழ் மக்களுக்கு நாளாந்திரம் உயிராபத்தை விளைவிக்கின்றன. மிக அண்மையில் எடுத்த கணக்கெடுப்பின்படி யாழ் குடாவில் 500,000மும் வன்னியும் வன்னியைச் சூழ்ந்த இடங்களில்1.5 மில்லியன் நிலக்கண்ணிகள் இருக்கின்றன. 1998ல் தொடங்கி இன்றுவரையிலான காலப்பகுதியில் ஒன்றரை இலட்சம் வரையிலான நிலக்கண்ணிகளையும், இரு இலட்சம் வரையிலான வெடிக்காத ஷெல்களையும் மனித நேயக்கண்ணி அகற்றும் அமைப்பு மீட்டு அழித்துள்ளது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் ஒரு பிரிவான மனித நேயக் கண்ணி அகற்றும் அமைப்பு நோர்வே அரசின் நிதி உதவியுடன் இயங்குகின்றது. நோர்வேயின் என்.பீ.ஏ (NPA), பிரித்தானியாவின் மெக்(MAG) என்பன பிற கண்ணிஅகற்றும் அமைப்புக்களாகும்.

மன்னாரில் இன்னுமோர் வெளிநாட்டு நிறுவனம் இதே பணியில் ஈடுபடுகின்றது. மார்ச்சு1999ல் செய்யப்பட்ட நிலக்கண்ணித் தடைச்சட்டத்தில் கைச்சாத்திட அமெரிக்கா மறுப்புத் தெரிவித்தது. ஆனால் கண்ணி அகற்றும் பணியில் பயிற்சி பெற்ற சிம்பாப்வே நாட்டுக்குழுவினரை அமெரிக்கா யாழ் குடாவுக்கு அனுப்பிவைத்தது. இவர்களுடைய பணி திருப்திகரமாக அமையவில்லை. சிறிது காலத்தில் அவர்கள் வெளியேறிவிட்டனர். மனித நேயக்கண்ணி அகற்றும் பிரிவு எமது தேசிய இயக்கம், இதில் ஆண், பெண் இருபாலாரும் பணியாற்றுகின்றனர்.

நிலக்கண்ணி அகற்றும் செயற்பாடுகளை வேகமாக நடத்துவதற்கு தடங்கலாக இருப்பது அவை எங்கே புதைக்கப்பட்டுள்ளன என்பதைக் காட்டும் வரைபடங்கள் இல்லாமை காரணமாகின்றது. இவற்றைக் கொடுப்பதற்கு சிங்கள இராணுவம் மறுப்பதோடு, தவறானவற்றையும் தருவதுண்டு. நவம்பர் 2003ல் டென்மார்க் நாட்டின் கண்ணி அகற்றுவோரின் பணிகளுக்கு இராணுவம் தடைகளை விதித்தது. இதை ஆட்சேபித்த அவர்கள் வெளியேறினர், சில காலத்தின்பின் பணிக்குத் திரும்பிவிட்டனர்


டிசெம்பர் 2003ல் சிங்கள இராணுவம் யாழ்குடாவின் தென் - கிழக்கு கடலோர மணற்காட்டுப் பிரதேசத்தில் புதிய நிலக்கண்ணிகளைப் புதைப்பதாகச் செய்திகள் வெளிவந்தன. டிசெம்பர்09,2003ல் இது சம்பந்தமான முறைப்பாடுகளை யாழ் மனித உரிமைச் செயலகத்தில் மணற்காட்டு பிரசைகள் செய்தனர். கண்ணி அகற்றும் பணிகளுக்கு தடங்கல் ஏற்படுத்தியதோடு, இப்படியான மீறல்களையும் இராணுவம் செய்துள்ளது.

அமெரிக்க இராணுவம் உதவி வழங்கும் றொன்கோ(RONCO)),ஐநாவின் யூஎன்டிபி உதவும் மைன்ரெக்(MINE - TECH), ஹேலோ டிரஸ்ற் (HALOTRUST) என்ற சர்வதேச நிலக்கண்ணி அகற்றும் அமைப்பு, டென்மார்க் நாட்டின் குழு என்பன யாழ் குடாவில் நிலக் கண்ணி அகற்றுவதில் ஈடுபடுகின்றன. நிலக் கண்ணிகளைத் தடைசெய்யும் சட்டத்தில் சிறிலங்கா கைச்சாத்திடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

தான் சட்டத்துக்கு கட்டுப்பட்டவன் என்று மனிதன் உணர்ந்த அன்றே, சுதந்திர மனிதனாகி விட்டான் - வில் ட்யூரான்ட்.

# இப்படியும் நடக்கிறது இங்கே கவனிக்கவும்







குழந்தைகளுக்கும் கர்ப்பிணிப் பெண்களுக்கும் தனிக்கவனிப்பையும் உயரிய மதிப்பையும் கூடிய வசதிகளையும் கொடுக்கின்றன உலகெங்குமுள்ள எல்லாச் சமூகங்களும். ஆனால் நாங்கள் மட்டும் இதிலிருந்து விதிவிலக்காக இருக்கிறோம்.

பஸ்ஸில் பயணம் செய்கின்றபோது குழந்தையுடன் ஒரு தாய் ஏறிவிட்டால் அந்தத் தாய்க்கு மனப்பூர்வமாக இடம்கொடுப்போர் தொகை வரவரக்குறைந்தேவருகிறது. குழந்தையுடன் ஏறிய பெண்ணை இருந்து பயணிப்போர் கொஞ்சநேரம் எதுவுமே செய்யாது பார்ப்பார்கள். சிலர் அப்போதுதான் வெளியே இயற்கையை நன்றாக ரசிக்கத் தொடங்குவார்கள். சில நிமிடத்தாமதத்தின் பிறகு யாராவது ஒருவர், இனியும் பொறுக்கமுடியாது' என்று தனது இருப்பிடத்தை தியாகம் செய்ய முன்வருவார். இதுதான் பொது வழமையாகியிருக்கிறது.

தியாகமும் அர்ப்பணிப்புமான ஒரு வாழ்வை கண்முன்னே கண்டும் செய்தும் வருகின்ற சமூகத்தில்தான் இப்படியும் நடக்கிறது.

பஸ்ஸில் சீற்றைப் பிடிக்கும்போது பலரும் புத்திபூர்வமாக நடந்துகொள்கிறார்கள் - எப்படியென்றால் ஏறியிறங்கும் வாசலுக்கு நேரே இருப்பிடத்தைத் தேர்வுசெய்தால் அடுத்து வருகின்ற நிறுத்தத்தில் தமது இருப்பிடம் பறிபோய்விடுமாம். வாசலால் ஏறிவரும் குழந்தைக்காரப் பெண்ணுக்கோ, நோயாளிக்கோ, முதியோர்க்கோ அந்த இடத்தைக்கொடுத்துவிடவேண்டியதாகிவிடும் என்ற முன்னெச்சரிக்கை தான் அது.

இதேபோல கர்ப்பிணியொருவர் பஸ்ஸில் ஏறினால் அவருக்கு இருப்பிடவசதி கொடுப்போர் எவருமில்லையெனலாம். நின்று பயணிக்க முடியாத அவஸ்தையுடன் ஒவ்வொரு முகங்களையும் ஏக்கத்துடன் பார்க்கும் பெண்களைத் தினமும் எல்லா பஸ்களிலும் காணமுடியும். ஏன் உங்களின் மனைவியையோ இவ்வாறான அனுபவத்தைப் பெற்ற தாயையோ, சகோதரியையோ கேட்டுப்பாருங்கள்: அவர்கள் இப்படித் தாங்கள் பெற்ற அனுபவங்களை கஸ்ரங்களையெல்லாம் எப்படிச் சொல்கிறார்கள் என்று: எவ்வாறு துயரத்தோடிருக்கிறார்களென்று.

இது மட்டுமல்ல இந்த மதிப்பளியாமை, இந்தப்பிரச்சினை பல விதமாக பல இடங்களிலும் நிகழ்கிறது.

எங்களிடம் குழந்தைகள் மற்றும் கர்ப்பிணித் தாய்மாருக்கான 'கிளினிக்'கை நடத்துவதற்கான தனியான இடங்கள் இல்லை. இருக்கின்ற ஓரிரண்டு இடங்கள் கூட அடிப்படைவசதிகள் எதுவுமில்லாத வெறும் கொட்டகையும் ஒரு மேசையுமுடையதாகவே உள்ளன. ஏதோ சாட்டுக்குப் போட்டிருப்பது போலத்தான் இந்தத் தாய் சேய் நிலையங்களிருக்கின்றன. அங்கே மலசலகூடவசதி, தண்ணீர்வசதி, தளபாடவசதி, வெய்யிலுக்கும் மழைக்கும் ஒதுங்கக்கூடிய வசதி என்று எதுவும் இருப்பதில்லை. குடிநீர்க்கான ஒழுங்கமைப்புகள், ஏற்பாடுகள் என ஒன்றுமிருக்காது.

மாதா மாதம் நடக்கின்ற கிளினிக்குகளுக்கென எல்லாப் பிரதேசங்களிலிருந்தும் பெரும் எண்ணிக்கையானவர்கள் கலந்துகொள்கிறார்கள்.

எங்கேனும் ஒன்றிரண்டாகவுள்ள தாய்சேய் நிலையங்களைவிட ஏனையவை எல்லாம் பிற நிறுவனங்கள், அமைப்புகளின் இடங்களில்தான் இயங்குகின்றன. கிராம பாலர் பாடசாலைகள், அபிவிருத்திச் சங்கங்கள், சனசமூக நிலையங்கள், பிற பொது அமைப்புகளின் இடங்கள் என்பதாகவே இந்த இயங்கு மையங்களிலிருக்கின்றன. சில இடங்களில் பொதுநூலகம் அமைந்துள்ள பகுதியில் ஒரு ஓரமாக இந்தக் 'கிளினிக் சென்ரர்'கள் இயங்குவதையும் காணலாம்.

குழந்தைகளுடன் வருவோர்கள் கிளினிக் முடிந்து செல்வதற்கிடையில் அந்தக் குழந்தைக்குத் தேவைப்படும் தண்ணீர், மலசல கூடவசதிகள் இல்லாமல் படுகின்ற சிரமம் கொஞ்சமல்ல.

கர்ப்பவதிகளாகவும், குழந்தைகளை தூக்கியும் வருகின்றவர்கள் இருப்பதற்குரிய தளபாடம் பிரத்தியேகமானதாகவே இருக்கவேண்டும். அவர்களுடைய வசதியைக் கருத்தில் கொண்டு அதற்குரிய முறையில் இந்தத் தளபாடங்கள் வடிவமைக்கப்பட்டிருக்கவும் வேண்டும். ஆனால் சாதாரணமாக ஒரு வாங்குகூட இல்லாத நிலைதான் பல இடங்களிலும் உள்ளது. மரநிழல்களின் கீழ், தரையில் கூடியிருக்கும் இவ்வாறான பெண்களை நீங்கள் அனைவரும் பல இடங்களிலும் காணமுடியும்.

சில பிரதேசங்களில் தொலைதூரங்களிலிருந்து நடந்துவரும் பெண்கள், குழந்தைகளைக் காவிவருகின்ற தாய்மார் எல்லோரும் இளைப்பாறுவதற்கே அங்கே போதிய இடவசதியிருக்காது. நிழல்மரங்கள் கூட சில இடங்களில் இல்லை.

மூன்றுமாதக் குழந்தையிலிருந்து ஐந்து வயது வரையிலான பிள்ளைகள் வரையில் இந்த மருத்துவமையத்துக்கு வருகிறார்கள். இதில் ஒரு வயது முதல் ஐந்து வயது வரையிலான பிள்ளைகள் கிளினிக் முடியும்வரையில் மகிழ்ந்திருக்கக்கூடியவாறான எந்த அமைப்பும் அங்கிருப்பதில்லை. குடிதண்ணீருக்கே வசதியில்லாத இடத்தில் இதுமட்டும் வந்துவிடுமா. என்று நீங்கள் கேட்கலாம்; உண்மைதான். ஆனால் இவ்வாறு குறைகளுடன் தொடர்ந்தும் இருக்கமுடியுமா?

ஆனால், குழந்தைகள், சிறுவர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் சில நிமிடங்களுக்குமேல் ஓரிடத்தில் தரித்து நிற்கும் மனதைக் கொண்டிருப்பதில்லை என்பது அனுபவ உண்மை. அப்படி அவர்களை ஓரிடத்தில் வைத்திருக்கவேண்டுமென்றால் அவர்கள் மகிழ்ந்திருக்கக்கூடியமாதிரி விளையாடக்கூடிய இட அமைவும் விளையாட்டுப்பொருட்களும் இருக்கவேண்டும். சிறுவர் ஆடுகின்ற ஊஞ்சல்கள். மரப்பொம்மைகள், கம்பங்கள்,சுழல் இருக்கை கள் என்று இதை அமைக்கலாம். இது மிகவும் அவசியமானது. குழந்தைகளின் உளவியல்பற்றி கதைக்கிற நாம் எப்படி இதில் பொறுப்பற்றவர்களாக இருக்கிறோம்?

பத்து நிமிடத்துக்குமேல் இருக்க பொறுமையற்றிருக்கும் ஒரு பிள்ளையை வெறுமை நிரம்பிய சூழலில் ஒரு தாய் எப்படி நீண்டநேரம் வைத்திருக்கமுடியும். என்று ஒருகணம் யோசித்துப்பாருங்கள்.

அழுகையோடும் அடம்பிடித்தலோடும் படாதபாடுபடும் அந்தத் தாய்மாரைக் கேளுங்கள் எப்படி உங்களுடைய அனுபவங்கள் என்று அவர்கள் சொல்லும் கதைகளைக் கேட்கக் கூடிய இதயம் உங்களுக்கிருந்தால்.

குழந்தைகளை பூக்களாக நினைத்துக் கொஞ்சி மகிழ்கிறோம். ரசிக்கிறோம். அன்பைச் சொரிகிறோம். ஆனால் அந்தக் குழந்தைகளை எப்படியாகச் சில இடங்களில் வைத்திருக்கின்றோம் என்று பார்த்தீர்களா?

பிறக்கப்போகும் குழந்தையைக் குறித்த ஆசையும் கனவுகளும் எங்கள் ஒவ்வொருவருக்குள்ளும் எத்தனை விதமாக இருக்கின்றன? ஆனால் அந்தக் குழந்தைக்கான கர்ப்பநிலையிலான சிகிச்சை எப்படியான சூழலில் நடக்கிறது? அந்தத்தாயின் மனநிலையை எப்படி வைத்திருக்கிறோம்?

வீட்டில் வசதியாக இருக்க நினைக்கிறோம். அப்படி வசதிக்குரியவாறான ஏற்பாடுகளை எப்படியோ செய்தும் விடுகிறோம். கிளினிக் சென்ரருக்குக்கூட மோட்டார் சைக்கிளிலோ, ஓட்டோவினிலோ, காரிலோ, ஏன் சைக்கிளிலோ கூட பலர் வந்து இறங்குகிறார்கள். ஆனால் சிகிச்சைக்காக இருப்பதோ மரநிழலில்; வெறுந்தரையில்; வந்திறங்குவதற்கும் சிகிச்சையிடத்தில் இருப்பதற்குமிடையில் எத்தனை பெரிய தரவேறுபாடுகள்?

கௌரவமாகக்கொண்டு வந்து ஒவ்வொருவரும் தங்கள் துணைவிகளையும் குழந்தைகளையும் இறக்கிவிட்டுப் போகிறார்கள். ஆனால் அவர்கள் அங்கே எதிர்கொள்ளும் நிலையோ முற்றிலும் எதிர்மாறானது.

குழந்தைகளையும் கர்ப்பவதிகளையும் நிறுப்பதற்கான ஏற்பாட்டில் கூட ஒரு நிறுவைக் கருவியைத்தவிர அங்கே வேறெதுவும் இருப்பதில்லை. ஊட்டச்சத்துக்குரிய சில பொருட்கள் வழங்கப்படும். ஆனால் அவற்றை வழங்குவதற்குரிய ஒழுங்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே இருக்கிறது.

குழந்தைகள், தாய்மார், கர்ப்பவதிகள் மட்டும் தான் சிரமங்களை எதிர்கொள்கிறார்கள் என்றில்லை. இந்த பரிசோதனை நிலையங்களில் பணிசெய்யும் தாதிமார்கள் மற்றும் மருத்துவர்கள் பெரும் சிரமங்களையே படுகின்றார்கள்.

ஏதோ சமாளிப்போம் என்ற மனதோடு, வேறுவழி இல்லை என்ற உணர்வோடு எப்படியோ இந்தச்சிகிச்சை மையங்களைக் கொண்டிழுத்துக் கொண்டிருக்கிறார்கள் எல்லோரும்.

**வெள்வாசல்பாலன்**

உலக சுகாதார ஸ்தாபனம் தொடக்கம் உள்ளூர் சுகாதார அமைப்புக்கள் வரையில் எத்தனை மருத்துவ நிறுவனங்கள் இருக்கின்றன. ஏன் எவையும் இந்த விடயத்தைக் கவனிக்கா மலும் சீர்படுத்தாமலும் இருக்கின்றன? என்று கேட்கின்றார்கள் எப்போதும் இங்கேவரும் பெண்களும் ஊழியர்களும்.

பொது அமைப்புகள், நற்பணிமன்றங்கள், சங்கங்கள் என்றிருக்கும் அமைப்புகள் கூட பல விழாக்களுக்குச் செலவழிக்கும் பல லட்சரூபாய்களில் ஒரு சிறுதொகையை இவற்றுக்கு வழங்கினாலே இந்தப்பிரச்சினையின் பெரும் பகுதி தீர்ந்துவிடும். பொதுமக்களும் இதுபற்றி உதவுவதற்கு சிந்திக்கவேண்டும்.

யுத்தத்தின் போதுகூட கர்ப்பவதிகளுக்கும் குழந்தைகளுக்கும் கூடிய பாதுகாப்பையும் பிற வசதிகளையும் செய்யவேண்டுமென்பது பொதுச்சட்டம். இவர்களுக்கு பிரத்தியேகமான வசதிகளும் சலுகைகளும் வழங்கப்படுவதும் உலகமரபு.

ஒரு குழந்தையை நாங்கள் நடத்துகின்றதைப் பொறுத்தே பின்னாளில் அந்தக் குழந்தை எம்மை நடாத்தும் என்பார்கள். இப்போது வஞ்சிக்கப்பட்டதாகவும், பாராமுகமாகவும் பொறுப்பற்ற தனமாகவும் இப்படிப் பொதுநிலையில் நடாத்தப்படும் பிள்ளைகள் பின்னாளில் அதற்குரிய மனநிலை வெளிப்பாட்டுடனேயே உருவாகுவார்கள்.

வீட்டில் எவ்வளவுதான் வசதிகளும் தனிக்கவனிப்பும் ஒரு பிள்ளைக்கு இருந்தாலும், கொடுக்கப்பட்டாலும் அந்தப்பிள்ளை பின்னாளில் தனியே வீட்டுக்குள்மட்டும்.

கட்டுண்டு இருக்கப்போவதில்லையே பொதுத்தளத்தில் தன் வாழ்வை இணைக்கும் போது அது இயங்குகின்ற மனப்பாங்கும், வெளிப்படுத்துகைகளும் அப்பிள்ளை பொதுத்தளத்தில் நடாத்தப்படும் போது பெறுகின்ற மனநிலைக்கேற்ற மாதிரியே இருக்கும்.


இதனால்தான் எங்களிடையே இன்று பொது விடயங்கள், பொதுச் செயற்பாடுகள் மீதான கசப்பனுபவம் பெருகிவருகிறது. பொதுப் பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கும் ஆர்வம் குன்றி வருவதும் இதனால்தான் அதேவேளையில் பொதுப்பிரச்சினைகள் இன்னும் தீவிரமாக வளர்வதற்கும் சிறுவயதில் காயங்களாகப் பெறுகின்ற இத்தகைய பொதுநிலைக் கசப்பனுபவங்கள் தான் காரணம்.தாய் சேய் நிலையங்களுக்கப்பால் இன்னொன்றையும் இங்கே குறிப்பிடலாம்.

குழந்தைப் பிரசவங்களின் போது அநேகமான மருத்துவமனைகளில் பிரசவவலியுடன் அங்கே பணிசெய்கின்ற மருத்துவத்தாதிமார் கொடுக்கின்ற வலியையும் சேர்த்தே அனுபவிக்கவேண்டியிருக்கிறது என்கிறார்கள் பல தாய்மார்கள். கண்டிப்புத் தோரணையில் ஏச்சும் பேச்சுமாக ஏதோ குற்றவாளிகளைப் போலத் தம்மைப் பார்க்கிறார்கள் தாதிகள் என்கிறார்கள். மேலும் அவர்கள் அதிலும் இரவு நேரப்பிரசவம் என்றால் திட்டும் ஏச்சும் இன்னும் அதிகமாம் இதே வேளையில் நல்ல முறையில் ஒரு தாயைப்போல பாசமாகவும்; ஒரு தோழியைப் போல, சகோதரியைப் போல நேசமாகவும் அரவணைத்து நடத்துகின்ற பல தாதிமாரையும் அவர்கள் நன்றியோடும் மகிழ்வோடும் நினைவெடுக்கிறார்கள்.

ஒரு குழந்தையைப் பெறும் போது அந்தத் தாய் பெருமையடைய வேண்டும், மகிழவேண்டும், ஆதரவைப் பெறவேண்டும். வெளிநாடுகளில் துணைவர் அருகிலிருக்கும் வாய்ப்புக்களும், புரிதல்களும் உண்டு. சில தனியார் மருத்துவமனைகளில் பிரசவத்திற்குள்ளாகும் பெண்ணின் உறவினர் அருகிலிருக்கக் கூடிய வாய்ப்பும் வசதியும் உண்டு. ஆனால் எங்களிடையே பொதுவாக பொதுமருத்துவமனைப் பிரசவங்களே அதிகம். அங்கே வேலை செய்வோர் தமக்குரிய பணியை சேவையாகச் செய்வதைவிடச் சில வேளைகளில் (கவனிக்கவும் சிலர் மட்டும்) அதிகாரத் தோரணையில் கடுமையாக நடந்து கொள்வதன் தேவை தானென்ன? அதற்குரிய அர்த்தம்தானென்ன?

இன்றும் எத்தனை காலந்தான் இப்படியான பிரச்சினைகளோடு சமாதானங்கண்டு வாழ்ந்து கொண்டிருக்கமுடியும்?

நல்லவர்கள் சட்டத்திற்கு அஞ்சத் தேவையில்லை. சட்டம்,நல்லவர்க்குப் பாதுகாப்பு கெட்டவர்க்குக்கிலி - ஃபிலிப்மேஸ்ஸிங்கர்.







அவனின் படத்தை அவள் கண்டாள். படம் பத்திரிகையின் இட்து பக்கத்திலிருந்தது. அவன் அரைப் பக்கத்தில் சிரித்தபடியிருந்தான. முகம் நல்லாய் பிரகாசித்தபடியிருந்தது. அவள் ஐந்து வருடங்களுக்குப் பிறகு இன்றுதான் அவனின் முகத்தைக் காண்கிறாள்.

அவன் அவளோடு ஒன்றாகப் படித்தான். அவள் ஓ லெவல் படிக்க அவன் புதிதாய் வந்து சேர்ந் தான். கிளிநொச்சி அவனின் இடம். இடம்பெயர்ந்து வந்திருந்தான். நல்ல வட்டமுகம். அவளைப் போல நல்ல அழகு. எப்பவும் சிரித்தபடி இருப்பான்.

அவனை அவளுக்குப் பிடிக்காது. அவள் அமைதியானவள். சிரிக்கும்போது பற்கள் தெரியாது. வாயை மூடி சொண்டுக்குள் சிரிப்பாள். அடக்கமுடியாத சிரிப்புக்கள் வந்தால் லேஞ்சியை எடுப்பாள். வாயைப் பொத்துவாள். நாடியில் மிளகளவு மச்சம். விரல்களால் அதைத்தடவியபடி இருப்பாள்.

அவன் வந்தமுதல்நாளே கதிரோடு சிநேகிதம் பிடித்து விட்டான். கதிரை எல்லோரும் 'பெரிசு' என்றுதான் சொல்லுவார் கள், அனைவரையும் விட கதிர் தான் வகுப்பில் உயரம். மீசையும் முதல் கதிருக்குத் தான் முளைத்தது. தலையில் ஐந்தாறு நரை மயிர்கள். வயதுக்கு மீறிய கதைகள் கதைப்பான். அதை வைத்து ஐங்கரன்தான் 'பெரிசு' என்று பெயர் வைத்தான். சிலநேரங்களில் 'மூத்தல்' என்றும் கூப்பிடுவான்.

அவன் கதிருக்குப் பக்கத்தில் இருப்பான். கதிர் கடைசி'றோ'. கதிர்முன்னுக்கு இருந்தால் "பிளைக் போட்" மற்றவர்களுக்கு மறைக்கும். ஞானம் சேர்தான் கதிரை பின் றோவுக்கு விட்டார்.

அவன் கதிரோடு சிரித்துக் கதைப்பதொன்றும் அவளுக்குப் பிடிக் காது. கதிர் நல்லாய்ப் படிப்பான். வகுப்பில் கதிரும் அவளும் நல்ல கெட்டிக்காரர்கள் இரண்டு பேருக்கும் சரியான போட்டி அநேகம் அவள் தான் முதலாம்பிள்ளைக்கு வருவாள். சிலநேரங்களில் கதிர் வருவான். கதிர்வரும் வேளைகளில் மனம் கோணமாட்டாள். பாராட்டுவாள்.

எதிலும் எவர்கள் முதல் நிலைவருகின்றார்களோ அவர்களை அவளுக்கு நல்லாய்ப் பிடிக்கும் அவர்களுடன் நட்பு வைப்பாள். அவர்களிடம் படங்களை வாங்குவாள். சுவர்களில் மாட்டுவாள். ஆசிரியர்களின் படங்களையும் சுவர்களில் மாட்டியிருக்கின்றாள். ஞானம் சேரிடம் மட்டும் படத்தை வாங்கவில்லை.

ஞானம்சேர்தான் இப்ப அதிபர் அவர் வந்தபிறகு பாடசாலையில் கட்டடங்கள் கூடியது 'கொலசிப்' பில் அஜந்தா பாஸ் பண்ணினாள் ' நெறபோல்' ரீமும் உருவாகியது வலயத்தில் ஒரு பழக்கம் பாடசாலைகளுக்கு அதிகாரிகள் வருவதை முற் கூட்டியே அறிவிப்பது. அறிந்தவுடன் ஞானம்சேர் படிப்பை பாதியில் நிறுத் திவிடுவார். எல்லா மாணவர்களையும் அழைத்து செடிகளைப்பிடுங்கி கஞ்சல்களைக் கூட்டி பள்ளிக் கூடத்தைச் சுத்தமாக்குவார். தட்சணாச் ரீச்சருக்கு அது நல்லவாசி பேசாமல் சைக்கிளை எடுத்துக் கொண்டு வீட்டுக்குப் போய்விடுவா. அடுத்தநாள் சைன் வைக்க ஞானம்சேர் இடம் விடுவார்.

அதிகாரிகள் வருவார்கள் கதிர்வீட்டுப் பூச்சாடிகள் பள்ளிக் கூட மேசைகளில் இருக்கும் ரதனா வீட்டுப் பூக்கன்றுகள் சாடிகளோடு வாசல் களில் இருக்கும் சின்னப் பிள்ளைகளுக்கு புதிதாய் 'பெயின்'றடித்த ஊஞ்சல்களைப் பார்க்க ஆசையாக இருக்கும். தொங்கியும் சுவர்களில் ஏறி நின்றும் ஊஞ்சல்களைப் பார்ப்பார்கள்.

இப்போதெல்லாம் கதிர் அவனுடன்தான் கூடித்திரிவான். ஐங்கரனுக்கு அது பிடிக்காது சொண்டுக்ளைப் புழுத்திக்கொண்டு தனியத் திரிவான். இடைவேளை விட்டதும் கதிர்அவனுடன் சந்திக்கடைக்குப் பறந்துவிடுவான். பீடாவாங்கிச்சாப்பிடுவான். சிலநேரங்களில் பாடங்கள் தொடங்கியபின்பு 'எஸ்கியூஸ்மி' சொல்லிக்கொண்டு வகுப்புக்குள் நுழைவான்.

கதிர் முன்பு இடைவேளைகளுக்கு வெளியில் போகமாட்டான். தனிய இருந்து படிப்பான் கதிர் இப்படி மாறியதை நினைத்து அவள் கவலைப்பட்டாள். சில வேளைகளில் அவனைப்பார்த்து பற்களை நொருமுவாள்.

கதிர் அவளின் பக்கத்து வீடு முறைமச்சான், கதிரின் வீட்டில் நிறையப் பட்டிமாடுகள் மாலை நேரங்களில் கதிர் வீட்டுக்குப் பால்வாங்கப்போவாள். அந்தநேரங்களில் கதிர் படித்துக் கொண்டிருப்பான் இப்ப அவள் போகும் நேரங்களில் கதிர் இருக்க மாட்டான் அவனுடன் போய்விடுவான்.

அவளுக்கு நம்பிக்கை தான் படித்து ஒரு 'கிளாக்' வேலையேனும் செய்வேன் என்று அதேபோல் கதிரையும் நினைத்தாள் வகுப்பில் கதிர் அவனுடன் சிரித்துக்கதைக்க அவள் எரிவாள் அவன் கதிருடன் கதைத்துக் கதைத்து அவளைத்தான் பார்ப்பான். அவனுக்கு அவளைப் பலதடவைகள் பார்க்கவேணும் போலிருக்கும் அவன் பார்ப்பதை பக்கத்திலிருக்கும் ரதனா அவளுக்குச் சொல்லிக்கொண்டிருப்பாள் அவனின் முகம் ஒரு புழுவைப் போல் அவளுள் நெளியும்.

வகுப்புக்கு ஆசிரியர்கள் வராதவேளைகளில் அவன் 'பிளைக் போட்' டுக்குப் போவான், 'சோக்' எடுப்பான் அவன் அவளைப்பார்க்க வந்திருப்பதாக ரதனா காதுக்குள் சொல்லுவாள் அவள் நிமிர்ந்து அவனைப் பார்க்கமாட்டாள். ரதனா வேணுமென்றே அவளுக்கு முழங்கைகளால் இடித்துக்கொண்டிருப்பாள் அவன் பார்ப்பதாக.

அவன் 'பிளைக்போட்டில் ஏதோவெல்லாம் கிறுக்குவான் உன்னித்துப் பார்த்தால் கிறுக்கல்களுக்குள் ஒரு பெண் தெரிவாள். முகம் சரியாய் வராது. சிறுமிபோலிருக்கும். கண்கள் மட்டும் நல்லவடிவு முடி இரட்டைப் பின்னலாய் இருக்கும் ரதனா அவளின் முடியைத்திரும்பிப்பார்ப்பாள்.

அவன் கிறுக்கிவிட்டு அவளைப்பார்ப்பான். சிரிப்பான். அவளுடன் கதைக்க அவனுக்கு நல்ல விருப்பம் அவள் பார்த்தால் தானே... ரதனாதான் அவனைப் பார்த்துச் சிரிப்பாள் - அவன் ரதனா வைப் பார்க்கமாட்டான். மூதேவி எப்பவும் பல்லிளிக்கும்.

பின்பொருநாள்....

அவள் பாடசாலைக்குப் போனாள் அன்று அவளின் கூட்டு முறை வகுப்பில் வேறொருவரு மில்லை. அநேகம் அவள் வந்தபிறகு தான் ஆசிரியர்கள் வருவார்கள். ஞானம்சேர் வந்துவிட்டார் யன்னல் கதவுகள் திறந்திருந்தன. தட்சணா ரீச்சர்தான் முதல் பாடம். பாடம் தொடங்கியபிறகுதான் பள்ளிக் கூடத்துக்கு வருவா. மனிசியைத் திருத்த முடியாது - ஞானம் சேர் கொஞ்ச நாட்கள் 'றெட்'லைனும் அடித்துப்பார்த்தார்.

அவள் வகுப்புக்குள் நுழைந்தாள். மேசையில் புத்தகத்தை வைக்கத்தான் அவள் அதைப்பார்த் தாள். மேசையில் அவளையும் அவனையும் பற்றி எழுதியிருந்தது. அவள் கலங்கிப்போனாள்.

அவளுக்கு ஐங் கரன் மேல்தான் சந்தேகம் அவளுக்குக் கேட்கும்படி சொட்டைக்கதைகள் கதைக்கிறவன் ஞானம்சேரோடு லலிதாச் ரீச்சர் என்று சுவரிலும் எழுதினவன் மூஞ்சூறு!

அவளுக்கு அழுகை வந்தது கொஞ்ச நாட்களாக அவளுக்கு படிக்க மனம் வருவதில்லை. அவனின் பார்வைகள் தான் மனதில் அட்டையாய் ஊர்கிறது. அவனின் பார்வைகளை முறிக்கவேணும், அவளுக்கு மனசு சொன்னது ஞானம் சேரின் ஒப்பிசைப் பார்த்தாள் அவர் தனியாத் தான் இருந்தார். எழுதியதை அழித்துவிட்டு ஒப்பிசிக்கு ஓடினாள்.

அவள் சொன்னவைகள் அனைத்தையும் அவதானமாக ஞானம் சேர் கேட்டார். மனம் சிக்குப்பட்டது, நெஞ்சைக் கைகளால் தடவினார், பொத்தான்கள் விரல்களில் உருண்டன. அவள் ஒப்பிசைவிட்டு வெளியேறினாள். வகுப்புக்குப் போகவில்லை வீட்டுக்குப்போனாள். அழுது கண்கள் சிவந்திருந்தன, முகம் வீங்கியிருந்தது, நல்லகாலம் தெருவில் அவளை எவரும் காணவில்லை.

அவன் வந்தான் படிகளில் ஏற ஞானம்சேர் யன்னலில் முகத்தை விழுத்திக் கூப்பிட்டார் அவன் வந்தான் முன்னால் நின்று சிரித்தான். எப்பவும் போலவே முகம்மலர்ந்திருந்தது. அவள் சொன்னவைகள் அனைத் தையும் கேட்டார். அவன் பேசாமல் நின்றான். முகம் கறுத்தது, சொண்டுகள் துடித்தன, அவன் நார் நாராய்க் கிழிந்தான்.

ஞானம் சேர் மேசையில் இருந்த ஒரு வெள்ளைப்பேப்பரை எடுத்தார், அவனிடம் கொடுத்தார், அவன் அதை வடிவாகப் பார்த்ததும் அதிர்ந்துபோனான். அது அவன் வரைந்தபடம், அந்தப் படத்தை அவன் கதிருக்கு மட்டுந் தான் காட்டினான். அந்தப்படத்தைக் கதிர் நல்லாய் ரசித்தான், தான்வைத்திருப்பதாக வாங்கினான். அந்தப்படம் சரியாய் அவளைமாதிரி... அவளின் கண்கள்... அந்தப்படத்துக்குக்கீழே அவனின் பெயரையும், அவளின் பெயரையும் எழுதிவிட்டு கதிர் ஞானம் சேரிடம் கொடுத்திருக்கிறான்; குரங்கன்.

அவன் அந்தப்படத்தை வடிவாகப்பார்த்தான். அந்தப்படத்திலிருந்து.... அந்தக்கண்களிலிருந்து சுமிதா எழுந்தாள்....

சுமிதா அவனின் தங்கை சுமிதாவில் அவன் நல்ல உயிர். நிழலாய் எப்பொழுதும் சுமிதா அவனுடன் இருப்பாள் சுமிதாவைப் பாடசாலைக்கு அவன்தான் ஏற்றிச் செல்வான் சுமிதா அந்தவருசம் தான் 'கொலசிப்' அவனைப் போல தானும் பாஸ் பண்ண வேணுமென்று சுமிதா சொல்லுவாள்.

'அண்ணா எனக்கு மாலைக்காட்சி எழுதித்தா...'

ஒருநாள் கெஞ்சிக் கேட்டாள். அவன் எழுதிக்கொடுக்கவில்லை. அவள் அனுபவத்தினூடாக எழுதவேணும். அப்படிவரும் படைப்புக்கள்தான் யதார்த்தத்தைத் தொடும் அப்படி நினைத்தவன் ஒரு மாலைநேரம் அவளை பரவிப்பாஞ் சான் குளத்தடிக்கு கூட்டிச்சென்றான்.

அணைக்கட்டிலிருந்த கொக்குகள் பறந்தன. கடற்காகங்கள் தண்ணீருக்குள் தாண்டன சாரத்தைக் கழற்றி தலையில் கட்டிய கிழவன் எருதுகளுக்குக் குளிப்பாட்டிக் கொண்டிருந்தான். மருதமரங்களைச் சுற்றி வௌவால்கள் வட்டமடித்தன., எத்தனை வௌவால்கள் என்று எவரும் எண்ண முடியாது. சிவப் புத்தணல்களாய் விழும் சூரியனின் கதிர்களில், சுமிதாவின் முகம் வெளிறின. சுளித்துவட்டமடித்து வந்த யப்பான் மீன்கள் வாய்களைத் திறந்துமூட தண்ணீர் தளம்பின....

அடுத்தநாள்....

மாலைக்காட்சி எழுதினாள், சுமிதா எழுதின அனைத்தும் உயிரோட்டமாய் இருந்தது. சுமிதா அற்புதமாய் பரீட்சையை எழுதுவாள். அப்படி நினைத்தவன் சின்னச் சின்னக் கட்டுரைப்புத்தகங்களை வாங்கிக்கொடுத்தான்.

அன்று பரீட்சை அவன் தான் சுமிதாவை ஏற்றிச் சென்றான் அவள் வடிவாகப் பரீட்சை எழுதுவாள் பரீட்சைவிட்டுவரும் போது ஐஸ்கிறீம் வாங்கிக்கொடுக்கவேணும் என நினைத்தான்.

பரீட்சை முடியும் நேரம் பார்த்து சுமிதாவை ஏற்றச் சென்றான் மனம் தவித்தபடியிருந்தது. கேட்ட வெடிச்சத்தங்களின் அதிர்வுகள் இப்பவும் நெஞ்சுக்குள் நின்றன. சைக்கிளை வேகமாக மிதித்தான்.

அந்தப் பாடசாலைக்கு அருகில் பெரிய மதகு அதன் வாசலுக்குள் சுமிதா செருகுப் பட்டுக் கிடந்தாள். முகம் புழுதியடித்துக் கறுத்திருந்தது. ரத்தத்தில் தோய்ந்த வெள்ளைச் சட்டையில் இலையான்கள் மொய்த்திருந்தன. கொடியவிமானம்.

சுமிதா துண்டுகளாய் கிடந்த நினைவுகள் வர அந்தப் படத்தை அப்படியே மேசையில் வைத்தான். சுமிதா மாதிரித்தான் அவளுக்கும் அகன்ற கண்கள்... கூரியமூக்கு... சுருள்மயிர்கள்... நடை... நிறம்.

சுமிதா அவனின் உயிர் அந்த உயிரின் நிழலாய்த்தான்- அவன் அவளைப் பார்த்தான். அவளைப் பார்க்கும் வேளைகளில் சுமிதா அவனுக்குள் எழுவாள். அந்தவேளைகளில் கண்கள் உடைப்பெடுக்கும். வெளியில் காட்டாது பேனையை எடுத்துக் கிறுக் குவான். அந்தக் கிறுக்கல்கள்தான் அந்தப் பேப்பரில்...' அதை அவன் சொன்னான் சொல்லும்போது அழுகைவந்தது. விரல்களால் கண்ணீரைத்துடைத்துக் கொண்டு வகுப்புக்குப் போனான்.

அவனைக்கண்டதும் கதிர் சிரித்தான் அவன் கதிரைப் பார்க்கவில்லை. கதிருக்கு பக்கத்தில் இருந்தான் கதிரின் பிறந்த நாள் இன்று ரொபி கொண்டுவந்தான். முதலில் அவனுக்குக் கொடுப்பதாகச் சொல்லியிருந்தான் கதிர் ரொபிப் 'பைக்கற்' றை நீட்டினான். எல்லாம் 'சொக்லற்' ரொபிகள் அவனுக்கு எடுக்க விருப்பமில்லை.- இன்று கதிரின் சந்தோசமான நாள் கதிரின் சந்தோசத்தை அவன் குழப்ப நினைக்கவில்லை ஒரு ரொபியை எடுத்தான்.

முதல் பாடம் டேவிற் சேர் வரவில்லை. பரீட்சைக்கு ஒருமாதம் இருக்கிறது. இன்னும் 'சிலபஸ்' முடிக்கவில்லை அவர் அடிக்கடி லீவுகள் எடுப்பார். அடுத்த பாடத்துக்கு மணி அடித்தது. தட்சணாரீச்சர் வந்தா இன்று மணி அடித்த கையோடு வந்துவிட்டா.

கதிரையில் இருந்து புத்தகத்தை எடுக்க ஞானம்சேர் கூப்பிட்டார். எழும்பி லேஞ்சியால் முகத்தைத் துடைத்தா. திரும்பி பின்சாறியைப் பார்த்து சரி செய்தா மணிக்கூட்டையும் பார்த்தா நெற்றிச் சுருக்குகளில் வழிந்த வியர்வைத் துளி நேராய்க் குங்குமத்துக்கு வந்தது. போனா...

(19ஆம் பக்கம் பார்க்க)



## நூல்நோக்கு

# 'பதிவுகள்' ஒரு முன்மாதிரி

தமிழில் 'பத்தி' எழுத்துக்கள் இப்பொழுது பரவலாக வரத் தொடங்கியிருக்கின்றன. இப்போது அதிகமான வாசகர்களால் வாசிக்கப் படுவதும் பத்திகள்தான். அவரவருடைய ஈடுபாட்டுத்தளத்திற்கேற்ப அவரவர் வாசிக்கின்ற அல்லது தேர்வு செய்கின்ற பத்திகளும் நிறையவுண்டு.

அரசியல், சமூகவியல், பொருளாதாரம், இராணுவியல், கலை, இலக்கியம், •அறிவியல் என நீள்கின்றன. பத்திகளின் வகைகள் இந்தப்பத்திகளை இப்போது எல்லாவாசிப்பு மீடியாக்களிலும் காணலாம்.

கவிதை சிறுகதை, நாவல், போல இப்போது பத்திகளும் புத்தகங்களாக்கப்பட்டு வெளிவந்துகொண்டிருக்கின்றன. 'பத்தி' நூல்களுக்கான கவனிப்பும் கூடித்தானிருக்கிறது. கடந்த பத்தாண்டுகளில் நிறைய நல்ல 'பத்தி' எழுத்துக்கள் புத்தகங்களாக்வும் பட்டிருக்கின்றன.

எங்களுடைய சூழலில் அண்மையில் வெளிவந்த பத்தி எழுத்துப்புத்தகம் அ.யேசுராசாவின் 'பதிவுகள்'.

ஏற்கெனவே கடந்த பத்து வருடங்களின் முன்பு 'அலை' இதழில் யேசுராசா எழுதிவந்த பத்திகள் தொகுக்கப்பட்டு 'அலை' வெளியீடாகவே புத்தகமாக்கவும்பட்டிருக்கிறது.

அரசியல், சினிமா, இலக்கியம், சமூகவியல் என பல தரப்பிலும் தன் கவனிப்பையும் ஈடுபாட்டையும் கொண்டிருக்கும் யேசுராசாவின் எதிர்வினைகள், கருத்துக்கள், அபிப்பிராயங்கள், தகவல்கள் என்று இந்தப்பத்திகள் பன்முகம் கொண்டவை.

ஒரு கலகக்காரனாக நின்று சளைக்காமல் தனியே போராடிய தன்மையை யேசுராசாவின் இந்த எழுத்துக்களில் காணலாம். 'அலை' வெளிவந்த எழுபதுகளின் நடுப்பகுதியிலிருந்து தொண்ணூறின் முற்பகுதிவரையான காலத்தின் அரசியல் கலை, கலாச்சார செயற்பாடுகளின் மீதான கவனக் குவிவாக இந்தப்பதிவுகள்' உள்ளன.

தமிழ்ச்சூழலுக்கப்பாலும், பரந்த தளத்தில், உலகெங்கும் தன் பார்வைப்பரப்பை விரித்த அனுபவத்தையும் அறிவையும் பதிவுகள் காட்டுகின்றன.

ஒரு புதிய வாசகனுக்கு நிறைய ஆச்சரியத்தையும் பல புதிய விடயங்களையும் பதிவுகள் ஏற்படுத்தும். யேசுராசாவின் முன்வைப்புகள், கேள்விகள், விமர்சனங்கள், சாதாரணமானவையல்ல. அதிர்வுகளையும் போலியின் மீது எதிர்ப்புகளையும் ஏற்படுத்த வல்லன அவை. அதேபோல நல்லன மீது பெரும் ஆதரவையும் உள்ளடக்கியிருக்கின்றன.

ஒரு காலகட்டத்தில் மிக வலுவான தோற்றத்தைக்காட்டிய முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தை கேள்விக்குட்படுத்துவது முதல் இடது சாரி என்ற அடையாளத்துள் நின்றியங்கிய ஒற்றைப்படைத்தன்மை படைப் பாணி மீதான விமர்சனங்கள் வரை யேசுராசாவின் எழுத்துக்கள் நீள்கின்றன.

யேசுராசாவின் பத்தியில் ஒரு நிலையமச்சத்தை அவதானிக்க முடியும். யாதார்த்தமும் உண்மையும் பொருந்தி வரவேண்டும் என்ற ஆவல் ஒரு வெளியாக விரியத் துடிக்கும் அந்தரிப்பு அது கூர்மையும் நுட்ப மான எழுத்து யேசுராசாவினுடையது. எப்போதும் எதிலும் ஒரு சீரியஸ் தன்மை அதனுள் நிரம்பியிருக்கும். இவற்றுக்குரிய மொழியும் விவரிப்பும் கூட அவருக்குண்டு. நறுக்கென விழும் படிமங்கள்; ,நேர்த்தியான உரைப்பு.

பத்திகளில் அதிகம் சுவாரஷ்யத்தையூட்டும் எழுத்துக்கு சுஜாதாவின் பத்திகளைக் காட்டலாம். சிம்பிளாக, பரந்த தளத்தில் எல்லாவிடயங்களைப் பற்றியுமாக சுஜாதாவின் பத்திகள் இருக்கும் எள்ளலும் கதைத் தன்மையும் இணைந்து ஒருவித நூதனக் கலவையாக இருக்கும் அந்தப்பத்திகள் மெல்லிய விமர் சனங்கள், சிறு கிண்டல்கள், பரந்த தகவல்கள் என்று வெகுசன வாசகத் தளத்தை நோக்காகக் கொண்டிருக்கும் அவை.பொதுவாக வெகுசன வாசகத்தளத் திற்கு அறி முகப்படுத்த வேண்டிய விடயங்கள், தகவல்கள் என்பதாகத்தான் சுஜாதாவின் பத்திகளைக் கூறலாம்.




யேசுராசாவின் பத்திகள் தேர்ந்த வாசகருக்கானவை. வைக்கப்படும் விமர்சனங்கள்கூட மிக உக்கிரமாக, அல்லது தர்க்கபூர்வமாக ஆதாரங்கள் நிறைந்ததாக இருக்கும். கலாச்சாரப் போலிகளைக் கிழிக்கும், அம்பலப் படுத்தும் எழுத்து புதிய கலாச்சார வழிகளையும் காட்டும்.

சுஜாதாவின் பத்திகளில் ஒருவித சுதந்திரத்தன்மையை படிக்கும் வாசகர் உணரலாம். தீமானங்களைத் தூக்கலாக நிறுத்தாமல் விடுவதனூடாக சுஜாதா இதைச் சாதிக்கிறார். சொல்லுதல், அறிமுகமாக்குதல், காட்டுதல் என சுஜாதா தொடங்கிறார்.

யேசுராசாவோ சொல்லுதல் காட்டுதல் அறிமுகமாக்குதல் என்பதுடன் விளக்குதல், விமர்சித்தல், கருத்துரைத்தல், நிலைப்பாடெடுத்தல், தமிழ்த்தல், நிராகரித்தல் என்று தீமானகரமாகிறார். இது வாசகனின் சுதந்திரவெளியை தன்வயப்படுத்தி அவனைத் தன்னுடன் இணைத்துக் கொள்ள முயல்வதாக இருக்கிறது.

இங்கே யேசுராசா தேர்ந்த வழிமுறை, பகிரங்கமானதாகவும் தர்க்க பூர்வமாகவும் இருப்பதால் அவருடைய தீமானங்கள் அவ்வாறிருப்பதில் பெரும்பிரச்சினையாயில்லை.


யேசுராசாவில் ஒரங்கட்டுதல், புறக்கணித்தல் வஞ்சித்தல், என்ற குறைப்பண்புகளைக் காண்ப தரிது. நல்லவற்றை, நவீனமான வற்றை, சரியானவைகளை காட்டுதல் ஒருஉரிய செயற்பாடு என்ற நம்பிக்கை எப்போதும் யேசுராசாவுக்கு இருப்பதால் அவர் பிழைகளையும் தவறுகளையும் போலிகளையும் கண்டிக்கத்துணிகிறார். கண்டனத்துக்குரிய தரப்பு எவ்வளவுதான் வலிமையாக இருந்தாலும் யேசுராசாவின் குரலோ எழுத்தின் வீச்சோ மெலிந்து பின்தங்கி விடுவதில்லை.

இதனாற் தான் போலும் "அவருடைய (யேசுராசாவினுடைய) எல்லாக்காலங்களிலும் சலியாத, சரணடையாத ஒரு முரணியாகவே, தனியனாகவே அவர் இருக்கிறார்." என்கிறார் யேசுராசாவைப்பற்றி நிலாந்தன். மேலும் நிலாந்தன் ஆபிரிக்கா நாடுகளில் உள்ள இத்தகைய முரணிகளைப்பற்றியும் தனியங்களைப்பற்றியும் குறிப்பிடும் போது போராடும் நிலங்களில் ஆபிரிக்க நாடுகளில் வாழும் தனியங்களும் முரணிகளும் தமது சமூகத்தைப் பொறுத்தவரை முரணிகளாக இருக்கும் அதேசமயம் தமது சமூகத்தின் பொது எதிரிக்கு எதிரான போராட்டங்களின் போதெல்லாம் தமது சமூகத்தின் வலிகளைப் பகிர்ந்து கொள்வோராகவும் நீதியின் பக்கம் நிற்போராகவும் காணப் படுகின்றார்கள்" என்று இவ்வாறு நிற்போரில் ஒருவராக யேசுராசாவை அடையாளம் காட்டுகின்றார்.

யேசுராசா சிறு பத்திரிகை உலகில் தீவிரமாக இயங்கியவர். அப்படிப்பார்க்கும் போது யேசுராசாவின் எழுத்திலும் சிறுபத்திரிகைக்குரிய குணவியல்பைத்தானே காணமுடியும் என்ற வாதமும் இருக்கும். அதில் உண்மையுண்டு.

கவிதை, சிறுகதை, விமர்சனம், பத்தி, மொழி பெயர்ப்பு என இயங்கிவரும் யேசுராசாவின் ஐந்தாவது நூல் இது. முதலில் 'திசை' பத்திரிகையில் 'தூவானம்' பகுதியில் எழுதிய பத்திகள் புத்தகமாக வந்திருக்கிறது. இவை இரண்டும் தமிழ் வாசகனின்பார்வைப் பரப்பை அகலிக்கும் விருத்தியுடையவை.

ஒரு எழுத்தின் சிறப்பு இவ்வாறிருக்குமெனில் அது அதன் நோக்கில் வெற்றிகொண்டதே. பதிவுகள் ஒரு முன்மாதிரி. பதிவுகளால் யேசுராசாவும் ஒரு முன்மாதிரி. ஆனால் பதிவுகள் போன்றொரு சீரியஸான பத்தி எங்கள் சூழலில் இன்றில்லாது போய்விட்டது துயரமே.



மகிழ்

---

## ஏதோ ஒன்று

விடைபெறும் போது தான்
நினைவுக்கு வந்தது.
கேட்க நினைத்ததை மறந்து போனது
கிளர்ந்து எழுந்து நினைவுகள் உறைக்க.
எனக்குள் நானே -
என்னைத் திட்டினேன்

சில சமயங்களில் இப்படித்தான்
பேச்சு வாக்கில் நழுவும் மனத்தால்
முக்கிய விடயங்கள் -
திசை மாறி விடுகின்றன.

வாழ்வும் கூட
நினைக்கும் பாதையிலா போகின்றது?
ஏதோ, எவரோ, எப்போதோ.
நிர்ணயித்த பாதையில் தானே!

தத்துவங்களுடன் சமரசம் செய்து
சமாதானமாவதைத் தவிர -
வேறு மாற்றீடு என்ன இருக்கிறது?
எனினும் கூட,
ஏதோ ஒன்றை இழந்த சோகம்
கார்மேக மின்னலென
கிளை வெடித்து மறையும்.

ராதேயன்

---

## வென்று தந்த வீரருக்கு கைமாறு இதுதானா?

கண்டி வீதியிலே கண்மண் தெரியாமல் ஓடுகின்ற
கையேசுகளே...கனரகங்களே.......
இன்னும் இன்னும் பெயர்புரியா இயமன்களே.........
இத்தனை வேகமாய் எங்கே ஓடுகின்றீர்?
செத்துச் செத்து உங்களால்
சீரழியும் குடும்பங்கள் எத்தனை?
நித்திரையில்.... நிறைவெறியில் நீங்கள் காட்டுகின்ற
வித்தைகள் போதும் போதும்.... உங்களால்
பாதையில் போகவே பயமாக இருக்கிறது.
பள்ளிக்கு அனுப்பிய பிள்ளை வீடுவருமட்டும்
வெந்து இதயம் துடிக்கிறது
நோயாளர் காவுவண்டி தூரத்தே போனாலும்
அடிவயிறு துடிக்கிறது......
காலையிலே விடைபெற்று போகின்ற கணவன்வரவு
கணம்பிந்திப் போனாலும் கழுத்துக் கயிறு கனக்கிறது
மேலாலே பிளேன் துரத்தத் துரத்த
யாரையுமே கொல்லாமல் ஓடிய வாகனங்கள்
எதுவுமே துரத்தாத பொழுதிலுமேன்
எமனாக வருகின்றீர்?
எமன் உங்களுக்கென்ன இலஞ்சமா தருகின்றான்?
எல்லோரையும் முந்திக் கொண்டு
எங்கே போகிறீர்கள்?
பாதையிலே ஒதுங்கிப் பதுங்கி நின்றாலும்
யானைக்கு அடித்ததுபோல் எம்
காதுக்குள் குழல் ஊதி கடும் சினத்தை மூட்டுகிறீர்!
உங்கள் மடிகளுக்குள் ஊற்றுகின்ற பெற்றோல்
எத்தனை வயிறுகளைப்பற்றி எரிக்கிறது.
இத்தனை சாவுகளை...... இழப்புக்களை சந்திக்கவா
வித்தானார் எம் மாவீரர்?
கடும் சண்டை புரிந்து கண்டிவீதியை
வென்று தந்த வீரருக்கு செய்கின்ற
கைமாறு இதுதானா?
கண்டி வீதியில் இதற்காகவா கைகுலுக்கினோம்.
பொருளாதாரத் தடை குரல்வளையை நெரித்த போதும்
புலம்பவில்லை நாங்கள்.
பதுங்கு குழிகளுக்குள் பாம்புகளோடு அருகிருந்தும்
இப்படிச்சாகவில்லை
இப்போது மட்டும் ஏனிந்தச் சாக்குரல்கள்?
கிடங்குகளாய் எங்கள் தெருக்கள் இருந்த போது
துளம்பாத வாகனங்கள்
தார்பூசி மெழுகியபின் தடுமாறிப் பயணிகளைக்
கொல்வது ஏன்? குடி அழிப்பது ஏன்?
விடைகாண வேண்டும் நாளும்
விணாகச் சாவதை விட்டொழிக்க வேண்டும்.

ஆதிலட்சுமி சிவகுமார்.




# அனுபவமே ஆசான்



முரளி வீட்டில் கடைசிப் பிள்ளை என்பதால் செல்லமாகவே வளர்ந்தான் படிப்பில் மிகவும கெட்டிக்காரன் விளையாட்டிலும் வீரன் தரம் பத்தில்தான் படித்துக் கொண்டிருந்தான். அவனுக்கு சகல பாடங்களுமே விருப்பத்திற்குரியனவாகவே இருந்தன. ஆனால் வீட்டில் இருக்கும் நேரங்களில் எல்லாம் அவனது அப்பா திருஞான செல்வத்துடன் அடிக்கடி சண்டை போடுவான். அவரது பழைய காலத்துப் படங்களை தொலைக்காட்சியில் விரும்பிப்பார்த்தால்; முரளி விடவேமாட்டான். நக்கல் அடிப்பான். கிண்டல் பண்ணுவான். வேறு ஏதாவது போட்டுப் பார்ப்பதற்கு முயற்சிப்பான். அப்பாவும் தன்பக்க நியாயங்களை; விளக்கங்களைக் கூறுவார். அப்பாவின் அறிவுரைகளை கேட்பதில் கூட முரளிக்கு வாக்குவாதம் ஏற்படும்.

முரளியின் அம்மா கார்த்திகா அவனுக்கு பல அறிவுரைகளைக் கூறுவாள். அப்பாவுடன் சண்டை போடாதே அவருக்கும் வயது ஆகிறது பிரசர் ஏற்றாதே. வருத்தம் அதிகமாகி விடும் என்றெல்லாம் கூறுவாள். ஆனால் முரளி அவற்றை மறந்தவனாய் பழையபடி சண்டைக்குத் தயாராகி விடுவான்.

ஒரு நாள் முரளியின் உயிர் நண்பன் பகீரின் அப்பா மாரடைப்பினால் மரணமாகி விட்டார். மரணவீட்டிற்குப் போவதற்காய் முரளி தன் பாடசாலைத் தோழர்களுடன் ஆயத்தமானான். ஆனால் தாயிடமும் கூறிவிட்டுப் போவதற்காக வீட்டிற்குப் போனான். அம்மாவிடம் தான் போகும் விடயம் தொடர்பாகக் கூறிவிட்டு; அப்பாவிடமும் தொலை பேசியில் கூறும்படி அம்மாவிற்கு கூறினான். மகன் போகும செய்தியை தாய் தொலைபேசியில் தந்தைக்குக் கூறியபோது மகனிடம் கொடுக்கும்படி கூறி முரளியிடம் தொலைபேசியில் கதைத்தார். முரளியை புறப்படுவதற்கான ஆயத்தங்களைச் செய்யும்படியும் தான் உடனே புறப்படுவதாகவும்; தன்காரில் கூட்டிக் கொண்டு சென்று பஸ் ஏற்றிவிடுவதாகவும். அதன்படி சிறிது நேரத்தில் வந்தவர் முரளியையும் அவன் தோழர்களையும் பஸ் ஏற்றினார்.

மரணவீட்டிற்குப் போன முரளி பகீரின் நிலமையைப்பார்த்து பதறிப்போனான். பகீர் தன் அப்பாவைப் பற்றிக் கூறும் போது விம்மி விம்மி அடக்கமுடியாமல் அழுதான் தந்தையின் இழப்பு அவனை அதிகமாக பாதித்திருப்பதை அறிந்த முரளி அவனைத் தேற்றினான். ஆறுதல் கொடுத்தான். அப்போது ஒன்றை முரளி உணர்ந்தான். சீச்சீ...... இனிமேல் என் அப்பாவுடன் சண்டை போட மாட்டேன். என்னை வளர்த்து ஆளாக்கும் அதிசய பிறவி அப்பா ஒரு புதையல் (கண்ணில் தெரியும் போதுதான் புதையலை எடுக்கலாம். அதற்கு பிறகு அது மறைந்து விடும்) தேடற்கரிய பொக்கிசம் என்பதை நன்றாக உணர்ந்து கொண்டான்.

வீட்டிற்கு வந்த முரளி அம்மாவிடம் பகீரின் நிலமைகளைக் கூறி அனுதாபப்பட்டான். தான் இனிமேல் அப்பாவுடன் சண்டை போட மாட்டேன் என்றும் கூறினான். அன்னை அவனை பார்த்து தன் மகன் திருந்தி விட்டான் என்று ஆறுதல் அடைந்தாள்.

இப்பொழுது எல்லாம் முரளியும் அவன் அப்பாவும் மிகவும் நெருக்கமாகி விட்டார்கள். அப்பாவின் மனதை புண்படுத்திய முரளி இப்பொழுது அப்பாவை குளிமைப் படுத்தத் தொடங்கி விட்டான் பெற்றோரை விட்டு வெளியில் எங்கு சென்றாலும அம்மா அப்பாவின் பாதத்தில் வீழ்ந்து வணங்கிவிட்டுத்தான் செல்வான். அம்மாவுக்கும்; அப்பாவுக்கும் தன் மகனை நினைக்கும் பொழுதுகளில் அளவிடமுடியாத ஆனந்தம். அனுபவம் முரளிக்கு நல்லதொரு ஆசானாகி விட்டது.

**சு.கீர்த்திகா**

## வாரம் ஒரு குறள்



*மற்றவர்களுடைய குறைகளை தேடி அலைவதை விட, அவர்களது நிறைகளை பற்றிப் பேசுவது தான் உண்மையான ஆறறிவு படைத்த மனிதர் இயல்பாக இருக்க வேண்டும்.*

*ஆனால் அடுத்தவர்களது குறைகளை மட்டுமே கண்ணில் தெரிவதும். அதை மற்றவர்களுடன் விவாதிக்காது விட்டால் தலையே வெடித்துவிடும் போல அலைபவர்கள் நம்மிடை இருக்கின்றோம். இப்படியான குணவியல்புடைய நாம் கீழானவர்களே அன்றி வேறு யாராக இருக்க முடியும்.*

*உண்மையில் பறை அறைபவனும் இப்படி அடுத்தவர்களை பற்றி அவதூறாக தூற்றித் திரிபவர்களும் ஒன்றுதான் அதுமட்டுமின்றி இத்தகைய தூற்றும் தன்மை கொண்டவர்கள் மக்களில் மிகவும் கீழானவர்கள் என்றும் கயவர்கள் என்றும் தான் கூறப்படுவதை அவர்கள் அறிவதில்லை இதனைத்தான்*

*"அறைபறை அன்னர் கயவர்தாம் கேட்ட*
*மறைபிறர்க்கு உய்த்துரைக்க லான். ."*

*என்று வள்ளுவப்பெருந்தகை மிகவும் அழகாகக் கூறியுள்ளார்.*

## சொற்சிலம்பம் - 33

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| அ | ல் | வா | நீ | ரீ | இ | தி |
| யூ | மீ | சா | ன் | சேள | மை | க |
| மை | ஆ | ன | லி | கீ | வ | வி |
| ப | ளி | னா | த | ரா | ஜெ | எ |
| யூ | ரா | மா | ஈ | வீ | க | பொ |
| ஞா | ண் | உ | கௌ | பி | லா | ட் |
| ஊ | சோ | கா | று | சா | ஆ | க் |

கட்டங்களில் காணப்படும் எழுத்துக்களை இணைத்து கேட்கப்படும் வினாவுக்கு விடை அனுப்பி வையுங்கள்.

### சொற்சிலம்பம் - 31 இன் விடைகள்

01. நிலா.
02. அம்புலி.
03. மதி.

01. வலை.
02. தூண்டில்.

### சொற்சிலம்பம் - 31 இன் பரிசுக்குரியவர்

பொ.நிரோசன்,
தரம்.8, செம்மலை ம.வி,
முல்லைத்தீவு.

### சொற்சிலம்பம் - 31 இன் பாராட்டுக்குரியவர்கள்

01. N.சுரவீனா,
வ/விபுலானந்தா கல்லூரி,
வவுனியா.

02. ஜெ.கோபிகா,
238 மாடசாமிகோவிலடி,
பண்டாரிகுளம் வவுனியா.

03. அ.சோமேஸ்ராஜா,
புனிதபூமி சிறுவர்இல்லம்,
முத்தையன்கட்டு.

04. பு.ஜெஸ்லி,
விக்னேஸ்வரா ஒழுங்கை
கரவெட்டி.

05. கி.பிரணவன்,
தரம்.2, நட்டாங்கண்டல்,
மாங்குளம்.

06. சிவராசா நிதர்சன்,
தரம் 6B,
மு.வற்றாப்பளை ம.வி.

01. முக்கனிகள் எவை?
01) ..............................
02) ..............................
03) ..............................

02. சூரியனின் வேறு பெயர்கள்?
01) ..............................
02) ..............................

பெயர் :- ..............................
முகவரி :- ..............................
..............................

*சொற்சிலம்பம் - 33*
*ஈழநாதம்,*
*யாழ் சாலை,*
*கிளிநொச்சி.*

## இலங்கை வானில் புதிய இரண்டு வால் நட்சத்திரங்கள்

(Neat Linear) நீற், லீனியர் ஆகிய பெயர் கொண்ட இரு வால் நட்சத்திரங்கள், முறையே மே 19-22 வரையான நாட்களிலும் மே 4-10 வரையான நாட்களிலும் இலங்கை வானில் தென்படும்.

லீனியர் என்ற வால் நட்சத்திரம் மே 19ம் திகதி தெளிவாகத் தெரியும். சூரியன் மறைந்த பின் தென் மேற்கு வானில் அது தென்படும். மே 22ம் திகதி வானில் தென்படும் நட்சத்திரங்களில் ஆகப் பிரகாசமானதான ஸிறியஸ் இல் இருந்து. $3^0$ கோணத்தில் இதன் தலைப் பகுதி காணப்படும்.



சிறிது மங்கலான நீற் வால் நட்சத்திரம் மே முதல் வாரத்திலிருந்து சூரியன் மறைந்த பின் தென் மேற்கு வானில் ஸிறியஸ்சுக்கு சிறிது இடப்புறமாகக் காணப்படும்.

மே 4-10 வரையான நாட்கள் நீற் வால் நட்சத்திரத்தை காண சிறப்பான நாட்களாகும். அந்த நாட்களில் அது ஆகக் கூடிய பிரகாசமாகத் தென்படும்.

மே மூன்றாம் வாரத்தில் இரண்டு வால் நட்சத்திரங்களும் மாலை நேர வானில் காணப்படும்.

மே 4ம் திகதி பி.ப 11.51 மணிக்கு பூரண சந்திர கிரகணம் நிகழும்.

## சிந்திக்கச் சில

01. ஒரு பிறவியில் ஒருவன் கற்ற கல்வி ஏழு பிறவிகளிலும் தொடர்ந்து துணைசெய்யும்.

02. சிறகடித்துப் பறப்பதைவிட சிந்தித்துச் செயற்படுவதே மேலானது.


03. காகம் ஆகாயத்தில் பறந்தாலும் ஆகாரத்திற்குக்கீழே வந்துதான் ஆக வேண்டும்.

04. ஒருவன் நல்லவனாகவோ, கெட்டவனாகவோ கூறப்படுதல் அவன் சேர்ந்த கூட்டத்தால் தான்.

05. அரண்மனையாயினும் அழைக்காமல் போகாதே.

**ந.பிரதீபன்**

## கைவண்ணம்



ப. சர்மிலா,
யா/சு.ம.க
யாழ்ப்பாணம்.

## கவிதைத் துளிகள்

**ஒழுக்கம்.**
உயிரைக் காட்டிலும்
பாதுகாத்து
அதை அழிவு படாமல்
வருந்திக் காக்கும்
பொக்கிசம்.

**அன்பு**
தம்மால் நெருக்கம்
கொள்ளப்பட்டாரது
துன்பத்தைக்
கண்டபொழுது
பொழிகின்ற
கண்ணீரின்
வெளிப்பாடு.

**அறிவு**
மனத்தை
அதன் போக்கில்
செல்லவிடாது
தீமையை நீக்கி
நன்மைப் பகுதியிலே
செலுத்துவது.

**ந.ரஜீ.**

## அழகுத்தாய்

*வானத் தேவதை*
*கண்ணீரால்*
*அரவணைத்து.*
*நிலவுத்தாரகை*
*வெண்ணாடை*
*புனைந்து*
*சூரிய பகவான்*
*பார்வை கொடுத்து*
*வாயுத் தேவன்*
*சுவாசம் கொடுத்து*
*இறைவன்*
*எமக்களித்த*
*அழகுத்தாய் (பூமி)*

**சி.க.மகேந்திரகுமா**

## நகைச்சுவை




"இந்த மணிக்கூடு ஓடுமா?"
"ஓ! நாம தூக்கிக் கொண்டு ஓடினா ஓடும்!"

## புரிதலும் தெளிதலும்

கோமாளிகள் ஒன்று சேரும் இடத்தில் சிரிப்புக்கு பஞ்சம் இருக்காது.

கலகக்காரர்கள் ஒன்று சேரும் இடத்தில் கலகத்திற்கு பஞ்சம் இருக்காது.

கலைஞர்கள் ஒன்று சேரும் இடத்தில் நல்ல



## என்ன சொல்லி அழைப்பது?

கருத்துக்கு பஞ்சம் இருக்காது.

இப்படி பலவற்றை அடிக்கிக் கொண்டே வந்தான் எனது நண்பன்.

இப்படி அடுக்குவதற்கு ஏதாவது விசேட காரணம் இருக்கிறதா என எனது நண்பனிடம் கேட்டேன்.

அவன் என்னை ஒரு விதமாகப் பார்த்தவன் இலங்கையின் பதின்மூன்றாவது நாடாளுமன்றம் கூடிய முதல் நாளை பார்த்த பின்புமா இப்படி கேட்கிறாய் என்றான்.

எனது நண்பன் அவ்வாறு கேட்டதில் நியாயம் இல்லாமல் இல்லை. ஆனால் நண்பன் அவ்வாறு கூறியது போல கோமாளிகள் ஒன்று சேரும் இடம் தான் நாடாளுமன்றம். என்று கூறிவிடவும் முடியாது. அதற்காக அறிவாளிகள் என்றோ மக்கள் பிரதிநிதிகளோ ஒன்று சேரும் இடம்தான் நாடாளுமன்றம் என்றும் கூறிவிட முடியாது.

ஏதோ இது இரண்டிற்கும் இடைப்பட்ட ஏதோ ஏவரோ சேரும் இடம் தான் நாடாளுமன்றம் என்று நண்பனை சமாளிக்க வேண்டும் என்பதற்காக கூறினேன்.

ஆனால் நண்பன் மீண்டும் அடுக்கத் தொடங்கினான் இலங்கையின் நாடாளுமன்றத்தில் இப்போது.

மதவாதிகள் ஒன்று சேர்ந்திருக்கிறார்கள். இனவாதிகள் ஒன்று சேர்ந்திருக்கிறார்கள்.

புரட்சி வாதிகள் என்று சொல்லிக் கொள்பவர்கள் ஒன்று சேர்ந்திருக்கிறார்கள்.

இதற்குள் பாவம் மக்கள் பிரதிநிதிகளும் ஒன்று சேர்ந்திருக்கிறார்கள்.

ஆகவே நாடாளுமன்றத்தை எப்படி சொல்லலாம் என என்னிடம் வினாவினான்.

எனக்கு ஒன்று மட்டும் புரிந்து போனது. நண்பன் ஏதோ எனது வாயால் பிடுங்க வேண்டும் என நினைப்பது.

ஆனால் நான் நண்பனிடம் கேட்டேன் அப்படியானால் எப்படி நாடாளுமன்றத்தை அழைக்கலாம். எனக்கேட்டேன். அதற்கு நண்பன் கூறினான்,

"சேரக்கூடாதவர்கள் ஒன்று சேரும் இடம்" என்றான்.

உண்மைதான் இதனை கடந்த வாரம் தொலைக்காட்சியிலும், வானொலியிலும், பத்திரிகையிலும் பார்த்தோம், கேட்டோம், ஒன்று சேரக்கூடாதவர்கள் ஒன்று சேர்ந்தால் என்ன நடக்குமோ அதே காட்சி அப்படியே அரங்கேறியது.

எப்போதுமே சனநாயகமும் வன்முறையும் சந்திக்கும் போது சனநாயகம் வீழ்ச்சியுறும், இப்போது இலங்கையின் நாடாளுமன்றத்தில், சனநாயகத்தின் பெயரால் சனநாயகமும், மதத்தின் பெயரால் மதவாதமும், புரட்சி காரர்கள் என்ற பெயரில் வன்முறையும் சந்திக்கும் இடமாகி சனநாயகத்தின் சின்னம் என்று சொல்லப்படும் வாக்குப் பெட்டியின் மேல் அமர்ந்து சனநாயகத்திற்கு பாரமாகிப் போனார்கள்.

இனி எப்படி இலங்கையின் நாடாளுமன்றத்திலிருந்து நாட்டுமக்களுக்கு சனநாயகத்தின் பலாபலன்கள் கிட்டப் போகிறது.

இதற்குப் போட்ட முதல் சுழிதான் செங்கோளுக்கு பிக்குகள் மரியாதை செலுத்தாமல் விட்டதே.

— வேழினி




## தொடர் - 16

புறப்பட்டுச் சிறிதுதூரம் போனதுமே வானை நிறுத்தி, எப்படி அதன் மேற்கூரையைத்திறந்து அதனூடாக மிருகங்களைப்பார்ப்பது தேவையில்லாதபோது எப்படி மூடுவது என்பதை அயூப் விளக்கினார். நாங்கள் கூரையைத் திறந்ததும் பலத்த தூறலாய் மழை தொடங்கிற்று. "ஸஃபாரியில் மழைக்கு அஞ்ச முடியாது..." என்றார் அவர். ஏதோ வாழ்க்கைத் தத்துவத்தையே எளிமையாகச் சொன்னது போலிருந்தது. 'ஸஃபாரி' என்பது உல்லாசப் பயணமல்ல- என்று இணையம் வேறு சொல்லியிருந்தது. காட்டில் நடக்கவும், காத்திருக்கவும், நனையவும், காயவும் கூட வேண்டியிருக்குமென்றும்; அதற்கேற்ற ஆடைகள், பளிச்சிடாத, சூழலோடியைந்த நிறங்களில் மற்றும் கணுக்கால்களுக்கு மேல வரும் பூட்ஸ் அணிந்திருக்க வேண்டுமென்றுங் கூடப் படித்து அதற்குத் தக நிற்க முயன்றிருந்தோம்.

நீண்டு கிடந்த ஒரு குன்றைத் தாண்டியதும் அதற்கப்பால் கடல் போல் பரந்து கிடந்தது நக்குறுவாவி. சட்டென்று மழை விட்டு முகில் கலைந்ததில் நீர்ப்பரப்பு மின்னலாயிற்று. கரைநெடுக கண்ணுக் கெட்டிய தூரம் இளஞ்சிவப்புப் போர்த்துக் கிடந்தது. பார்த்துக் கொண்டிருந்த போதே அந்தச் சிவப்புப் படையில் ஒரு பகுதி பிய்ந்தெழும்பிப் பறக்கலாயிற்று. நாரைக்கூட்டம்! உலகின் செந்நாரைகள் யாவும் நக்குறுவாவியை மொய்த்து மூடியிருக்க வேண்டும்!

நீர்ப்பரப்பில் மிதந்து கரையொதுங்கி இளஞ்சிவப்பு ரோசா இதழ்களாய்க் கரையெல்லாம் மூடிக்கிடந்த நாரைச் சிறகுகளைப் பார்த்த போது தான் விடுதியின் வரவேற்பறை வாசலில் ஒய்யாரமாய்ப் படர்ந்து பூவாய்ச் சிலிர்த்திருந்தது உண்மையில் ஒரு கொடியேயல்ல வென்றும் இந்த நாரைச் சிறகு வேலைப் பாடுதானென்றும் சட்டென்று புரிந்தது.

வாவியைத் தாண்டி காட்டுக்குள் போக கால் மணி நேரம் மாலை வெய்யில் பிரகாசமாயிருந்தது. ஒரேயடியாக அதைக் "காடு" என்று சொல்லிவிட முடியாதிருந்தது; அடர்திருந்த பெரியதொரு தோப்புப் போல. எங்கும் நிறைந்து, உயர்ந்து, விரிந்து, குடைபரப்பி, நின்ற 'அக்கேஷியா'-வேல-மரங்கள் தேமல் படர்ந்தது போலிருந்த அடி மரங்களைஒட்டி சிறுபுதர்கள், பற்றைகள், இடையில் வளைந்தும் நெளிந்தும், கிளைபிரிந்தும், கூடியும் ஓடிக்கொண்டிருந்த மண்பாதை; எங்கள் ஒழுங்கைகள் போல மண்பட்டும்-மக்கிமாதிரி-மஞ்சள் சேறாய்த் தெரிந்தது. ஒரு வாகனம் மட்டும் போகக் கூடிய அகலம். வாகனச் சில்லுகள் பதித்த இரட்டைத் தடத்தில் ஆங்காங்கு நீர் தேங்க, ஒருவலைப் பின்னல் போல அக்காட்டில் படிந்திருந்தது பாதை.

வேல மரச்சூழலுடன் ஒத்திசைவு கொண்டு நிற்பதே தெரியாமல்-உச்சாணிக் கொம்புகளை மேய்ந்து கொண்டிருந்த ஒட்டகச் சிவிங்கிகளைக் கவனித்துத் தான் கண்டு பிடிக்க வேண்டியிருந்தது.

கமெராவின் கிளிக் சத்தத்திற்கு கூட எச்சரிக்கை கொண்டு காதுகளை நிமிர்த்தி ஓடத்தயாராகும். மான் கூட்டங்களில் மட்டும் மூன்று வகை. மரக் கூட்டங்களுக்கு இடையில் வரும் பரந்த வெட்டைகளில் கூட்டங் கூட்டமாக குனிந்த படி - ஒரு கணமும் ஓயாது வீசும் வால்களுடன்- கருமமே கண்களாய் நிற்கும் வரிக்குதிரைகள்; 'மினி - ஸ்கேட்' போட்ட பெண்கள் மாதிரி நடந்து



காட்டி வானைக் கண்டதும் வெருண்டோடும் தீக்கோழிகள் - அவை மண்ணுக்குள் தலையைப் புதைக்கிற நோக்கமிருப்பதாய்த் தெரியவில்லை; எங்கிருந்தென்றில்லாமல் ஓயாமல் இசைக்கும் பறவைகள் என்று எங்களைச் சுற்றி காடு உயிர் கொண்டிருந்தது. வெய்யில் மறைய இன்னும் நேரமாகும் மழைத் தூறல்களும் மாலை வெய்யிலும் ஒளித்து விளையாடிக் கொண்டிருந்தன.

"நீங்கள் அதிஷ்டசாலிதான்..." என்ற படி வானை நிறுத்தினார் அயூப். "அதோ.."

பக்கத்து வெட்டையில் காண்டாமிருக மந்தையொன்று மேய்ந்தபடி நகர்ந்து கொண்டிருந்தது - சிறிய யுத்தராங்கிகளின் அணியொன்று வந்தால் இப்படித் தான் இருக்கும் போலும்!

"இவை வெள்ளைக் காண்டாமிருகங்கள்..."

"வெள்ளையாகத் தெரியவில்லையே, சாம்பல் நிறந்தானே?"

"அவற்றின் வாய்நிறத்தை வைத்துத் தான் இந்த பிரிப்பு...." மந்தை எங்களை நோக்கித் தான் வந்து கொண்டிருந்தது. இயங்கிக் கொண்டிருக்கும் இயந்திரஒலியைக் கூடச் சாட்டை செய்யாமல்.

"சற்றுத்தள்ளிப் போவோமா?"

"பயப்படாதீர்கள்..." அயூப் பின் ஆறுதல் எங்கள் இதயத்துடிப்பை குறைப்பதாயில்லை.

ஏழெட்டு அடி கூட இல்லாத தூரத்தில் எங்கள் வானைக் கடந்து எதிர்ப்புறம் போயின சில சித்தமருத்துவரான என் பாட்டனாரின் அலுமாரியில் மருத்துவத் தேவைக்கென இருந்த காண்டாமிருகக் கொம்பு பல ஆண்டுகள் கழித்து மனதில் தோன்றி மறைந்தது.

"வேண்டிய மட்டும் படமெடுங்கள் அவை மிரளா..."குருவியொன்று பறந்து போய் காண்டாமிருகத்தின் தோழின் மேல் உட்கார்ந்தது. வானம் மீண்டும் மெல்லக்கறுத்து, தூமி விழலாயிற்று.

படம்பிடிப்பது சிக்கலாயிற்று.

தங்கள் பாட்டில் போய்க் கொண்டிருந்த மிருகங்களுக்குள் என்னவோ நடந்திருக்கவேண்டும். அவற்றிலிரண்டு ஒன்றையொன்று பார்த்து முக்காரமிடத் தொடங்கின. இருந்தாற்போல ஒன்றை மற்றது துரத்தி இடித்தது "போய் விடுவோம்..." கெஞ்சாத குறையாய் அயூப்பிடம் சொன்னோம். எனக்கு அறுபது களில் பார்த்த 'ஹட்டாரி' படம் நினைவுக்கு வந்தது: றீகலில் பார்த்திருக்கவேண்டும். கென்யாவிலோ தன்ஸானியாவிலோதான் எடுத்த படம் அது. மிருகக்காட்சிச் சாலைகள் போன்றவற்றிற்காக வன விலங்குகளை உயிருடன் பிடிக்கிறவர்களின் சாகசம். அதில் இப்படித்தான் ஒரு காண்டா மிருகம் ஜீப்பொன்றைத் தன் கொம்பால் தூக்கிப் புரட்டிப் பந்தாடு கிறது! இங்கே - நல்லகாலமாக - சண்டை போடுகிற இரண்டும் எங்களுக்கு எதிர்த்திசையில் மூசி மூசி ஓடிக்கொண்டிருக்கின்றன; ஆனால், மந்தையில் பாதி இப்போது பாதையின் குறுக்கே கடந்து கொண்டிருக் கிறது! கியரைமாற்றி, என்ஜினை விரைவாக்கி, இருந்தாற்போல - ஹோணையும் ஓங்கி ஒலித்தபடி - மந்தைக்குள் புகுந்து, வெட்டித்தாண்டியது வான்! கடவுளே என்றிருந்தது.

சற்றுத் தூரம் போய் ஆசுவாசமாக மூச்சுவிட்டதும் "ஹட்டாரி படம் பார்த்திருக்கிறீர்களா?" என்று கேட்டேன். அயூப்மட்டும் பார்த்திருந்தார். நன்றாக நினைவுமிருந்தது அவருக்கு. "'ஹட்டாரி' என்றால் என் பொருள் தெரியுமா?" - என்னைத் திருப்பிக்கேட்டார்.

"இல்லை"

"ஸ்வாஹிலியின் 'ஹட்டாரி' என்றால் 'ஆபத்து' என்று பொருள்!"

"அதேபோல இன்னுமொன்றிரண்டு படங்கள் கூட வந்தன, இல்லையா?"

"ஒன்றிரண்டல்ல, பல!"

" 'செரன்ஜெற்றி', 'கொங்கா' - இரண்டு பார்த்தேன்..."

"செரன்ஜெற்றி! நானும் பார்த்தேன்..." என்ற அயூப் சொன்னார்,

"...நாளை அந்த செரன் ஜெற்றி எல்லைக்குத்தான் போகிறோம்!"

"என்னது?" எனக்குப் புரியவில்லை.

"நாளை மஸாய் மாறாவுக்குப் போகிறோமல்லவா? அதன் தொடர்ச்சி - ஒரு பகுதி - தான் செரன்ஜெற்றி. ஆனால், செரன்ஜெற்றி கென்யாவிலில்லை: தன்ஸானிய எல்லைக் குள்ளிருக்கிறது.."

இப்போது மரங்களேயற்ற வெளியொன்றில் போய்க்கொண்டிருந்தோம். பாதையின் இரு புறமும் ஆளுயரத்திற்கும் மேலாக மண்டியிருந்த கோரைப்புல். இடைக்கிடை குத்துக் குத்தான பற்றைகள். செவ்வானம் மங்கி, ஒரு அற்புதமான நீல இருள் கவியலாயிற்று. அந்த மைம்மலிலும் முன் விளக்குகள் போடாமல் போய்க் கொண்டிருந்தது வான், ஆறுதலாக. எந்தப் பற்றைக்குள் எந்த மிருகம் இருக்குமோ? என்று நினைத்ததுதான் தாமதம் வான் நின்றது.

(தொடரும்)

## என் அன்னை...

கருவினிலே உருவான எனக்கு
உயிரினிலே உருவம் தந்து
உலகுக்குத் தந்தவள் அன்னையே
தாய்ப்பாலோடு தமிழ்ப்பாலையும் தந்து
தன்னம்பிக்கை ஊட்டியவள் அன்னையே...

உன்னதமான உறவினிலே பாசத்தைத்
தந்து பண்புடன் வளர்த்தவள் அன்னையே...
கல்விச் செல்வத்தால் ~ என்
அறிவுக் கண் திறந்து ~ என்னை
சான்றோனாய் மாற்றியவள் அன்னையே..

தன்னம்பிக்கை தந்து
தோல்விகளால் தளராத மனதில்
வெற்றிகளைத் தந்தவள் அன்னையே..
வாழ்வெனும் வசந்த விளக்கில்~ஒளிர்கின்றதீபத்தை
ஏற்றி வைத்தாள் அன்னையே...
அன்று கருவுக்குள் வளர்த்து
இன்று கண்ணுக்குள் வைத்து ~ எனைக்
காத்து வரும் அன்னையே
என்றென்றும் நான் வளர்ந்திட
எனக்கு நீ வேண்டும்.

ந.சுரவீனா

## பாடம்

கொழுத்தும் வெய்யிலில்
கொழுகொம்பைத் தேடும்
கொடியாய் - அந்தப்
பனை மரத்தின் கீழே
நிழலைத் தேடி நான்.

அடியிலிருந்து தலை வரை
அண்ணார்ந்து பார்த்தேன்
என் மயிர்க்கால்கள்
குத்திட்டன.

பகை விரித்த வஞ்சகத்தில்
வீர வடுக்கள் பல
அதன் உடலில்
ஆனால் இன்றும் அது
தலை நிமிர்ந்து நிற்கின்றது....!

நானோ....?
என்னை இழந்து
கையேந்தும் நிலையில்
அதன் கீழ்
அவமானம் என்னைத் தின்கின்றது
அடியெடுத்து வைக்கிறேன்
பனை தந்த பாடத்தால்
விடுதலைப் பாதை நோக்கி.

செ. நேசன்

## மனமே...மனமே...

ஏழ்மையாக என்றும் வாழ்ந்தாலும் - பிறரை
ஏளனம் செய்து வாழாதே - உன்
பையிலே பணம் இல்லாத போதும் - பிறர்
கையிலே உள்ளதை களவு செய்யாதே
தூக்கத்தை பிறருக்காய் இழக்காதே
ஏக்கத்தை நெஞ்சினில் விதைக்காதே
காலங்கள் கனிவாய் இல்லாவிடினும் - வாழ்வில்
கலக்கங்கள் நிறைந்தாலும்
கடமையில் இருந்து தவறாதே
கனவுகள் ஆயிரம் தான் கண்டாலும் - உன்
கரங்களை நம்பாமல் நடவாதே
எட்டாத கற்பனைகளை எண்ணி
எண்ணற்ற ஆசைகளை வளர்க்காதே......
எதிலும் வெல்லும் நம்பிக்கையை - உன்
உள்ளத்தில் ஏற்றாமல் இருக்காதே......

## முடியவில்லை

தமிழில் உள்ள
வார்த்தைகளை
தரம் பிரித்து
கவிதை முதல்
காவியம் வரை
கரங்கள் வடித்தாலும்
எத்தனை பரணிகள் தான்
எழுதப்பட்டாலும்
தரணியில் தமிழன் பட்ட
துயரங்களிற்கு
அர்த்தம் வரையமுடியாது.

க.முருகானந்தன்

### பசு

"பால்தருவேன் - அதைப்
பாலாகவே கொடு" என்று
பாழும் மானிடர்க்குச் சொல்ல
வாயில்லாப் பிராணி...

### உரிமை

வாக்களிக்க மட்டுமல்ல - உனக்கு
வாழ்வதற்கும் தான்...இருக்கென்று....
போதிக்கப்படாதிருக்கும் ரகசியம்.

### துப்பாக்கி

ஆள நினைப்போர்க்கு
ஆப்பு வைக்கும் - தலைநிமிர்ந்த
வாழ்வை நினைத்து கரம் கொண்டால்
காத்து நிற்கும்...கருவி இது.

புங்கையூர் காந்தன்

## ஊக்கமாத்திரை

விசேடகவனிப்பையும் உதவியையும் பெறவேண்டிய பருவம் பிள்ளைப் பருவமாகும். தங்கள் பிள்ளைகளுக்கு அன்பைப் பொழிந்து பாதுகாப்பதற்குப் பதிலாக சில வேளைகளில் கண்ணி ருந்தும் குருடாக பெற்றோரே கண்டு. கொள்ளாமல் விடு வதனாலேயே இவர்களின் ஒழுக்கம், பண்பு தறிகெட்டுப் போகின்றது.

இவ்வாறு ஒழுக்கயீன, பண்புயீனமாகும் சிறார்களைப் பார்த்து சீர்குலைந்து போகிற இந்தச் சமுதாயமே இதற்குக் காரணமென்று கூறுவது நொண்டிச் சாட்டாகும்.

பெற்றோர்களின் கவனயீனத்தாலும் சிறுவர்கள்



## முடிவு யார்கையில்

அடிக்கடி குற்றச்செயலிலும், களவு எடுப்பதிலும், கெட்ட பழக்கங்களிலும் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

இந்த பயங்கர நிலமைக்குக் கொண்டு போய் விடுவது? பணம் கூடக் கொழிக்கச்செய்வதன் காரணமாக இந்நிலமை சகித்துக்கொள்ளப்படினும், இந்தப் பரிதாபமான வாழ்க்கையிலிருந்து தப்ப எந்தவொரு நம்பிக்கையுமின்றி வாழ்க்கையில் விரக்தியடைந்து எதற்குமே இலக்கற்றவர்களாய் உருவாகும் சிறார்களைப் பற்றி ஒரு கணம் சிந்தித்துப் பாருங்கள்!

நெஞ்சை உறைய வைக்கும் இத்தகைய கொடிய நிஜங்களைத் தெரிந்தும் ஏன் அநேகர் சகித்துக் கொள்கிறார்கள்? ஏன் ஊக்குவிக்கின்றார்கள்? பிள்ளைகளின் ஆளுமை, ஆற்றல்களை முழுமையாக வளர்ச்சியடைவதற்கு மகிழ்ச்சியும், அரவணைப்பும், புரிந்துணர்வுமுடைய. ஒரு நிறைந்த குடும்பச் சூழல் தேவை என்பதை உணரத் தவறுவோமாயின் சிறார்களின் வாழ்க்கை எங்கள் கைகளை விட்டு நழுவிப்போவதை யாராலும் தடுக்கமுடியாது என்பதை ஒவ்வொரு மனிதனும் உணர்ந்து, இந்தச் செயலுக்கு மாறாக நல் எண்ணங்களை எங்களது மனங்களில் சிறைப்படுத்த உயர்ந்த உள்ளங் கொண்டவர்களாக நாம் வந்தோமானால் இன் நிலமைகளை மாற்றி அமைப்பதற்கான முடிவு ஒவ்வொருவரின் கையில் தான்!

ஆதிரை.போ.உ

## குறுக்கெழுத்துப்போட்டி - 68

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 01 | | | | | | 07 |
| 08 | 09 | | | 12 | | |
| 15 | | | | | 20 | 21 |
| 22 | | | | | | |
| | | 31 | | | | |
| 36 | | | | | | |
| | | 45 | | | | |

பெயர்:-..............................
முகவரி:-..............................
..............................
..............................

### இடமிருந்து வலம்

01. இராகங்களில் ஒன்று.
08. சண்டைக்கு எதிரானது.
15. வகை குழம்பி உள்ளது.
20. பயம் தலைகீழாக உள்ளது.
22. இரக்கம் குழம்பி உள்ளது.
31. நேரம் காட்டும் கருவி குழம்பி உள்ளது.
36. மலை உச்சி குழம்பியுள்ளது.
45. கற்புடையவள்.

### மேலிருந்து கீழ்

01. இருக்கை.
07. இடையூறு.
09. பழவகைகளில் ஒன்று.
12. அவமானம் குழம்பி உள்ளது.
36. சிறு குழந்தை.

### குறுக்கெழுத்துப்போட்டி இல.66 இன் விடைகள்

**இடமிருந்து வலம்**

01. அக்கினி.
06. மாசி.
08. தினகரன்.
15. சகோதரன்.
26. கரம்.
43. தடாகம்.
48. கோன்.

**மேலிருந்து கீழ்**

01. அதிசயம்.
07. சித்திரம்.
17. தந்தை.
25. சோதிடம்.
26. கலம்.
27. ஆம்.
30. கவலை.

**இளையவர்களே!**
மேலுள்ள கட்டத்தை வெட்டி சரியான சொற்களை இட்டு நிரப்பி தங்கள் பெயர் முகவரியை இணைத்து அனுப்புங்கள்.

குறுக்கெழுத்துப்போட்டி,இல.68
வெள்ளிநாதம்
ஈழநாதம்.
முதன்மைச்சாலை,
கிளிநொச்சி.

### குறுக்கெழுத்துப்போட்டி இல.66 இன் பரிசுக்குரியவர்


பா.ஸ்ரீகரன், ஆண்டு-8,
மு/வள்ளிபுனம் கனிஷ்ட உயர்தர வித்தியாலயம், வள்ளிபுனம்.

### குறுக்கெழுத்துப்போட்டி இல.66 இன், பாராட்டுக்குரியவர்கள்.

01. திருமேனி சுகிர்தா, புலோப்பளை மேற்கு பளை.
02. சி.திர்ஷாந்தினி. இல,126 கண்டிவீதி. கிளிநொச்சி.
03. மு.கோபிநாத், ஸ்ரீ.அம்பாள் ஸ்ரோர்ஸ், வவுனியா.
04. K.அன்ரனிதாஸ், சுழாவடி ஒழுங்கை, ஆனைக்கோட்டை.
05. S.நயனி, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
06. வே.குமாரசாமி, கரவெட்டி கிழக்கு, கரவெட்டி.



# புலம் பெயர்வும் அதன் விளைவுகளும்



கொடி-கமலதாஸ்

கூட்டுக்குடும்பம், கூடி வாழ்ந்தால் கோடி நன்மை, என்ற கோட்பாடுகளின் பின்னணியில் வாழ்ந்து கொண்டு வந்த தமிழ்ச்சமூகம் இன்றைக்கு எட்டுத்திக்குகளிலும் உள்ள பல்வேறு நாடுகளிலும் பரந்து வாழ்வது ஒரு புறம் மகிழ்ச்சியையும் மறுபுறம் வேதனையையும் கிளப்பி வருகிறன்றது. மனைவி இலங்கையில், மூத்தமகன் கனடாவில், இளைய மகன் இந்தியாவில், ஒரே ஒரு ஆசை மகள் லண்டனிலும், கணவன் அவுஸ்ரே லியாவில் என்று குடும்பங்கள் கல்லெறியப்பட்ட காகக் கூட்டங்கள் போல பிரிந்து வாழ்ந்து கொண்டிருப்பதால் அவர்களின் உறவுப் பிணைப்புக்களும் ஆசா பாசங்கள் சந்தோச சங்கீதங்களும் தூரத்துப்பச்சையாகவே தெரிகின்றது.

இந்தக் கூட்டுக்குடும்பத்தில் வாழ்ந்தவர்கள் எவ்வாறு எட்டுத்திக்குகளிலும் பரந்து வாழ்க்கின்றார்கள் என்பதனை நோக்கும் போது அதற்கு முதன்மைக்காரணியாக போர்க்காலச் சூழலும் போரியல் நடவடிக்கைகளும் அமை கின்றது. ஆனாலும் இக்காரணிகள் மட்டுமன்றி பொருளாதார வசதியின்மை, வேலையின்மை, உயர் கல்வி கற்றல், நாட்டின் அரசியல் குழப்பங்கள், இயற்கை அனர்த்தங்கள், போன்ற இன்னும் பல காரணிகள் குறைந்த பட்ச செல்வாக்கை செலுத்தி நிற்கின்றது.

இவ்வாறான காரணிகளின் தாக்கத்தால் இன்றைக்கு உலகம் எங்கும் ஏழு(7) கோடி தமிழர்கள் வாழ்ந்து கொண்டிருப்பதாக புள்ளி விபரங்கள் கருத்து தெரிவிக்கின்றன. இந்த 7 கோடி தமிழர்களும் இனத்தால் மட்டும் தான் ஒன்றானவர்கள் அவர்களின் மொழி, பண்பாடு, கலாச்சாரம், பழக்கவழக்கம் போன்றன இடத்துக்கு இடம் நாட்டுக்கு நாடு வித்தியாசப்படத் தொடங்கிவிட்டது.

அந்த வகையில் உலகம் எங்கும் பரந்து வாழும் 7 கோடி தமிழர்களில் கணிசமான அளவான 7 அல்லது 8 இலட்சம் இலங்கைத் தமிழர்களும் உள்ளடங்குகின்றார்கள்.

இந்த இலங்கைத் தமிழர்களிலும் பெரும்பான்மையானவர்கள் வடக்கு கிழக்கை தாயகப் பிரதேசமாகக் கொண்டவர்கள் என்பதும் அவர்களின் புலப்பெயர்வுக்கு முக்கிய காரணமாக போகும். அது சார்ந்த நடவடிக்கைகளுள் என்பதும் குறிப்பிடத்தக்க விடயம் ஆகும்.

இவ்வாறாக பரந்து பட்டு பல்வேறு நாடுகளில் வாழ்ந்து கொண்டிருக்கும் இலங்கைத் தமிழர்கள் எவ்வாறு அந்த வெளிநாடுகளுக்கு உள் நுழைகின்றார்கள் என்பதனைப் புரட்டிப்பார்த்தால் 1982 ம் ஆண்டிற்கு முன்னர் படித்தவர்கள், ஆங்கிலம் பேசத்தெரிந்தவர்கள், உயர்கல்விகள் கற்பவர்கள் போன்றவர்கள் சட்டரீதியாக உள் நுழைந்தார்கள். எனினும் சட்டரீதி யற்ற இடப் பெயர்வுகளும் இலைமறைகாய்போல இடம் பெற்றுள்ளது.

ஆனால் 1983 ஆம் ஆண்டு இடம் பெற்ற இனக் கலவரத்தின் பின்னர் தான் சட்டரீதியற்ற முறையில் வெளிநாடுகளில் உள் நுழைவது தளிர் விட்டு வளரத் தொடங்கியது இந்த சட்ட ரீதியற்ற உள்நுழைவுக்கு கப்பல்களில் வேலை செய்பவர்கள், போலிக்கடவுச் சீட்டுக்கள் மேலை நாட்டுப் பெண்ணை திருமணம் செய்தல், போன்ற காரணிகளின் பின்னணியிலேயே இந்த உள் நுழைவுகள் அதிகமாக இடம் பெற்றுள்ளது.

இந்தச்சட்டரீதியற்ற முறையில் உள்நுழைய முனைந்தவர்களில் வெற்றி பெற்றவர்களிலும் பார்க்க வெற்றி பெறாதவர்களே அதிகமாகக் காணப்படுகின்றார்கள். அவ்வாறு வெற்றி பெறாதவர்களின் நிலைகள் கவலைக் குரியது. தமது உடலையும் உயிரையும் குடும்பத்தையும் பாதுகாக்கும் நோக்கத்தோடு சொத்துக்கள் பண்டங்களை விற்றோ அல்லது அடைமானம் வைத்தோ அல்லது பணத்தை கடன்பட்டோ தமது இலக்கை அடைவதற்கு சென்றவர்கள் கனடா புறப்படமுனைந்து கானாவில் நின்றதும், சுவிற்சர்லாந்து செல்ல முனைந்து பிச்சைக்காரனானதும், உடமைகளைப்பறிகொடுத்து வெறுங்கையோடு வந்ததும், நிர்மாணக்கோலத்தோடு சொந்த நாட்டுக்கு வந்ததும் சிறைச்சாலைகளில் அடைக்கப் பட்டதும், நடுக்கடல்கள், பட்டினியால் இருந்தவர்கள் இன்னும் காணாமல்ப் போனவர்கள் என்று அவர்களின் சோகக்கதைகளை பட்டியல் படுத்திக்கொண்டே செல்லலாம். ஆனாலும் சட்டரீதியற்ற முறையில் தமது நாட்டிற்குள் வருபவர்களை தடைசெய்யும் பொருட்டு தீவிர சோதனைகளையும் எல்லைக்காவலர்கள், மற்றும் அந்த நாட்டுப்படையினர்களை அனைத்து மூலை முடுக்கிலும் நிறுத்தியிருக்கின்ற போதிலும் அவர்களின் கண்களுக்கு பூச்சாண்டி காட்டிவிட்டு அந்த நாட்டின் சுதந்திரதினம், புது வருட தினம், நத்தார் பண்டிகைக்காலம், போன்றவற்றில் உள்நுழைபவர்களே. அதிகளவு வெற்றி பெறுவதாக பயணத்தரகர்கள் கருத்துத் தெரிவிக்கின்றார்கள்.

இவ்வாறு பல்வேறு சிரமங்களின் மத்தியில் உள்நுழைபவர்கள் அந்த நாட்டில் எவ்வாறு தொடர்ந்து நிற்பார்கள் என்ற வினாவைத் தொடுத்துப்பார்த்தால் அதிலிருந்து அவர்கள் தப்பிக் கொள்ளும் பட்சத்திலும் வேலை பெறும் பட்சத்திலும் தான் அவர்கள் ஓரளவு திருப்தி அடைவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

அந்த வகையில் இங்கிருந்து செல்பவர்களில் பெரும்பான்மையானவர்கள் அகதிகள் என்ற பெயருடன் அனுமதி கோரும் பட்சத்தில் அவர்களது விசாரணைகள் அதிகளவு வெற்றி பெற்று குறிப்பிட்ட சில காலத்திற்கும் சில கட்டளைகளுடனும் தங்கி நிற்பதற்கும் தொழில் புரிவதற்கும் உரிமைகள் கொடுக்கப்படுகின்றன.

கனடா, ஜேர்மனி முதலான நாடுகளை எடுத்துப்பார்த்தால் அங்கே அகதி அந்தஸ்துக்கான விசாரணைகளில் 90% ஆனவை வெற்றி பெற்றுள்ளதாக கருத்துத் தெரிவிக் கப்படுகின்றது. ஆனால் மற்றைய நாடுகளில் அகதி அந்தஸ்து கோரியவர்களிலும் பெரும்பான்மையான விசாரணைகள் தோல்விகளையே கண்டு ஏமாற்றங்களை அடைந்துள்ளார்கள்.

அடுத்து இங்கிருந்து புலம் பெயர்ந்து சென்றவர்கள் வேலைகளைச் தேடிக்கொள்வது கட்டாயமானதொன்றாகும். வேலைகளைத் தேடி வேலைசெய்யும் பட்சத்தில் தான் கடன்களையோ அல்லது மற்றும் தேவைகளையோ சீர் செய்துகொள்ளமுடியும் இப்படியாகவேலை தேடிச் செல்லும் பட்சத்தில் வேலைதரகர்களுக்கு அதிகளவு பணத்தை செலவளிக்க வேண்டிய தேவை ஏற்படுவது ஒரு புறம் இருக்க மறுபுறம் தேடிய வேலைக்கு போதிய சம்பளம் இல்லாத நிலையும், சம்பளம் சீராக கொடுக் கப்படாத சந்தர்ப்பம், வேலையில் இருந்து நீக்குதல், விடுமுறைகள் இல்லை என்ற சவால்களையும் எதிர்நோக்கி சமாளிப்பது போற்றுதற்குறிய விடயம் ஆகும்.

மேலும் இந்த வெளிநாடுகளில் நம்மவர்கள் கூட்டம் கூட்டமாக வாழ்ந்து கொண்டிருப்பதால் யாழ்ப்பாணப் பிரதேசத்தில் உள்ள கிராமம் ஒன்றையோ அல்லது வடக்கு கிழக்கிலுள்ள பிரதேசம் ஒன்றினையோ பெயர்த்தெடுத்து உருவாக்கி இருப்பது போன்ற தன்மைகளையும் அங்கு கண்டுகொள்ளமுடிகின்றது வானைத்தொடும் கோயில்கள், வாசிகசாலைகள், தமிழ் வாரஇதழ்கள் தமிழ் பண்பாட்டுக்கலைகள் போன்ற பலபாரம்பரிய தமிழரின் கலை உணர்வுகள் கொண்ட கிராமங்கள் உருவாக்கியிருப்பது மகிழ்ச்சியையும் மன ஆறுதலையும் அவர்களுக்கு உருவாக்கியிருக் கிறது.

இவ்வாறாக வடக்கு கிழக்கு பிரதேசத்து கிராமம் ஒன்றை பெயர்த்தெடுத்தது போல கிராமங்களை அமைத்து வாழ்க்கை நடத்திவரும் எம் இனத்தவர்கள் எங்கள் மீதிலும் எமதுதாய்நாட்டு மீதிலும் அக்கரை காட்டுவது வரவேற்கதக்கதொன்றாகும். தமது ஒற்றுமையையும் உணர்வையும் ஒன்று சேர்த்து தமிழரின் அபிலாசைகள் வெல்லப்படுவதற்காக யாழ்ப்பாணத்தில் பறையறைப்பட்ட பொங்கு தமிழ் போல அங்கு எமது உரிமைகளையும் அபிலாசைகளையும் வெல்லும் பொருட்டு ஆர்ப்பாட்டங்களும், பிரகடனங்களும் நிகழ்த்துவது தமிழ்மக்களின் ஒற்றுமை உணர்வை சர்வதேசத்திற்கு எடுத்துக் காட்டும் நிகழ்வாகும் அந்த வகையில் தமிழர்கள் வாழும் ஒரு சில நாடுகளில் பொங்குதமிழ் இடம் பெற்றிருக்கின்ற போதிலும் இன்னும் பல நாடுகளில் வசித்து வரும் தமிழ் மக்கள் தமது உணர்வுகளையும் அபிலாசை களையும் வெளிப்படுத்த திட்டங்கள் தீட்டி வருவதாக அங்கிருந்து வரும் தகவல்கள் கருத்து தெரிவிப்பது வரவேற்கத்தக்க தொன்றாகும்.

இவ்வாறாக வெளிநாட்டில் கூட்டம் கூட்டமாக வாழ்ந்துவரும் தமிழ்மக்கள் தங்களுக்கிடையில் சங்கங்கள், மற்றும் தொண்டர் அமைப்புக்கள், கலைக்கூடங்கள், விளையாட்டுக்கழகங்கள் அமைத்து தமது உளநல விருத்தியை மேம்படுத்துவது ஒரு பக்கம் இருக்க மறுபுறம் வடக்கு கிழக்கில் பாதிக்கப்பட்ட சிறுவர் இல்லங்கள், முதியோர் நிலையங்கள் மகளிர் விடுதிகள், விதவைகள், அங்கவீனர்கள், நோயாளர் முதலான பலதரப்பட்ட வர்க்கத்தினர்க்கு பணமாகவும் மற்றும் பல்வேறு உதவிகளையும் வழங்கி வருவது குறிப்பிடத்தக்க விடயம் ஆகும்.

இன்னும் அந்த நாட்டில் எம்மவர்களால் தாபிக்கப்பட்ட சங்கத்தலைவர்களும், பிரதிநிதிகளும் நம் தாய் நாட்டு மக்களுடன் கலந்தாலோசித்து திட்டம் தீட்டி வருவதும் அவர்களின் வளர்ச்சிக்கு கைகொடுப்பதற்கு எத்தனிப்பதும் தம் தாய் நாட்டு மக்கள் மீது உள்ள ஆசைகளையும் உறவுப்பிணைப்புக்களையும் வெளிக் காட்டி நிற்கின்றது.

மொத்தத்தில் புலம் பெயர்வுகள் பெரும் பிரிவுத்துயர்களை ஏற்படுத்தியிருக்கின்ற போதிலும் அவர்கள் தாய்நாட்டிலும், தமது இனத்தின் மீதிலும் மிகுந்தஅக்கறையும் ஆர்வமும் காட்டுவது வரவேற்கத்தக்கதொன்று எனினும் அவர்கள் பட்டசோகங்களையும் துன்பங்களையும் மறந்து நமக்காகவும், நமது நாட்டுக்காகவும் வாழ்ந்து வரும் அர்ப்பணிப்புக்கொண்ட மனித நேயத்தன்மையாகும்.

"பெற்றெடுத்த தாயையும்
பெரும் பேறு கொண்ட தாய் நாட்டையும்-தம்
சிந்தை மீது கொண்டவர்
நல்லுலகம் போற்ற வாழுவார்"



# பிரபஞ்சத்தின் மரணப்பொறி

## பிளைக்கோல்

**எஸ்.ஜெயா**

நீங்கள் விமானம் ஒன்றில் பயணம் செய்து கொண்டிருக்கிறீர்கள் திடீரென விமானம் குலுங்குகிறது. இனந் தெரியாத மிகப்பாரிய விசையொன்றினால் விமானம் இழுத்துச் செல்லப்படுகின்றது. கண்களுக்கு ஒன்றுமே தெரியாத நிலையில் விமானம் அதிவேகமாக, வெகு தூரத்திற்கு இழுத்துச் செல்லப்படுகிறது என்பதை மட்டுமே உங்களால் உணர முடிகிறது.

நீங்கள் எல்லாக் கடவுள்களையும் பிரார்த்தித்துக் கொள்கிறீர்கள். மனைவி, பிள்ளைகளை நினைத்து கவலை கொள்கிறீர்கள். இவ்வாறாக விமானத்தை ஒரு மணித்தியாலயமாக அங்கும், இங்கும் அலைக்கழித்துவிட்டு அந்த இனம் புரியாத விசை அசகன்று விடுகின்றது.

விமானத்தில் இருக்கின்ற அனைவரும் "அப்பாடா" என்று பெருமூச்சு விட்டுக் கொள்கிறார்கள் பயணம் தொடர்கிறது விமான நிலையத்தில் விமானம் இறங்குகிறது இனிமேல் தான் அதிசயமே ஆரம்பிக்கின்றது.

விமான நிலையத்தில் உங்களை வரவேற்கயாருமே இல்லை விமான நிலையம் மனிதர்களின் நடை, உடை பாவனை எல்லாமே மாறிவிட்டிருக்கின்றன. விமானத்தில் வந்த அனைவருக்குமே இதே அனுபவம் தான்.

கார் ஒன்றை வாடகைக்குப் பிடித்து வீடு வந்து சேர்கின்றீர்கள். முழு நகரமே முற்றாக மாறி விட்டிருக்கிறது. வீட்டிற்குள் ஒரு அந்நியனைப் போல நுழைகிறீர்கள் வாசலில் உங்களின் படம் வைத்து அதற்கு மாலையிடப்பட்டிருக்கின்றது.

மனைவியைக் கூப்பிடுகிறீர்கள், இளம் மனைவியாய் இருந்தவள் நரைத்த தலையுடன் வருகின்றாள். உங்களைக் கண்டவுடன் அதிர்ந்து நிற்கின்றாள் கைக்குழந்தையாய் இருந்தமகளின் கைகளில் இப்போது. ஒரு குழந்தை என்ன நடந்தது?

எவ்வாறு இது சாத்தியம்? வெறும் ஒரு கிழமைமட்டுமே வேறிடத்திற்கு போய்விட்டு வந்து உங்களுக்கு ஒன்றுமே புரியவில்லை. கண்ணாடியில் உங்களைப் பார்க்கிறீர்கள். அதே மிடுக்கான தோற்றம், பழைய மாதிரியே இருக்கிறீர்கள். உங்களுக்கு ஒருகிழமை, அவர்களுக்கு சுமார் 25 வருடங்களாகி இருக்கின்றது.

இவ்வளவும் எமது விஞ்ஞான உலகிலே கருத்தியல் ரீதியாக சாத்தியமான தொன்று நிஜத்திலே இவ்வாறு நடக்காது எனினும், இது நடக்கக்கூடியது தான் என கொள்கை ரீதியாக நிரூபிக்கப்பட்டிருக்கின்றது.

கருமைத் துவாரங்கள் (Black Holes)

எமது பிரபஞ்சத்திலே Black Holes (கருமைத் துவாரங்கள்) என அழைக்கப்படுகின்ற பொருட்கள் இருக்கின்றன. இவற்றினருகே செல்பவர்களுக்கு நேரம் மெதுவாகவே நகரும் ஆனால் இங்கே பூமியில் இருப்பவர்களுக்கோ நேரம் வழமை மாதிரியே ஓடும் .

இவ்வாறான Black Hole ஒன்றிற்கு அருகிலேயே உங்கள் விமானம் சற்று நேரம் தரித்து நின்றுவிட்டு திரும்பி வந்திருக்கிறது. உங்களுக்கு ஒரு மணித்தியாலயமாக இருந்த நேரஇடைவெளி பூமியிலே நிறைய வருடங்களுக்கு சமமானதாக இருந்திருக்கின்றது.

இனி "பிளைக்கோல்ஸ்" எவ்வாறு உருவாகின்றன அவற்றின் அருகே செல்லும் போது நடக்கின்ற விளைவுகள் என்ன? போன்ற பல சுவாரசியமான விடையங்களைப் பற்றிப் பார்ப்போம்.

இந்தப் பிரபஞ்சத்திலே ஏராளமான நட்சத்திரங்கள் இருக்கின்றன எமது சூரியனும் கூட ஒரு நட்சத்திரம் தான் இவை எவ்வாறு தோன்றுகின்றன என்ற கேள்வி எங்களுக்கு எழலாம் வான வெளியிலே அசைகின்ற தூசுத்துணிக்கைகளும் ஐதரசன் வாயுவும் தமது நிறை காரணமாக ஈர்க்கப்பட்டு ஒன்று சேர்ந்து ஒடுங்குகின்றன.

இவ்வாறு ஒடுங்குகின்ற போது ஐதரசன் வாயுவானது மையப்பகுதிக்குள் தள்ளப்படுகின்றது. இவ்வாறு பாரியளவில் துணிக்கைகளும், வாயுக்களும் இணைந்து ஒடுங்குவதால் அணுக்கள் ஒன்றுடன் ஒன்று மோதி வெப்பத்தை வெளியிடுகின்றன.

பத்து மில்லியன் பாகைக்கு வெப்பநிலை உயர்கின்ற போது, அழிக்கப்படுகின்ற திணிவானது மாபெரும் அணுசக்தியாகவும், ஒளியாகவும் வெளிவருகின்றது. இப்படியாக நட்சத்திரம் தன்னைத்தானே ஒளியேற்றிக் கொண்டு உருவாகின்றது.

அணுசக்தி மூலம் வெளிவருகின்ற சக்தியும், ஈர்ப்பு சக்தியும் ஒன்றை ஒன்று சமன் செய்வதன் காரணமாக நட்சத்திரமானது சம நிலையில் இருக்கின்றது இவ்வாறு உருவாகின்ற நட்சத்திரங்கள் பிரபஞ்சத்திலே பல பில்லியன் வருட காலங்கள் வாழ்கின்றன.

இறுதியில் அவற்றிற்கும் அழிவுகாலம் வருகின்றது தனது அணுசக்தி முழுவதும் முடிவடைந்தும், ஈர்ப்புச் சக்திக்கு ஈடு கொடுக்க முடியாது நட்சத்திரமானது சுருங்கத் தொடங்குகிறது. இவ்வாறு சுருங்குகின்ற போது, மூன்று விதமான விளைவுகள் ஏற்பட சாத்தியமுண்டு. மூவகை விளைவுகள்.

1. சுருங்குதலினால் ஒரு "வெள்ளைக் குள்ளன்" (white Dwarf) ஆக மாறலாம். இதன் பரிமாணம் ஏறக்குறைய எமது பூமியின் அளவானதாக இருக்கும்.
2. இன்னும் அதிகமாக சுருங்கி ஒரு "நியூத்திரன் நட்சத்திரம்" (Neutron Star) ஆக மாறலாம். இதன் விட்டம் ஏறத்தாழ இருபது மைல்களாக இருக்கும்.
3. இன்னும் அதிகமாக சுருங்கி மாபெரும் அடர்த்தியுடன் கூடிய ஒரு புள்ளிப் பொருளாகலாம். இதுவே "கருமைத்துவாரங்கள்" Black Hole எனப்படுகின்றது.

இவ்வாறு ஒரு புள்ளியிலே நட்சத்திரத்தின் முழுத்திணிவும் அடக்கப்படுவதனால் இதனைச் சுற்றி பிரமாண்டமான ஈர்ப்பு சக்தி காணப்படுகிறது. இந்த "பிளைக் கோல்ஸ்"(Black Holes) இரண்டு பகுதிகளைக் கொண்டது.

1. கருமைத்துவாரத்தின் அசாதாரணமூலம் (Singularity)
2. நிகழ்ச்சிகளின் தொடுவானம் (Event Horizon)

இந்த Black Hole ஐ நீர்ச்சுழி ஒன்றிற்கு ஒப்பிடலாம் சுழியின் மையமானது எங்கோ ஓரிடத்தில் ஒரு சிறிய புள்ளியில் அமைந்திருக்கும். இதைச்சுற்றி நீரானது வெகு வேகமாக சுழன்றடித்து ஒரு குறிப்பிட்ட அளவு தூரத்திற்குள் வரும் பொருட்களை இழுத்து மையத்தை நோக்கி விரைவாக அனுப்பும்.

இந்த சுழியின் மையத்தைத் கருமைத்துவாரத்தின் அசாதாரண மூலத்திற்கு (Biack Hole of Singularity) ஒப்பிடலாம். தனது பிரதேசத்துக்குள் வருகின்ற எதனையும் சுருட்டுகின்ற நீர்ப்பிரதேசத்தை "நிகழ்ச்சிகளின் தொடுவானத்திற்கு (Event Horizon) ஒப்பிடலாம்.

கருமைத்துவாரத்தின் அசாதாரண மூலத்திலேயே (Singularity)முழுத்திணிவும் அடக்கப்பட்டிருக்கும் காரணத்தினால் உருவாகின்ற மிகப்பாரிய ஈர்ப்பு விசையானது. ஒரு குறிப்பிட்ட பிரதேசத்திற்குள் வருகின்ற எந்தப் பொருளையும் அசுர வேகத்தில் சுருட்டி மையத்தை நோக்கி அனுப்பும்.

இந்தப் பிரதேசமே நிகழ்ச்சிகளின் தொடுவானம் (Event Horizon) ஆகும் இதைத் தாண்டி எந்தப் பொருளுமே வெளிவரமுடியாது. பிளைக் கோல் Black Hole வெளிவிடுகின்ற ஒளிகூட இதனைத் தாண்டி வரமுடியாது.

இதனால் தான் இது கருமையாகக் காட்சி அளிக்கின்றது. இந்த Event Horizon இற்கு வெளியே ஈர்ப்பு சக்திக்கு அப்பால் இருக்கும் வரை எந்தப்பொருளுக்கும் ஆபத்தில்லை. ஈர்ப்புசக்தியின் மெதுவான தாக்கத்திற்கு உட்பட்டால் கூட வெளியேற வாய்ப்புக்கள் குறைவு. ஆனால் மெதுமெதுவாக நிகழ்ச்சிகளின் தொடுவானத்திற்கு (Event Horizon) எல்லையை அடைந்துவிட்டால் அவ்வளவுதான் அதன்பின்பு மீழவே முடியாது.

பொது சாப்பு கொள்கை (General Theory oF Relativity)

1915 ல் அல்போட் ஜன்ஸ்ரைன் (Albert Einstein) எனும் பிரபல விஞ்ஞானியின் கண்டுபிடிப்பான பொதுசார்பு கொள்கையானது, விஞ்ஞான உலகில் பல மாற்றங்களை உருவாக்கியது.

நேரமானது ஒரு நிலையானது என்ற முந்தைய கருத்தைக் இக் கொள்கை பொய்யாக்கியது. நேரமானது இருக்கும் இடத்தைப் பொறுத்து மாறுகின்ற ஒரு கணியமே ஆகும். உதாரணமாக பிரபஞ்சத்திலே ஒரு செக்கனும் பூமியிலே ஒரு செக்கனும் உண்மையிலேயே சமனல்ல.

அத்துடன் ஒளியானது எப்போதுமே நேர்கோட்டிலேயே பயணம் செய்யும் என்பது உண்மையல்ல ஈர்ப்பு விசைகளினால் ஒளியானது இழுக்கப்படுவதனால் ஒளி வளைந்து செல்லக் கூடியது.

இந்த உண்மைகள் எல்லாம் பிரபஞ்சத்திலே பரிசோதனைகளை மேற்கொள்கின்ற போது நிரூபிக்கப்படக் கூடியவை ஆயினும் பூமியிலே இந்த வித்தியாசங்களை உணரமுடியாது. ஆகையால் ஒளியானது நேர் கோட்டில் செல்கின்றது எனவும் நேரமானது நிலையானது என்றும் எடுத்துக் கொள்ளப்படுகின்றது. இதன் மூலம் நேரமானது ஒரு நிலையான கணியமல்ல என்பது இப்போது தெளிவாகின்றது.

இப்போது ஒரு உதாரணத்தினை எடுத்துக் கொள்வோமாயின், நீங்கள் ஒரு விண்வெளிக் கலத்தின் உதவியுடன் பிரபஞ்சத்தில் ஒரு பிளைக்கோலை நோக்கிப் பயணம் செய்கிறீர்கள் என வைத்துக் கொண்டால்,

உங்கள் விண் வெளிக் கலத்தை உங்கள் நண்பர் பூமியில் இருந்து அவதானிக்கின்ற போது பிளைக் கோலின் நிகழ்ச்சிகளின் தொடுவானத்தினை அண்மிக்க அண்மிக்க உங்களுக்கு நேரம் மெதுவாக நகரத் தொடங்கும்.

நேரமானது பிளைக் கோலின் பிரமாண்டமான ஈர்ப்பு விசையால் பாதிக்கப்படுவதால் தான் இது நிகழ்கின்றது பூமியில் இருக்கும் உங்கள் நண்பருக்கோ நேரம் சாதாரணமாகத் தான் ஓடும் நீங்கள் நிகழ்ச்சிகளின் தொடுவானத்திற்கு வெளியே ஒரு சிறிது நேரம் உங்கள் விண்வெளிக்கலத்தில் உலாவிவிட்டு பூமிக்குத் திரும்பி வந்தீர்களாயின் உங்களை விட நண்பரின் வயது அதிகமாக இருக்கும்.

இப்போது நீங்கள் பூமிக்குத் திரும்பி வரலாம் பிளைக்கோலில் என்ன இருக்கிறது என அறிய முயற்சித்தீர்கள் என வைத்துக் கொள்வோம் இனி உங்களுக்கு என்ன நடக்கும் என்புதையும் பார்ப்போம்.

முதலாவதாக உங்களுக்கு எங்களது ஆழ்ந்த அனுதாபங்கள் மீளவே முடியாத மரணப்பொறியை நோக்கி பயணம் செய்யப் போகீறீர்கள்.

மரணப் பொறி நோக்கிய பயணம்

செக்கனுக்கு 186,000 மைல்கள் செல்லும் ஒளியைக் கூட மிக இலகுவாக இழுத்துக் கொள்ளும் வல்லமை பெற்ற பிளைக்கோலின் ஈர்ப்பு சக்தியானது உங்களை மிக மிக வேகமாக அசுர பலத்துடன் தன்னை நோக்கி இழுக்கும்

உலகிலேயே எந்த பொருளும் உச்ச பட்சமாக ஒளியின் வேகத்தில் தான் செல்லலாம் ஆகவே உங்களது விண் வெளிக்கலத்தை உச்ச பட்ச வேகமான ஒளியின் வேகத்தில் எதிர் திசையில் செலுத்தினால் கூட உங்களால் பிளைக் கோலை விட்டு வெளியேற முடியாது.

அதிவேகமாக Black Hole இன் மூலமான Singularity எனப்படும் அடர்த்தியும், திணிவும் கூடிய புள்ளிப் பொருளை நோக்கி பயணம் செய்கிறீர்கள். அதில் மோதினால் என்ன நடக்கும் என்பது உங்களுக்கு இப்போது தெரிந்திருக்கும் .

ஆனாலும் உண்மையில் உங்களின் இறப்பு அதற்கு முதலே நிகழ்ந்து விடும் நிகழ்ச்சிகளின் தொடுவானம் (Event Horizon) இதற்குள்ளால் பயணம் செய்கின்ற போது அலைவிசை (Tidal Force) எனும் விசையினால் நீங்கள் பாதிக்கப் படுவீர்கள்.

உங்கள் தலையை விட கால்கள் மையத்தை நோக்கி இருப்பதன் காரணமாக கால்கள் பாரிய அலை விசையினாலும், தலையானது அதை விட சற்று குறைந்த விசையாலும் இழுக்கப்படும்.

இதன் காரணமாக உங்கள் உடம்பு நாராக இழுக்கப்பட்டு சற்று நேரத்தின் பின் பல துண்டுகளாக கிழித்து எறியப்படும். Singularity இல் மோத முன்பே உங்கள் இறப்பு நிகழ்ந்து விடும்.

இப்போது பிளைக் கோலின் பயங்கரம் உங்களுக்குப் புரிந்திருக்கும் தனது பிரதேசத்திற்குள் அகப்படுகின்ற எந்த பொருட்களையும், அது நட்சத்திரமாயினும் சரி கோள்களாயினும் சரி விழுங்கி ஏப்பம் விட்டபடி பிரபஞ்சத்திலே அமைதியாகச் சஞ்சரிக்கும் ஒரு "மரணப்பொறி" தான் இந்தப் Black Hole ஆகும்.

பாரிய Black Hole கள் விண் வெளித் தொகுதிகளையே விழுங்கி ஏப்பம் விடக் கூடியவை ஆனாலும் இவை இரை தேடி எங்கும் அலைவதில்லை தங்கள் பிரதேசத்துக்குள் வருகின்ற பொருட்களையே இரையாக்கிக் கொள்கின்றன.

இவற்றின் Event Horzon இற்கு வெளியே, ஈர்ப்பு விசைக்கு அப்பால் இருக்கும் எந்தப் பொருட்களுக்கும் எது வித ஆபத்தும் இவற்றால் ஏற்படாது. அவற்றிலிருந்து பார்க்கும் போது இந்த Black Hole கள் ஒரு அமைதியான, திணிவு கூடிய கருமைப் பிரதேசங்களாகவே காட்சி அளிக்கும்.

எங்களது சூரியனும் ஒரு நட்சத்திரம் தானே? அது கூட எதிர் காலத்தில் ஒடுங்கி Black Hole ஆக மாறுமா? அப்படி மாறுவதற்கு சாத்தியமில்லை என்று தான் கூற வேண்டும். தனது ஆயுட்காலத்தில் அரைவாசியையே முடித்திருக்கும்.

எமது சூரியனானது தனது முடிவின் போது ஒரு White Dwraf ஆகவே மாறும் கோள்கள் பழைய படியே இதனைச் சுற்றி வலம் வரும். ஆயினும் சூரியன் ஒளியையும் சக்தியையும் வெளியேற்றாத காரணத்தினால் சூரியத் தொகுதியானது கடும் இருட்டானதாகவும், மிகவும் குளிரானதாகவும் மாறும்.

உயிரினங்கள் பூமியில் அழிந்து போயிருக்கும். இதற்கு இன்னும் 5பில்லியன் (5,000, 000,000) வருடங்கள் இருக்கின்றன. என விஞ்ஞானிகள் கருதுகின்றார் ஆகவே நீங்கள் இப்போதே கவலைப் படத் தேவையில்லை.

மனித கண்ணியத்திற்கும் மனித இன்பத்திற்கும் தலையாய இன்றியமையாத் தேவை,தனி மனித சுதந்திரம். - புல்வர் லிட்டன்

# பொருண்மிய வாசல்

## எங்கள் பொருண்மிய வளம்

### சிதம்பரதிரு

எங்கள் பொருண்மிய வளங்களில் கண்ணாடி மணல் முக்கிய மானதாக குறிப்பிடப்படுகிறது. யாழ்ப்பாணக் குடா நாட்டின் கிழக்கு கரையோரம் வடமராட்சி வல்லிபுரம் பகுதியில் குவிந்திருக்கும் மணல் கண்ணாடி தயாரிப்பதற்கான மூலக் கூறுகளைக் கொண்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

1920ஆம் ஆண்டில் இங்கிலாந்து கம்பீரியல் நிறுவனம் மேற் கொண்ட ஆய்வுகள் மூலம் இந்த உண்மை கண்டறியப் பட்டதாக அறியப்படுகிறது.

பருத்தித்துறை அடம்பன் வீதிக்கு வடகிழக்கே 3/4 மைல் தூரத்தில் தொடராக மணல் குன்றுகள் உள்ளன. வடக்கே வல்லி புரத்திலிருந்து அடம்பன் பிரதேசத்தை உள்ளடக்கி தெற்கே நாகர் கோவில் வரை மணற்குன்றுகளின் தொடர் நீண்டுள்ளன. குடத்தனைக்கு கிழக்கேயும் இத்தகைய மணல் குன்றுகள் உள்ளன.

இந்த மணற்குன்று களுக்கு இடைப் பட்ட நிலங் களும் பழைய மணலால் மூடிக் கிடக்கின்றன. லங்காவிரிகுடாவில் கரையோரப் பிரதேசங்களாக இவை இருப்பதால் எக்காலத்திலும் தட்டுப் பாடு இல்லாமல் மணல் இப் பிரதேசங்களில் சேர்ந்த வண்ணமாக இருக்கும் எனத் தெரிவிக்கப் படுகிறது.



ஏக்கருக்கு ஒரு அடி ஆழ மணல் 3200 தொன்களைக் கொண்டிருக்கும் எனக் கணக்கிடப் பட்டுள்ளது. ஆண்டுக்கு 4000 தொன் வீதம் ·100 வருடங்களுக்குத் தேவையான கண்ணாடி உற்பத்திக்குத் தேவையான மூலவளம் இங்கு உள்ளதாகவும் கணிப்பிடப்பட்டிருந்தது.

எனினும் ஆங்கிலேயர் காலத்தில் செய்யப்பட்ட இந்த ஆய்வு அப்படியே போடப்பட்டதுடன் மாத்திரம் அல்லாது பிறகுவந்த இலங்கை அரசினாலும் அக்கறை காட்டப்படவில்லை.

84 வருடங்களுக்கு மேலாகி விட்ட சூழ்நிலையில் தற்போது இந்த ஆய்வுகளை மீள் ஆய்வுக்குட்படுத்தி பொருத்தமான நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியமாகும்.

1978இல் கண்ணாடிப் பொருட்களை உற்பத்தி செய்யும் பாரிய தொழிற்சாலை ஒன்று அச்சுவேலி தொழிற் பேட்டையில் அமைக்கப்பட்டது.

எனினும் அந்த முயற்சி வெற்றிகரமாக அமையவில்லை. இவற்றை எல்லாம் கருத்திற் கொண்டு நாம் செயற்படமுனைய வேண்டும்.

## இரணைமடுக் குளத்தின் நீர்ப்பாசனமும் பயன்பாடும்

வடமாகாணத்திலே உள்ள ஆறுகளில் பெரிய ஆறு கனகராயன் ஆறு இந்த ஆறு சேமமடுக்குளத்தில் இருந்து உற்பத்தியாகி சேமமடுக் குளம், கனகராயன்குளம், மருதன் குளம். உட்பட அநேகமான சிறிய, பெரிய குளங்களில் இருந்து நீரிணைப் பெற்று வடக்கு நோக்கி இரணைமடுக் குளத்தை நிரப்பிப் பின் ஆனையி றவுக் கடலைச் சென்றடைகிறது.

இரணைமடுக்குள நீர்ப்பா சனத் திட்டத்தின் கீழ் இடது கரை கால்வாயை அடிப்படையாகக் கொண்டு 1950 இல் உருத்திரபுரம் 10ஆம் வாய்க் கால் குடியேற்றத் திட்டம் உருவாக் கப்பட்டது. இதை அடுத்து காடாகக் கிடந்த ஆயிரக்கணக்கான ஏக்கர் களை விருத்தி செய்வதற்கு இரணை மடுக் குளத்தின் அளவை கூட்ட வேண்டிய நிலை ஏற்பட்டது.

• இதனால் 1951 இல் இரணைமடுக் குளத்தின் அணைக் கட்டை உயர்த்தி நீர் கொள்ளளவும் 71,000 ஏக்கர் அடியாக்கப்பட்டது. அத்துடன் 1952 இல் உருத்திரபுரம் 8ஆம் வாய்க்கால் குடியேற்றமும் பின்னர் 1954ஆம் ஆண்டு முரசு மோட்டை குடியேற்றத் திட்டமும் உருவாக் கப்பட்டது.

இரணைமடுக் குளத்தின் வலது கரை வாய்க்கால் 1952ஆம் ஆண்டில் அமைத்து முடிக்கப்பட்டதன் பின் 1953 ஆம் ஆண்டு வட்டக்கச்சி குடியேற்றத் திட்டமும் அமைக்கப் பட்டது. 1954 ஆம் ஆண்டில் மீண்டும் இக்குளத்தின் கொள்ளளவைக் கூட்டு வதற்கு அணைக்கட்டு உயர்த்தப் பட்டது. இதன் பின் நீரின் அளவு 82000 ஏக்கர் அடியாக அதிகரிக்கப் பட்டது.

இதன் பின் 6வது குடியேற் றத் திட்டமாக 1955 ஆம் ஆண்டில் இராமநாதபுரம் குடியேற்றத் திட்டம் உருவாக்கப்பட்டது. இவ்வாறாக இரணைமடுக் குளத்திட்டத்தின் கீழ் குடியேற்றத் திட்டங்கள் அமைத்து கொடுக்கப் பட்டதால் இங்கே மக்கள் குடியேறினர்.

1955 ஆம் ஆண்டில் கண்டாவளையில் 1740 ஏக்கர் தாழ் நிலங்கள் அதாவது விவசாயம் செய்யக் கூடிய காணிகளை தெரிவு செய்து 10 ஏக்கர் வீதமும், புளியம் பொக்கணையில் 2000 ஏக்கர் விவ சாயம் செய்யக்கூடிய நிலத்தை 10 ஏக்கர்வீதம் 200 விவசாயிகளுக்கு பகிர்ந்து வழங்கப்பட்டது.

திருவையாற்றுப் பகுதியில் இரணைமடுக் குளச் சூழலில் உள்ள 270 ஏக்கர் பரப்பளவில் 27 விவசாயி களுக்கு பகிர்ந்து வழங்கப் பட்டது. இதே போன்று இராமநாதன் கமம், புதுமுறிப்புக்குளம் என்பனவும் திட்டமிட்டு வழங்கப்பட்டது.



இவை தவிர 1966 இல் இரணைமடு நீர்ப்பாசனத்தின் கீழ் திருவையாறு படித்த வாலிபர் திட்டம் மூன்று கட்டங்களாக தெரிவு செய் யப்பட்டு 3 ஏக்கர் வீதம் 425 படித்த இளைஞர்களுக்கு 1275 ஏக்கர் நிலப்பரப்பும், திருவையாறு படித்த பெண்கள் குடியேற்றத் திட்டத்தில் 80 ஏக்கர் நிலப்பரப்பை 25 படித்த பெண்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டது. திருவையாறு குடியேற்றத் திட்டத் திற்கு நீர் வழங்கவென 1975ஆம் ஆண்டு நான்காவது தடவையாக இரணைமடுத்குளத்தின் அணைக்கட்டு உயர்த்தப்பட்டு நீர் கொள்ளளவு 106500 ஏக்கர் அடியாக உயர்த்தப் பட்டது.

இரணைமடு நீர்த்தேக் கத்திற்கு முக்கிய ஆறாக விள ங்கும் கனகராயன் ஆற்றின் வடி நிலத்தின் கழிமுகப் பகுதியான கிளிநொச்சிப் பகுதியில் இது காணப்படுகிறது இக்குளத்திற்கு 38840 மீற்றர் நீளமுடைய பிரதான வாய்க்கால்களும் 13860 கிளை வாய்க்கால்களுக்கும் 8370 மீற்றர் நீளமுள்ள பிரிவு கால்வாய்களும் 156540 மீற்றர் நீளமுடைய வயல் வாய்க்கால்களும் அமைக்கப் பட்டி ருக்கின்றன. இவற்றின் மூலமே 8352 ஹெக்டேயர் பரப்பிற்கு நீர்ப் பாசனம் செய்யப்படுகிறது. சிறு போக காலப்பகுதியில் மானாவாரி செய்கைபண்ணக் கூடிய நிலப் பரப்பை விட்டு நீர் பாய்ச்சக்கூடிய நிலப்பரப் புகளுக்கு மட் டும் நீர்ப்பாசனம் செய்யப் படுகிறது.

இவ் வாறான இரணைமடுக் குளம் நீர்த் தேக்கம் காலத்துக்கக் காலம் அணைக்கட்டுகள் உயர்த் தப்பட்டு வந்தாலும் இன் னும் பல குறைபாடுகள் இருந்து கொண்டே இருக்கிறது. அதாவது இரணை மடுக் குளக்கட்டின் கீழ் பக்கம் தலைகீழாக வடிகட்டி அமைக்கபபடல், அணைக்கட்டை உண்மையான மட்டத்துக்கு உயர்த் துதல் மற்றும் கண்டக்கல் தாங்கும் தூண்கள் கட்டுதல் அகற்றிச் செல் லப்பட்ட கடற்கற்களை மீளப்போடு தல் போன்றவற்றை உடனடியாகச் செய்ய வேண்டிய தேவையுள்ளது. என்பது குறிப்பிடத்தக்கது.

**எஸ். கே**

(சி.937A)

## சினிமா ஒரு இலக்கியமா?

ஒரு சமூகத்தின் அதன் சமகால வாழ் வியல் நடைமுறைகளின் படிமங்களை தாங்கி வருகின்ற பல கலைவடிவங்களாக வருகின்றமையே இலக்கியங்களாக இருந்து வந்துள்ளன. உதாரணமாக நாடகங்கள், பாடல்கள், சிறுகதைகள், கூத் துக்கள் போன்றவற்றை குறிப்பிடலாம். இவைகள் சமூக வாழ்வியல் முறைகளைப் படம் பிடித்து காட்டியதனால்தான் இலக் கியம் "காலத்தின் கண்ணாடி" எனப் படுகிறது. ஆனால் தற்போது "சினிமா" என் கின்ற கலைவடிவம் மேலே கூறப்பட்ட இலக்கி யத்திற்கு உரிய பண்புகளை எல்லாம் தகர்க் கும் வகையில் எம் சமுதாயத்தின் மத்தியில் அதிரடியாக பிரவேசித்திருப்பதானது ஆரோக்கியமான வரவாக கருதமுடியாது ள்ளது.

ஏனெனில் சினிமா என்பது சமூக கலாசார பண்பாட்டு வெளிப்பாடாக அமை வதிலும் பார்க்க தனக்கேயான ஒரு கலை வடி வத்தை உருவாக்கி சமுதாயத்தின் மீது புகுத்துவதற்கு முனைகின்றது. குறிப்பாக சொல்லப் போனால் அபரிமிதமான அல்லது மிகைப்படுத்தப்பட்ட கற்பனை களை கொண்டு இரசிகர்களை கவர முனைகின்றது "சினிமா" என்னும் கலை வடிவத்தை தயாரிக்க விளை பவர்கள், தமக்கான வருமானம் ஈட்டும் தொழிச்சாலையாக அதனை நோக்குவதால் தான் இன்றைய 'சினிமா' இலக்கியம் என்ற வரன் முறையின்றும் மீறி மாறுபட்டு நிற்கின்றது.

இவ்வாறாக இலக்கியப் பண்பில் இருந்து மாறுபட்டு நிற்கின்ற சினிமாவானது எம் சமுதாயத்தின் மத்தியில் ஏற்படுத்தி இருக்கின்ற தாக்கங்களை நோக்குவோ மாயின்

தான் கூறுகின்ற கருத்தை சமு தாயம் பின்பற்றும் படியாக செய்து விடு கின்றது (நன்மைகளை விட தீமைகளே அதிகம்) உதாரணத்துக்கு சொல்லப் போனால் இந்தியாவின் தற்போதைய அரசியல் நிலை நல்லதோர் உதாரணமாக காணப்படுகின்றது. சமுதாயத்தின் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டிய சினிமாவானது தன் நிலைவிட்டு மாறி சமுதாயத்தை புதிதாக உருவாக்கின்ற நிலையில் சென்று கொண்டு இருக்கின்றது இதனால் இன்றைய இந்தியாவின் அரசியலை தீர்மானிக் கின்ற சக்திகளில் சினி மாவும் முக்கிய பங்கு வகிக் கின்றது.



இந்தியா போன்ற வளர் முகநாடொன் றின் குடி சனங்கள் தங்கள் வாழ் வியல், எதிர் காலம் நாட்டு முன்னேற்றம் பொருளாதாரம் சுபீட்ச வாழ்வு என்ற அடிப்படையில் தமது அரசியல் பிரதிநிதிகளை தெரிவு செய்வதற்கு பதிலாக ரசிகத்தன்மை என்ற குறுகிய வட்டத்தில் சினிமா நடிகர்களின் கருத்துக்கு அமைவாக உணர்ச்சிவசப்பட்ட நிலையிலே தங்கள் எதிர்காலம் பற்றிய எந்த வகையான சிந்தனையையும் கவனத்தில் கொள்ளாது தங்கள் பிரதிநிதிகளை அரசியலுக்கு அனுப்பி வருகின்ற நிலையானது, இலக்கிய வரம்புக்குள் இருக்க வேண்டிய சினிமா வானது தடம் புரண்டுவிட்ட நிலையையே காட்டுகின்றது.

ஒவ்வொரு சமுதாயத்திற்கும் மொழி, பண்பாடு, கலாசாரம் என்பன தனித்துவமானதாகும். ஆனால் இன்றைய சினிமாவானது சமுதாய விழுமியங்களை விழுங்கி வருவது ஆரோக்கியமானதாக கருதமுடியாதுள்ளது. குறிப்பாக ஒரு இனத் தின் கலாசாரப் பண்பாட்டு சின்னமாக இருக்க வேண்டிய மொழி, உடை நாகரீகம் என்பவற்றை பாதிக்கின்ற வகையில் சினிமா தனது கருத்துக்களை பரப்பி வருவதானது. சமுதாயத்தின் நகலாக இருக்க வேண்டிய இலக்கியத்தின் அங்கமாக இருக்க முடியாத நிலைக்கு சினிமா தள்ளப்பட்டுள்ளது.

இளம் சமுதாயத்தை தன்னகத்தே கட்டி வைத்திருக்கின்ற சினிமாவானது அவர்களின் மனம் போகின்ற போக்கி லெல்லாம் தன் கருத்துக்களைப் பரப்பி இளம் சமூகத்தின் மத்தியில் விபரீதமான கற்பனைகள், உணர்வுகளை துண்டிவிட்டு வேடிக்கை பார்க்கின்றது.

உதாரணத்திற்கு யாழ் குடா நாட்டின் இளம் சமூகத்தில் குறிப்பிடத்தக் கானோரை எடுத்துக் கொள்ள லாம் இவர்கள் குறிப்பிட்ட சில நடிகர்களது. பெயர்களைத் தாங்கி குழு அமைத்து சமு தாயத்திற்கு ஒவ்வாத செயல்களில் ஈடுபட்டு வருவதானது சினிமா என்பது இலக்கியம் என்ற வின்முறைக்கு கட்டுப்படாமல் சென்று சமூகத்தை சீரழிக்கின்றது என்பதற்கு நல்ல தோர் உதாரணமாகும்.

ஆரம்ப காலத்தில் எடுக்கப்பட்ட சினிமாக்கள் சமுதாயத்தின் நிகழ் கால நிஜங் களாக இருந்து சமுதாயத்தை வழிப் படுத்துகின்ற நல்லதோர் கலை இலக்கியப் படைப்பாக இருந்தமை சிறந்ததோர் சினிமாவிற்கான ஆரம்பமாகக் கொள்ளப் பட்டாலும் காலப் போக்கில் சினிமாவை தொழிலாக கருதி போட்டி போட்டுக் கொண்டு சினிமாக்கள் திரைக்கு வந்தமையினால் சமுதாயத்தை மேவிய ஆரோக்கியமற்ற விடையங்கள் சமுதாயத்தை ஆட் கொண்ட மையானது. சினிமா நல்லதோர் கலை இலக்கியம் என்ற பண்பில் இருந்து விலக ஆரம்பித்தது என்றே கூறலாம்.

இவற்றை எல்லாம் ஒரு சேர நோக்கும் இடத்து ஒரு சமூகத்தின் கலை இலக்கியமானது சம கால வாழ்வியல் முறைகளை சித்தரிக்கின்ற அல்லது வழிப்படுத்துகின்ற நன் நோக்கோடு அமைந்து வந்தது கண்கூடு, ஆனால் இலக்கியம் என்ற போர் வையில் எம் சமூகத்தின் மத்தியில் புகுந்து கொண்ட சினிமா என்னும் கலைவடிவமானது. இலக்கியம் என்னும் வரையறையில் இருந்து மீறியதாக சமு தாயத்தை தன் பால் ஈர்த்து வருகின்ற நிலை யானது 'சினிமா' கலை இலக்கியம் என்னும் பண்பில் இருந்து விலகி நிற்பதையே காட்டுகின்றது.

இருந்த போதும் அவ்வப்போது ஒரு சில சினிமாக்கள் சமூகத்திற்கு நல்ல பல கருத்துக்களை வழங்கி வருவதும் ஏற்றுக் கொள்ளக் கூடிய உண்மையாகவே உள்ளது.


**முத்தையனூர் ப.துஸ்யந்தன்**

இன்பக்கலைகள் அனைத்தும், சுதந்திரத்தினால் ஊட்டம் பெறும் போதுதான்,வளர்ந்து வலுப் பெறுகின்றன. — யெஹ்றன் ப்ரிட்ரிகூஷ் சுஷில்லர்.

# இலக்கியப் பகிர்வு

சமீபகாலமாக யாழ்ப்பாணத்தில் வெளியீட்டு முயற்சிகளில் ஏற்பட்ட உத்வேகத்தின் மூலவிசையாக ஒரு சிலரே உள்ளனர், கவனத்திற்கு உரிய விடயமாகும்.

இரண்டு வருடங்கள் வந்து கொண்


நடுகை
மாசி - பங்குனி 2004
இருமாதக் கவிதை இதழ்
எல்லோருடனும்...
உத்தமன்

டிருக்கும் “ அம்பலம்” சமீபத்தில் வெளியான “ கூத்தரங்கம்” ஆகிய சஞ்சிகைகளின் வெளியீடுகளுடன் தொடர்புபட்ட இளம் படைப் பாளிகளே இப்போது

“நடுகை” என்ற இதழை வெளிக் கொண்டு வந்துள்ளனர். நடுகை என்ற இருமாதக் கவிதை இதழே அண்மைய புது இதழாகும். மாசி-பங்குனி 2004,காலப் பகுதிக்குரிய இந்த இதழில் ஆசிரியர்கள் த.பிரபாகரன், கு.லக்ஷ்மணன் ஆகியோராகும்.

இளம் படைப்பாளிகளை முதலில் ஈர்ப்பது கவிதை ஆகும், பத்திரிகை அலுவலகங்கள், ஏனைய வெளியீட்டு அலுவலகங்களில் கட்டுக் கட்டாகச் சேரும் கவிதைகளைக் கொண்டே இதனை கூறி விடலாம்.

ஆனால் அவ்வாறு வருபவைகள் எல்லாம் வசனங்களாகவோ, கூற்றுக் களாகவோ அமைந்துவிடும் ஆபத்தும் இருந்தாலும் படைப்பாளிகளின் உள்ளார்ந்தமான ஏக்கம், வீரம், வேகம், காதல், விரக்தி, மகிழ்ச்சி என்று எல்லாமே மெல்லிய துள்ளலுடன் வெளிப்படும்.


இவர்களே தொடர்ச்சியான வதைகள் மூலம் அல்லது சவுக்கடிகள் மூலம் பதப் படுத்தப்பட்டு நல்ல படைப்பாளிகளாக மாறுகின்றனர். எனவே ஆரம்பக் கவிதைகளை அல்லது வசனங்களை வைத்துக் கொண்டு படைப்பாளிகளை தூக்கி எறிந்து விட முடியாது.

சமகால இலக்கியச் சூழ்நிலையில் ஆரம்ப கவிஞர்களுக்கான களங்கள் மிகமிகக் குறைவு. பத்திரிகைகள், சஞ்சிகைகள், கவிதைகளின் தரம் என்ற பூதக் கண்ணாடியைப் போட்டுக் கொண்டு பார்ப்பதன் காரணத்தால் புதிய படைப்பாளிகளின் ஆரம்பக்கவிதைகள் அதில் எரிந்து போய் விடுகின்றன.

அப்படியானால் கவிதைகளின் தரம் வேண்டாமா என்ற கேள்விக்கு எங்கே பதிலைத் தேடுவதும்,தரம் தேவைதான், ஆனால் மெல்லிய துள்ளல் உடன் வரும் புதிய படைப்பாளிகளின் கவிதைகளுக்கு எங்கே களம் தேடுவது.

வாராந்த பத்திரிகைகளில் “கவிதை” என்ற தலைப்பில் வெளிவரும் படைப்புக்கள் பற்றி? என்ற நடுகையின் கேள்விக்கு கோகுல ராகவன் பதில் சொல்லுகையில் “இதில் எதைச் சொல்வது. எழுத வேண்டும் என்ற ஆசை, பிரசுரிக்க வேண்டிய வெற்றிடத் தேவை இரண்டும் பொருத்தி விடுவதே இவை வெளிவரக் காரணம் ஆகின்றது. எழுதுபவர்களும், பிரசுரிப்பவர்களும் பொறுப்புடன் செயற்பட்டால் நல்ல கவிதைகள் வெளிவர முடியும். இந்த இருவருக்கும் பொறுமை இல்லை-கவனமில்லை” என்கின்றார்..

இதில் உள்ள பிரதானமான அம்சம் என்ன வெனில் பத்திரிகைகளில் இவ்வாறான




கவிதைகள் பிரசுரிப்பதன் பிரதான அம்சம் அவற்றின் விற்பனை ரீதியிலானது.இதில் பத்திரிகைகள் விடும் தவறு யாதெனில் இவ்வாறான ஆரம்பக் கவிஞர்களை அடுத்த கட்ட நகர்வுக்கு கொண்டு செல்லாமையே.

உண்மையில் ஆரம்ப படைப்பாளிகளின் விளைநிலமாக, நாற்று மேடையாக அமையப் போவது எது? அதற்குரிய களம் எது? சிறிது எழுத்துப் பயிற்சி பெற்று தரமான சில கவிதைகளை எழுதும் படைப் பாளிகள் எல்லோருமே தம்பின்னால் நிற்பவர்களைக் கேலியாகப் பார்ப்பது வழக்கமாகிவிட்டது. வகுப்புகள் உயர உயரத்தான் புதிய பாடங்களைப் படிக்க முடியும். அப்படித்தான் படிக்கவும் வேண்டும். ஆகவே ஆரம்ப படிப்பு படிப்பவர்களை கேலியாகக் கருதமுடியாது.“முதலில்” எழுதும் “அ” கோணலாகத்தான் வரும்.

எனவே “நடுகை” போன்ற இதழ் களின் வருகை அவசியமானது. சில வருடங்களுக்கு முன்னர் “கவிதை” இதழ் இளம் படைப்பாளிகளுக்குக் காத்திரமான பணியைச் செய்தது.நாட்டுச் சூழ்நிலையில் அது நின்று போனது. எனினும் “ நடுகை” வந்தது மகிழ்ச்சியே.

“நடுகை” என்ற இந்த வயலில் தங்கள் கவிதைகளை நடுகை செய்யும்படி படைப்பாளிகள் கோரப்பட்டுள்ளனர். ஆனால் இளம் படைப்பாளிகளுக்கான வேண்டுகோளாக மட்டும் இந்த வேண்டுகோள் இல்லை.

உண்மையில் “நடுகை” தனது பார்வையை இளம் படைப்பாளிகள் மீது செலுத்துவது பொருத்தமானதும் காலத்தின் தேவையுமாகும். இது தொடர்பாக வெளியீட்டாளர்கள் அக்கறை கொண்டால் நல்லது. கவிதைக்கான இந்த இதழில் கவிதைகள் போதுமானதாக இல்லை. வெளியான பல விடயங்கள் சரித்திர நாடக பாத்திரங்கள் வாடகைக்கு எடுக்கும் உடைகள் போல ஏற்கனெவே பாவிக்கப்பட்டவையாக உள்ளன. நல்ல விடயங்கள் மீள் பிரசுரமானது தப்பில்லைத்தான் எனினும் முதல் இதழில் “கவிதைக்கான ஒரு காகித விதைப்பு” என்ற மகுடத்துடன் வெளியாகும் இதழ் இவ்வாறு அமையக் கூடாது.

இதற்கு வெளியீட்டாளர் களை பழி சொல்ல முடியாது.அவர்களது ஆர்வம் படைப்பாளிகளைத் தேடித் தேடி கலியாணப் புறோக்கர் போல அலையத்தான் முடியும். ஆனால் படைப்புக்கள் எவ்விதம் வரும். படைப்பாளிகள் மனம் கனி யாமல்.

தங்கள் ஆழ் மனத்தினை “நடுகை”ஆசிரியர் “எல்லோருடனும்” என்ற தலைப்பில் வெளிப் படுத்தியுள்ளார்கள். அதனைப் படைப்பாளிகள் விளங்கிக் கொண்டு செயற்பட்டால் நல்லதொரு இலக்கிய இதழாக “நடுகை” உருவாக வாய்ப்புண்டு. இல்லையேல் பத்தோடு பதினொன்றாகிவிடும் ஆபத்து உண்டு. அல்லது அகால மரணமாகிவிடும் கஷ்டமும் உண்டு

அவ்வாறான ஒரு நிலமை நடுகைக்கு வரக்கூடாது “நல்ல தொரு” கவிதை” இதழ் நின்றது போல “நடுகை”யும் மாறிவிடக் கூடாது.

அதைக் காத்துக் கொள்ள எல்லோரும் முனைய வேண்டும்.

இணுவையூர்
சிதம்பர திருச்செந்திநாதன்

## பழத்ததில் பிழத்தது

எனது வீட்டு விலாசம்
மாறிவிட்டது
நான் சாப்பிடும் நேரமும்
மாறிவிட்டது
எனது புகையிலையின் அளவும்
என்து ஆடையின் நிறமும்
எனது முகமும்
எனது தோற்றமும் கூட
மாறிவிட்டன.

இங்கு என்பிரிய
சந்திரன் கூட மாறிவிட்டது
மிகப் பெரிதாக,
‘மிக அழகாக
பூமியின் மணமும் மாறிவிட்டது
அத்தர் போல
இயற்கையின்
சுவையும் மாறிவிட்டது
இனிமையாக.

எனது பழைய வீட்டின்
கூரையின் மீது
நான் இருப்பது போலவே
இருப்பினும் கூட
ஓர் புதிய தாரகை
என் கண்களின்மீது
இறுகியுள்ளது.

## பொறுக்கி எடுத்த பூக்கள்

### புதுக்குறளும் - புதுமொழியும்

ஒரு பல் மருத்துவரின் சிகிச்சை நிலையத்தில் எழுதப்பட்டிருந்த ‘புதுக் குறள்’

“ யாகாவாராயினும் பல் காக்க காவாக்கால் சோகாப்பர் சொத்தைப் பல்லால”

ஒரு பேருந்து தரிப்பு நிலை யத்தில் எழுதப்பட்டிருந்த ‘புது மொழி’

“ஓடும் பஸ் ஓட நிற்கும் பஸ் வரும் வரைக்கும் வாடிநிற்பார் பிரயாணி”

### மொழிபற்றி...

ஒரு மொழி செம் மொழி ஆக்கப்பட வேண்டுமானால் பன்னிரு அம்சங்களில் அது தகுதியுடையதாக இருக்க வேண்டும் என வகைப்படுத்தியுள்ளார்கள் - அவையாவன...

தொன்மை, தனித்தன்மை, பொதுமைப்பண்பு, நடுநிலமை, தாய்மைத்தன்மை, பண்பாடு, கலை, பட்டறிவு, பிறமொழித்தாக்கமின்மை, இலக்கிய வளம், உயர்சிந்தனை, மொழியியல் கோட்பாடுகள் என்பனவாம் இவையனைத்தும் தமிழ் மொழிக்குண்டு.

மணவை முஸ்தபா

### சில ‘ஹைக்கூ’ கள்

I ஓயாமல் உழைத்த தந்தை
ஓய்வெடுக்கிறார்
முதியோர் இல்லத்தில

II நிழல் தரும் மரங்கள்
எப்படித் தாங்குமோ
வெய்யிலை...

III யார் சூட மலர்ந்திருக்கின்றன
விண்வெளித் தோட்டத்தில்
நட்சத்திரப் பூக்கள்

செல்வகாந்தன்

### பின் நவீனத்துவம் - ஒரு விளக்கம்

யதார்த்த வாதம் மற்றும் நவீனத்துவத்தைத் தொடர்ந்து வந்தது பின் நவீனத்துவம்.

பின் நவீனத்துவம் ஒரு உணர்தல் முறை; ஒரு மனநிலை, யதார்த்தம் மற்றும் நிச்சயத்தன்மையை இழந்து, நெகிழ்ச்சி கொண்டதாகவும், திரவநிலையினதாகவும் ஆகிவிடுகையில் உண்டாவது.

இதனடிப்படையில் சமூகவியல், அறிவியல், வரலாறு என எல்லாமே புனைவுதான்..

பின் நவீனத்துவத்தில் நிலையானதாக எதுவுமில்லை மையமென்று ஒன்று மில்லை.

கதைப்பின்னல், பாத்திரங்கள், மையக்கருத்து என்று எதுவுமில்லை...

சா.தேவதாஸ்

### ஒரு எழுத்தாளன்

“என்னுடைய மனைவி இறந்து போனால் அதன் பின்னர் நான் எழுதுவதை நிறுத்திவிடுவேன் என நான் முன்னர் சொன்னது உண்மைதான். ஆனால் அதை என்னால் கடைப்பிடிக்க முடியவில்லை, தொடர்ந்து எழுதாமலோ படிக்காமலோ இருந்தால் எனக்கு உடல் நலம் பாதித்து விடும். முடிந்தவரை எழுதிக் கொண்டிருக்க வேண்டும் என்பதே இப்போதைய என்னுடைய எண்ணமாகும்.”

‘குஷ்வந்த்சிங்’கூறியது

பொறுக்கி

சில்லறைக்காசை நீ காத்துக்கொள்: பெரிய காசு, தன்னைத்தானே காத்துக்கொள்ளும். - பெஞ்சமின் பிராங்க்ளின்.

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஞானம்சேர் எதுக்கெடுத்தாலும் தட்சணாரீச்சரைத்தான் கூப்பிடுவார் ரீச்சர்போக கதிர் ஏதோ சொன்னான். ரதனா வாயைப் பொத்திச் சிரித்துக்கொண்டு மேசையில் தலையைக் குற்றினாள்.

அன்றொரு வெள்ளிக்கிழமை - வழமைபோல் வைரவர் மணி ஐந்துமணிக்கு அடித்தது சரியான பனி அவன் இறுக்கிப் போர்த்துக்கொண்டு கிடந்தான். நேற்றுத்தான் பரீட்சை முடிந்தது.

தெருவில் சனங்கள்பெரிய சத்தத்தோடு ஓடிக்கொண்டு வந்தார்கள். பற்றைகளில் ஆமிக்காரர்கள் சத்தம்போடாமல் படுத்திருந்தார்கள். பால் கறக்கப்பட்டிக்குப் போன கதிர் தான் கண்டு முதலில் ஓடினான்.

இப்ப ஊரில் சனங்கள் எவருமில்லை. அவன் படித்தபள்ளிக்கூடம் ஒரு கோயிலுக்குப் பக்கத்தில் இயங்கியது. 'ரதனா ரீச்சர்' வவுனியாவுக்கும், 'டேவிற்' சேர் திருகோணமலைக்கும் போய்விட்டார்கள். சில சனங்கள் எங்கே என்று தெரியாது.

பரீட்சை முடிவுகள் வந்தன. கதிர் பள்ளிக்கூடத்துக்கு ஓடினான் அவளும் ஓடினாள். 'அவன்' மட்டும் தான் எல்லாப்பாடங்களிலும் 'டி' எடுத்திருந்தான் அவள் நினைக்க வில்லை அவன் அப்படி 'ரிசல்ற்' எடுப்பான் என்று.

அவன் 'ரிசல்ற்' பார்க்கவரவில்லை எங்கேயோ இடம் பெயர்ந்து போய்விட்டான் ஞானம்சேர் அவனைத் தேடினார். பெற்றார் ஆசிரியர் சங்கம் அவனுக்குப் பாராட்டு விழா வைக்க கூட்டம் கூடியது கதிரின் அப்பா கூட்டத்தைக் குழப்பிவிட்டார். அவன் இடம்பெயர்ந்த மாணவனாம் பத்திரிகையில் அவனின் படத்தைப் பிரசுரிக்க ரதனா காசுசேர்த்தாள். 'அவள்' கொடுக்கவில்லை.

அவள் முற்றத்தில் சோர்ந்தபடி இருந்தாள் அவளுக்குச் சரியான கவலை எல்லாப்பாடங்களிலும் 'டி' எடுக்கவில்லை என்று கதிர் கவலைப்படவில்லை சயனுக்கு 'டி' கிடைத்தது சந்தோசமாய் இருந்தது. கதிர் அவள் வீட்டுக்குப் போனான். ரொபியை நீட்டினான் அவள் சிரிக்கவில்லை ஒன்றை எடுத்தாள் கதிர் சேட் 'பொக்கற்' றுக்குள் கையை வைத்தான் அவனின் 'போட்டோ' இருந்தது எடுத்து அவளிடம் கொடுத்தான் கதிரின் போட்டோவாக நினைத்து வாங்கினாள்.

அவனின் போட்டோவைப் பார்த்ததும் முகம் இருண்டது. 'படக்' என்று கிழித்தாள். கசக்கிவிட்டு எறிந்தாள். கதிர் நினைக்கவில்லை அவள் அப்படிச் செய்வாள் என்று.

அந்தப் பத்திரிகையில் அவனின் படத்தைக் கண்டதும் கொஞ்சநேரம் அவள் அசையாமல் நின்றாள். அரைப்பக்கத்தில் அவனின் பெரிய படத்தைக் கண்டதும் அவன் பற்றிய பழைய நினைவுகள் எல்லாம் மனதில் மிதந்தபடி இருந்தன...

மறுபடியும் அவனைப்பார்த்தாள் முகத்தில் அதே சிரிப்பு... அந்தச் சிரிப்பு அவளை வசீகரித்தது. பேப்பரைக் கைகளில் இறுக்கிப் பிடித்தாள் வீட்டுக்குள் ஓடினாள் மேசையில் 'கத்திரிக்கோள்' இருந்தது எடுத்துப் படத்தை வடிவாகவெட்டினாள். கீழேயிருந்த வீரச்சாவு விபரத்தையும் சேர்த்து.

**கருணை ரவி**

## படத்திற்கு மெருகூட்டுங்கள் - 66



நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை கீழ் உள்ள வரிகளில் எழுதி அனுப்புங்கள். சிறந்த வரிகளுக்கு நினைவுப்பரிசு வழங்கப்படும்.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் - 66

.........................................................................

.........................................................................

.........................................................................

.........................................................................

பெயர் : ......................................................... ஈழநாதம்
முகவரி : ......................................................... யாழ்சாலை,
......................................................... கிளிநொச்சி.


நாடு நூராகவும் ஈழநாதத்தைப் பெறலாம் 2004

## ஈழநாதம் பத்திரிகை சந்தா விபரம்

| காலம் | வெள்ளிநாதம் | தினசரி | வெள்ளிநாதமும் தினசரியும் |
|---|---|---|---|
| 1/4 ஆண்டுக்கு | 300/= | 750/= | 975/= |
| 1/2 ஆண்டுக்கு | 550/= | 1400/= | 1850/= |
| ஆண்டுக்கு | 1000/= | 2650/= | 3600/= |

**தபால் மூலம் உங்களிற்கு பத்திரிகைகள் அனுப்பி வைக்கப்படும்**
**சந்தாதாரர்கள் தொடர்புகொள்ள வேண்டியமுகவரி**

பொதுமுகாமையாளர்,(ஈழநாதம்)
யாழ்.சர்லை,கிளிநொச்சி.


## படத்திற்கு மெருகூட்டுங்கள் - 65



க.இரத்தினசிங்கம்,
266,ஜெயந்திநகர்
கிளிநொச்சி.

### பரிசுக்குரிய வரிகள்

விளை நிலத்தின் விவசாயத் தலைமகனே
இளைப்பாறும் காலமதில் ஏனிந்த ஏக்கம் ஐயா
விலைபோகாத வீரத்தலைவன் காலமிது விரைவில் நாம்
உலகம் வியக்க உயர்ந்தோராய் வாழலாம் உண்மை இது

### பாராட்டுக்குரிய வரிகள்

தலைவணங்கா தமிழர் காலத்தில்
தனிமையில் குந்தியிருந்து தரையை பார்ப்பதேன்
தங்கத் தலைவன் காலம் உள்ளவரை
தமிழ் மக்கள் அனைவரும் உன் உறவுகளே.

ஜோ.தயானந்தி
சின்னப்பண்டிவிரிச்சான் மடு.

நாம் பிறந்து வளர்ந்த இடத்தை மீண்டும் பறி
கொடுக்கப் போகிறோம் என்று கவலையா. எம்
தானைத் தலைவன் அணியிலே உறவுகள்
போர் முனையில் கண் விழித்திருக்கின்றார்கள்.

து.சோபா,
இல.28,கணேசபுரம்-கிளிநொச்சி.

உழைக்கும் கரங்கள் இருந்து - உடம்பில்
உழைக்கும் வலுவிருந்து
உந்தனுக்கு உழைப்பில்லையா - கவலை விடு
நாளை மலரும் தமிழீழம் நமக்காக.

வ.வசந்தராஜ்
புளியங்குளம்

அறுபதிலும் அந்தரித்த வாழ்க்கையென - நீர்
அல்லலுற்று துவளுவது தெரிகிறது - ஆனால்
அண்ணன் காலத்தில் அனாதையென்றெவருமில்லை
அரவணைக்க அன்புச் சோலை இங்குண்டு.

சந்திரிக்கா - சிவதாஸ்
குருகுலம், கிளிநொச்சி.

பாரினில் வாழ்ந்த உன் உறவுகளை
பகைவனவன் அழித்தானோ அன்றி
பத்து மாதம் சுமந்து பெற்றெடுத்த உன்
பிள்ளைகளை செம்மணியில் புதைத்தானோ.

கா.சிறிவதனி
கிளிநொச்சி.

இந்தப் போட்டிக்கான நினைவுப்பரிசினை **அருச்சுனா புகைப்படக் கலையகயம்** வழங்குகின்றது.
புதுக்குடியிருப்பு கிளிநொச்சி.


# பணிநிலைவெற்றிடம்

**வன்னிப் பகுதியில் இயங்கிவரும் நிறுவனம் ஒன்றிற்கு கீழ்க்காணும் பணிநிலைகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

### கணக்காளர்

(பல்கலைக்கழகம் ஒன்றில் வணிகத்துறையில் பட்டம் பெற்றிருத்தல் வேண்டும். அல்லது க.பொ.த.(உயர்த ரத்தில் வர்த்தகப் பிரிவில் சித்தியுடன் 5 வருட அனுப வம்)

### கணக்குப் பதிவாளர்

(க.பொ. த.உயர்தரத்தில் வர்த்தகப் பிரிவில் சித்திய டைந்திருத்தல் வேண்டும்)

### வெளிக்கள அலுவலர்

க.பொ.த சாதாரண தரத்தில் சித்தியுடன் தொழில் அனுபவம் இருத்தல் வேண்டும்.

### சம்பளம்

நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

விண்ணப்பங்கள் யர்வும் வரும் 10.05.2004 திங்கட் கிழமைக்கிடையில் எமக்குக் கிடைக்கக் கூடியதாக விளம்பர இலக்கம் -9 ஈழநாதம் விளம்பரப்பணி மனை யாழ்.சாலை கிளிநொச்சி. என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.


குறிப்பு:-
உங்கள் தொடர்புகளுக்கான முகவரியை தெளிவாகக் குறிப்பிடவும்.

(9391)





## பதிப்புலக வேந்தர்களே!




இனி நீங்கள் உங்கள் தேவைகளுக்காய் அந்நிய மண்ணில் அலையவேண்டியதில்லை. மொழிச்சிக்கல், பாதுகாப்புப்பிரச்சனை, பிரயாணச்செலவு அதிகரிப்பு, அலைச்சல், போன்றவற்றால் சிரமப்படத் தேவையில்லை. உங்கள் தேவைகளை எங்கள் மண்ணிலே அறிமுகப்படுத்துவதில் பெருமையடைகின்றோம்.


தமிழீழப்பகுதியில் மாத்திரமன்றி இலங்கையிலேயே முதன் முதலில் கலர் பிரித்தல் (ROLER IMAGE SETTER) - COLOUR SEPARATION சேவையை அறிமுகப்படுத்துகின்றோம்.

- COLOUR SEPARATION SERVICE
  அனைத்து அளவுகளிலும் செய்து கொடுக்கப்படும்.
- 4X8 அளவுகளில் PCC கலர் பிறிண்ட் சேவை
  (4x8 SIZE PCC COLOUR DIGITAL PRINT)
- 4X8 அளவுகளில் COOL & HOT மென்காப்பிடுகை சேவை
  4x8 SIZE COOL & HOT LAMINATING SERVICE
- அழுத்திப் பதிதல் சேவை
  HOT IMPOSING (GOLD & SILVER PRINT SERVICE)
- கலண்டர் கிளிப்போடுதல்
  (SPIRAL CLIP & MATERIAL CLIP) SERVICE


இவை தவிர்ந்த எமது வழமையான சேவைகளான
புத்தகம்,போஸ்ரல்,வாழ்த்துமடல், அழைப்பிதழ்
என்பன வடிவமைத்து பதிப்புச்செய்து பெற்றுக்கொள்ளவும்
இன்றே நாடுங்கள் எங்கள் வாடிக்கையாளராகுங்கள்

# நிலா பதிப்பகம்

யாழ்சாலை, கிளிநொச்சி.




தொ.பேசி:
021-228 5935
தொ.நகல்:
021-228 5935



(சி-9392)



மீண்டும் வன்னியில் புதுப்பொலிவுடன்

# குமரகுரு

புடைவை
அழகுப்பொருள்
வாணிபம்





உங்கள்
இன்றைய
தெரிவுக்கு



இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட
அதி நவீன ஆடைகளை உள்ளடக்கிய திருமணம் மற்றும் மங்கள
நிகழ்வுகளுக்கான காஞ்சிபுரம் சாறிகள்
பட்டுசாறிகள் பட்டுவேட்டிகள் மற்றும் சல்வார் சோலிகிற் சூட் கவுண்
சேட் சூட்டிங் மற்றும் பெரியோர்கள் சிறியோர்களுக்கான
ஆடைகளை மொத்தமாகவும்
சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள உடன் நாடுங்கள்

**குமரகுரு** புடைவை அழகுப்பொருள் வாணிபம்
யாழ்சாலை, கிளிநொச்சி

(சி9536)

KUMARAKURU
*Textile & Fancy House*
Yarl Road, Kilinochchi.





# EXPOAIR

your friend in the skies

எக்ஸ்போ எயார்



யாழ்-கொழும்பு பயணத்தின் போது
ரோல்ஸ் ரோய்ஸ் இயந்திரத்தின்
சொகுசுப் பயணத்தினை அனுபவியுங்கள்.

ஒதுக்கீடுகளுக்கு
அழையுங்கள்
021-2223891/6297, 0772348888/2349999,
0114512666, 0112360290/291.
e-mail- jaffna@expoavi.com
e-mail- reservations@expoavi.com

இலங்கையில் முன்னணி வகிக்கும் நம்பத்தகுந்த உள்ளூர் விமான சேவை


இப் பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 30 ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.